வெளியீடு : 21-02-2007

Issued : 21-02-2007

717
29.3.2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூலை 31, 2006—தொகுதி 5—எண் 4

Monday the 31st July, 2006—Volume 5—No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

31-7-2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 389-390 |
| **2. இரங்கல் தீர்மானம்—** | |
| பஹ்ரைன் தீ விபத்தால் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் | 390 |
| **3. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| பஹ்ரைன் தீ விபத்தால் உயிரிழந்த தமிழர்களுக்கு நிதியுதவி-மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 391 |
| **4. அறிவிப்பு—** | |
| வினாக்களுக்கான விடைகளைத் துறைகள் அனுப்புவது | 392 |
| **5. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்—** | 392-534 |
| திரு. ஜி.கே. மணி | 392-418 |
| திரு. டி. சுதர்சனம் | 418-434 |
| *செல்வி ஜெ ஜெயலலிதா | 422, 435-437, 438, 439, 441, 443-456, 458-470, 474-482, 484-490, 493-506 |


53-288—1

| | பக்கங்கள் |
|---|---|
| **5. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்—** தொடர்ச்சி | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 439, 441, 445-446, 449-450, 453-459, 463, 468, 476-481, 489, 494-495, 497, 504, 506-534 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 534 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 15, விய—திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜூலை 31, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

அரிய செயல்களை, அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்துமுடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவர்களாவார்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்பு

## முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள், 29-7-2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள், ஸ்ரீரங்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1972 முதல் 1978 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் போற்றத்தக்கவகையில் பணியாற்றி யுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித் துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித் துளிகள் அமைதிகாத்தனர்.)*

## 2. இரங்கல் தீர்மானம்

### பஹ்ரைன் தீ விபத்தால் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானம். "அரபு நாடுகளில் ஒன்றான பஹ்ரைன் நாட்டின் தலைநகர் மனாமாவில், 30–7–2006 அன்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் தமிழ்நாட்டிலுள்ள கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் போன்ற மாவட்டங்களைச் சார்ந்த 16 தமிழர்கள் உயிரிழந்தது குறித்தும், எண்பதுக்கும் மேற்பட்டோர் தீயில் சிக்கி படுகாயம் அடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இக்கொடிய தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு, இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவிப்பதோடு, உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும், பேரவை ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறது."

மேலும், இவ்விபத்தில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்கள் விரைவில் நலமடைய வேண்டும் என்ற விழைவைப் பேரவை சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரு மணித் துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித் துளிகள் அமைதிகாத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

ஆவணக் காப்பகம்
227383
600 008



## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### பஹ்ரைன் தீ விபத்தால் உயிரிழந்த தமிழர்களுக்கு நிதியுதவி–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளைகுடா பகுதியிலுள்ள சிறிய நாடான பஹ்ரைனில் ஏராளமான இந்தியர்கள் வேலை செய்து வருகிறார்கள். அந்த நாட்டில் Royal Towers என்ற கட்டுமான நிறுவனத்தில், 300–க்கும் மேலான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் குடாபியா என்ற இடத்திலிருக்கும் தொழிலாளர் முகாமிலுள்ள மூன்று மாடிக் கட்டடத்தில் தங்க வைக்கப் பட்டிருந்தார்கள். இந்தியத் தொழிலாளர்கள் அனைவரும் நேற்று அதிகாலை, இந்திய நேரப்படி ஐந்து மணிக்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது, திடீரெனத் தீப்பிடித்தது. இந்தத் தீ விபத்தில் 16 தமிழர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்கள். உயிரிழந்தோரின் சடலங்களைத் தாயகத்திற்குக் கொண்டுவரத் தேவையான விரைவான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. கட்டடத் தொழிலாளர்களாகச் சென்று, கொடிய இந்தத் தீ விபத்திலே சிக்குண்டு உயிரிழந்தோர், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை இந்த மாமன்றத்தோடு இணைந்து தெரிவிப்பதோடு, உயிரிழந்த தமிழ்நாட்டைச் சார்ந்த ஏழைக் கட்டடத் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்குத் தலா இரண்டு இலட்சம் ரூபாய்வீதம் அரசின் சார்பில் நிதியுதவி செய்யப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 9–35*

## 4. அறிவிப்பு

### வினாக்களுக்கான விடைகளைத் துறைகள் அனுப்புவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் கொடுத்துள்ள வினாக்கள் அனுமதிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை போதிய விடைகள் சட்டமன்றச் செயலகத்திற்கு வந்து சேரவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், விடைகளை, 3–8–2006–க்குள் சட்டமன்றச் செயலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு அனுப்பத் தவறினால், அதற்குரிய காரணத்தை என்னுடைய அறையில் வந்து நேரில் விளக்கம் அளிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அறிக்கை வாசித்துக் கொண்டிருக்கும் போது, எழுந்து நிற்கிறீர்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) நான் வாசித்துக்கொண்டு இருக்கிறேன் இல்லையா? உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) அனுமதி மறுக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் முதலிலே.

## 5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** 2006–2007 ஆம் ஆண்டுக்காக உவந்தளிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தின்கீழ் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு (குறுக்கீடு) நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சிலவற்றை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழன் வாழ்ந்தால் தட்டிக் கொடு,
தமிழ் இனம் வீழ்ந்தால் முட்டுக் கொடு;
தாய் வளர்த்து நாம் வளர்ந்தோம்;
தமிழ் வளர்த்து நாம் வாழ்வோம்'

என்ற அந்த உயரிய கூற்றுக்கு இணங்க, இன்று நெறி பிறழாது தமிழ்நாட்டைக் கட்டிக் காக்கிற பணியிலேயும் அந்த நெறி பிறழாத பணிக்கு, அறத்திற்குக் கிடைத்த வெற்றியாக, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்று, இந்த மாமன்றத்தில் அமர்ந்த உடனே மிகப் பெரிய, எல்லோரும் வரவேற்கக்கூடிய, முத்தான நிதிநிலை அறிக்கையை உவந்தளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு உறுதுணையாக இருந்து, இந்த மன்றத்தில் வாசித்தளித்த நம்முடைய பேராசிரியர் அவர்களுக்கும் முதலிலேயே நான் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான், முழுவதும் படித்துப் பார்த்தேன். 84 பக்கங்களைக் கொண்டிருக்கிறது; 188 பத்திகளைக் கொண்டிருக்கிறது. இதை முழுவதையும் படித்தது மட்டுமல்லாமல், இங்கே அறையிலே அமர்ந்து படித்தாலும்கூட, படிக்கப் படிக்க இனிமையாக, எல்லாத் தரப்பு மக்களின் நலனையும் கருத்தில்கொண்ட, ஒரு நல்ல அறிக்கையாக இருக்கிறது. இதை எண்ணிப்பார்க்கிற நேரத்தில், நாம் மலர்களைச் சொல்கிறோம்; முல்லைக்கென்று மணம் இருக்கிறது; மல்லிகைக்கு மணம் இருக்கிறது; சாமந்திக்கு மணம் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு மலருக்கும் தனியாக மணம் இருக்கிறது. இந்த மலர்களையெல்லாம் ஒன்றாக இணைத்தால், எல்லா மணமும் சேர்ந்த நறுமணம் கமழும். ஆகவே, எல்லாத் தரப்பு மக்களுக்குமான நிதிநிலை அறிக்கை என்றவகையில், இது எல்லா மலர்களும் ஒருங்கிணைந்த நறுமணம் கமழும் மகத்தான மாலையாக இருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற நிதிநிலை அறிக்கை, பாராட்டக்கூடியது. ஏதோ

பாராட்டுகின்றவகையில், ஏதோ எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற நிலையிலே இதை இட்டுக்கட்டிச் சொல்பவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இதைப் படித்துப் பார்ப்பார்கள் என்று சொன்னால், பாராட்டுவார்கள். அதை நானும் பாராட்டுகின்ற வேளையில், காரண காரியங்களோடு சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

வரலாற்றில், மனிதன் பிறந்து வாழ்ந்து மறைகின்ற காலத்தில், யாரும் புகழோடு நிலைத்து நிற்பதில்லை. அப்படிப் புகழோடு நிலைத்து நிற்கக்கூடியவர்கள், உலக அளவில், இந்திய அளவில், தமிழ்நாட்டு அளவில் சிலபேர் இருந்தாலும்கூட, ஒரு சிலரையே நாம் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். இந்த மண்ணிலேயும், இந்தியத் திருநாட்டிலும் நிறைய பேர் இருந்தாலும்கூட, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் இராஜாஜி, அண்ணல் காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, அன்னை இந்திரா காந்தி போன்றவர்களெல்லாம், பாராட்டத்தக்கவகையிலே நம்முடைய மனதில் நிலைத்த இடத்தைப் பெற்றிருப்பதைப்போல, இன்று தமிழாய்ந்த தலைமகன், தமிழர்களின் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எல்லோருடைய நெஞ்சங்களிலும் நிலைத்திருப்பார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்குச் சில ஆதாரங்களை நான் சான்றுகளோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 9–40*

புறநானூற்றுப் பாடல்களிலே, திருக்குறளிலே, பாரதிதாசன் கவிதைகளிலே எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் படித்துப்பார்த்த நேரத்தில், இவை நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்காகவே முன்பு எழுதியிருப்பார்களோ என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது. அதிலும், குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், பாண்டிய மன்னன் அறிவுடைநம்பிக்குப் புறநானூற்றுப் புலவன் பிசிராந்தையார் குறிப்பிட்டுச் சொல்கிறார்:

'காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே'

என்று சொல்லிவிட்டு, அது ஒரு 11 அடிகளைக் கொண்ட பாடல். அதிலே, 2 அடிகளை மட்டும் நான் சொல்கிறேன்:

'காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே' என்ற பாடலிலே,



'அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்'—

இது எதைக் குறிப்பிடுகிறது என்று சொன்னால், இங்கே தாங்கள் அறிவுடைய வேந்தனாக இருக்கின்ற காரணத்தால்தான்,

"நெறியறிந்து கொண்டு,
கோடி யாத்து, நாடு நலம் பெறச் செய்தீர்";

நல்ல வரவு–செலவுத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பொருளை ஆழமாக உற்றுநோக்குவோம் என்று சொன்னால், அதிலே நமக்கு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிய பொருள் முழுவதுமாக விளங்குகிறது. அதையே பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன் குறிப்பிடுகின்ற நேரத்தில்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று அழகாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்.

அதைப்போலவே, புறநானூற்றுப் பாடலில், மதுரை சங்ககவி மருதன் இளநாகனார் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார். ஓர் அரசன் எப்படி இருக்கவேண்டுமென்று சொன்னால், தன்னுடைய யானைப் படை, குதிரைப் படை, தேர்ப் படை, காலாட் படை இவற்றையெல்லாம் கொண்டிருந்தாலும்கூட, அவற்றையெல்லாம்விட, அறநெறி அறிந்து, அரசாட்சி செய்வதே, கோலோச்சுவதே சாலச் சிறந்தது என்றும், ஒரு நல்ல அரசன், நீதி வழுவாத அரசன், நன்மக்களைக் காப்பாற்றக்கூடிய நல்ல திட்டங்களைச் செயலாற்றுவான் என்றும் சொல்கின்ற நேரத்தில், அவர் குறிப்பிடுவது;

'கடுஞ்சினத்த கொல்களிறும்; கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடிய நிமிர்தேரும்; நெஞ்சுஉடைய புகல்மறவரும்என
நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட
அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்'.

ஆகவே, இவற்றையெல்லாம்விட சாலப் பொருந்திய, நீதி வழுவாத, அறம் தவறாத அரசாட்சி செய்கிற, அந்த அறநெறி தவறாத அரசனுக்கு மாபெரும் வெற்றி கிட்டும் என்று சொல்கிறார். ஆகவே, கடந்த ஆட்சிக் காலத்திலே பல்வேறு கொடுங்கோல் நிகழ்வுகள் எல்லாம் நடந்த

காரணத்தினாலேதான், அந்தக் கொடுங்கோல் ஆட்சி (குறுக்கீடுகள்) அப்புறப்படுத்தப்பட்டு, இன்று அறம் நிலைநாட்டக்கூடிய வகையிலே, (குறுக்கீடுகள்) தலைவர் கலைஞர் அவர்களுக்கு, அறத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே நான் இங்கே கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு நான் ஆதாரம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அந்த ஆட்சியைப்பற்றி, (குறுக்கீடுகள்) நான் கடந்த ஆட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு, சில ஆதாரங்களை நான் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) அந்த ஐந்தாண்டுக் காலம் இதே சட்டமன்றத்தில், முதலமைச்சர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. O.P.S., உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தைக்கு நான் ஆதாரம் சொல்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டுக் காலத்தில், முன்னாள் முதலமைச்சர் அவர்களை, அமைச்சர்களை எல்லாம், அன்றைய அமைச்சர்களையெல்லாம் வைத்துக் கொண்டு சொன்னேன். அந்த ஐந்தாண்டுக் காலத்தில்— "இன்னா நாற்பது; இனியவை நாற்பது" என்று சொல்வார்கள்; அந்தவகையில், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில்— "இன்னா செய்தவை நாற்பது, இனியவை செய்யத் தவறியது நாற்பது" என்பதைப் பட்டியல் போட்டு, தமிழ்நாடு முழுவதும் சொன்னோம்.

அந்த "இன்னா" என்னென்ன தெரியுமா? மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வந்தது; பிறகு அந்தர் பல்டி. ஆடு, கோழி பலியிடத் தடை, மூன்று ஆண்டுகள் இலவச வேட்டி சேலை இரத்து. இப்படி... (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ஏன் சொன்னேன் என்பதற்காக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள் போக விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவருக்குச் சொன்னேன் நான். என்னென்ன தவறுகள் நடந்தன என்பதற்காக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தை மாத்திரம் சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9–45*

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இப்படி ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தமிழனுக்காக, தமிழ்நாட்டிற்காக, தமிழுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு பாடலை, நம்முடைய புரட்சிக் கவிஞன் சுப்புரத்தினம் அவர்கள், பாரதிதாசன் குறிப்பிட்டுச் சொல்கிறார். இது பொருத்தமானதாக இருக்கும் என்று அவர்களும், அ.தி.மு.க.–வினரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பொருளைப் பார்க்கின்ற நேரத்தில்.

'தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் கீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ் மக்கள்,
தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!
தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!
தமிழனுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை.'

ஆகவே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே, தமிழுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற நீங்கள், தமிழர்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற தாங்கள், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற தாங்கள், நீண்ட ஆயுளோடு நெடுநாள் வாழ வேண்டுமென்று சொல்லி, தமிழர்களின் சார்பிலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அளவிற்கு உயர்வான, பாராட்டுதலுக்குரிய ஒரு நிதிநிலை அறிக்கை. பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாராட்டுவதைக் காரணத்தோடு சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நல்ல நிதிநிலை அறிக்கை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையாற்றுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உரையாற்றுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னொன்றையும் சொல்கிறேன். யாரும் பாராட்டக்கூடியது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதிகாக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** இது பதின்மூன்றாவது சட்டமன்றம். 13 தேர்தல்கள் நடந்திருக்கின்றன. இந்த 13 தேர்தல்களில், 1952–ல் தலைவர் கலைஞர் போட்டியிடவில்லை; 1984–ல் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்; இரண்டும் போக, 11 முறை போட்டியிட்டுள்ளார்; 11 முறையும் வெற்றிபெற்ற மகத்தான தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழ்நாட்டிலே நிலைத்த வரலாறு இல்லையா? ஐந்து முறை முதலமைச்சரானது தமிழ்நாட்டில் வரலாறு இல்லையா? யார் தமிழ்நாட்டில் சாதனை படைத்தவர்கள்; இந்த நிலைக்கு எட்டியவர்கள்? இது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்திய திருநாட்டிற்கும் மிகப் பெரிய பேறு; வழிகாட்டியாக இருக்கிற தலைவர் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதை நான் சொல்லவில்லை. எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே, இந்த அளவிற்கு மகத்தான தலைவராக இருக்கிற கலைஞர் அவர்கள், ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிற காரணத்தினாலேதான், இது நாட்டு மக்கள் போற்றக்கூடியவகையிலே இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லுகிறேன்.

இன்னொன்று, கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. சென்னை மாநகரத்திற்கு மேயர். ஜனநாயக முறைப்படி மாநகராட்சித் தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருடைய பணி, அர்ப்பணிப்புணர்வோடு இருந்தது. இது பசுமை நகரமாக மாற வேண்டும்; எங்கு பார்த்தாலும் பாலங்களாக இருக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்கள். அதைப் பார்த்துப் பொறுக்க முடியாதவர்கள், இந்த மாநகராட்சி மேயர் பதவியைப் பறிக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்த நேரத்திலே, இங்கே வீற்றிருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் பேரியக்கத்தைச் சார்ந்தவர்கள், நாங்கள் எல்லாரும் எதிர்த்தோம். இது கடுமையான சட்டம், இது கருப்புச் சட்டம், ஜனநாயகத்தைப் படுகுழியிலே புதைக்கிற சட்டம், இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று சொன்னோம்.



நிறைவேற்றினார்கள். அவர் வெளிநாட்டிற்குப் போகப் போகிறார், வெளிநாட்டிற்குச் செல்லக்கூடாது என்பதற்காக, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் எல்லாம் வெளிநாடு செல்லக்கூடாது என்பதற்காக ஒரு சட்டம். இது எவ்வளவு பெரிய ஜனநாயக விரோதச் சட்டம் என்பதை எண்ணிப் பார்க்கிறது நாடு. ஆகவே, அப்படி மாநகராட்சி மேயர் பதவியைப் பறித்தாலும், இன்று தமிழகத்திலே இருக்கிற 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் 600–க்கு மேற்பட்ட சிறப்பு ஊராட்சிகள், 12,618 ஊராட்சிகள், ஆக ஒட்டுமொத்த உள்ளாட்சிகளையும் நிர்வகிக்கின்ற மகத்தான பதவியை, மாண்புமிகு மேயராக இருந்த, உள்ளாட்சித் துறை அமைச்சர், போற்றுதலுக்குரிய தளபதி ஸ்டாலின் அவர்கள் இங்கே பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பணி எப்படி இருக்கிறது? பதவியேற்றார். அவரும் மற்ற அமைச்சர்கள் எல்லோரும்—இப்போது மூன்று மாதங்கள்கூட முடியவில்லை, இரண்டரை மாதங்கள் முடிந்திருக்கின்றன. —அவர் சொல்கிறார்; எல்லா மாவட்டங்களுக்கும் சென்று வந்தேன் என்று. மற்ற அமைச்சர்களும் சொல்கிறார்கள், 27 மாவட்டங்களுக்குப் போய்விட்டு வந்தோம்; 28 மாவட்டங்களுக்குப் போய்விட்டு வந்தோம்; ஆய்வு செய்தோம் என்று. யார் யாரை வைத்து? சட்டமன்ற உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை, அதிகாரிகளை. உள்ளாட்சிப் பிரதிநிதிகளை வைத்து. எல்லா அமைச்சர்களுமே. எவ்வளவு சிறந்த நிர்வாகத் திறன்? ஆகவே, இந்த அளவிற்கு ஒரு நல்ல ஆட்சி, தமிழ்நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9–50

அதுமட்டுமல்ல; விவசாயிகள் கடன் முழுவதும் தள்ளுபடி. சரி, இந்தத் தள்ளுபடி திட்டத்தைத் தமிழ்நாட்டு விவசாயிகளும், எல்லோரும் பாராட்டுகிறார்கள். சிலர் இதையும் கிண்டல் செய்கிறார்கள். நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன், தமிழ்நாட்டிலே விவசாயிகள் வறட்சி, வெள்ளச் சேதம் போன்ற சொல்லமுடியாத துயரச் சம்பவத்தில் இருந்த நேரத்தில், விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே பேசினோம். ஆனால், முடியாது என்று ஆட்சியாளர்களால் சொல்லப்பட்டது. அது முடியாது என்று நம்முடைய அகராதியில் இருக்கக்கூடாது; மக்கள் நலன் என்று சொன்னால், அதைச் செய்தே தீருவேன் என்று சொல்லி, தேர்தல் நேரத்திலே அறிவித்த கலைஞர் அவர்கள். இது 2001 ஆம் ஆண்டு வரையிலே கடன் பெற்றவர்களுக்கு மட்டும் தள்ளுபடி என்று

சொல்லவில்லை—எண்ணிப் பார்க்க வேண்டும்; 2001 ஆம் ஆண்டு வரையிலே கடன் பெற்றவர்களுக்கு மட்டும் விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்று சொல்லவில்லை—தேர்தல் காலம் வரையிலே, 2006 வரையிலே தள்ளுபடி என்று சொன்னார்கள். 2001 ஆம் ஆண்டிலிருந்து, 2006 ஆம் ஆண்டு வரைக்கும் கூட்டுறவு வங்கிகளிலே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற்றவர்கள் அதிகம் பேர் யார்? அ.தி.மு.க.–வினர் (குறுக்கீடுகள்) இதை இங்கிருப்பவர்கள் மறுக்கலாம். (குறுக்கீடுகள்) ஆட்சி! இது இயல்பு. ஆகவே, தயவுசெய்து சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் எழுந்து நிற்கக் கூடாது, உட்காருங்கள். கருத்தைச் சொல்லவேண்டுமென்றால், கையை உயர்த்துங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள், முதலில். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. விசுவநாதன், உட்காருங்கள். திரு. பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியில், தமிழ்நாடு முழுவதும் பல மாவட்டங்களுக்குச் சென்று வந்தேன். அங்கேயிருக்கிற அ.தி.மு.க. நண்பர்களைப் பார்த்துக் கேட்டேன். "நீங்கள் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறீர்கள்? எவ்வளவு தள்ளுபடி?" என்று கேட்டேன். "எனக்கு ஒன்றரை இலட்சங்க; இரண்டு இலட்சங்க; இரண்டரை இலட்சம் எனக்குத் தள்ளுபடி ஆகியிருக்கிறது" என்று சொல்கிறார்கள். "இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டேன். "நாங்களெல்லாம் கடன்பட்டு, வாழ்வதா, சாவதா என்று ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், எங்களுடைய.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. விசுவநாதன், திரு. வைத்தியலிங்கம் ஆகியோர், அவையின் நடவடிக்கைகளுக்கு அடிக்கடி இடையூறு செய்வதைத் தவிர்க்க வேண்டும். மீறினால் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் சொன்னார்கள், "எங்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறார்" என்று. (குறுக்கீடுகள்) சரி, இவ்வளவு கோடி கடனிலே—நீங்கள் வேண்டுமென்றால்



புள்ளிவிவரத்தோடு சொல்லுங்கள்—அ.தி.மு.க.–வில் இருக்கிற உறுப்பினர்கள், அ.தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள் பலன் பெறவில்லையா? எல்லோரும் சொல்கிறார்களே, கிராமத்திலே! ஆகவே, நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் குறை சொல்வதாக இருந்தாலுங்கூட, இந்த விவசாயிகள் கடன் தள்ளுபடித் திட்டத்தைத் தயவுசெய்து குறை சொல்லாதீர்கள். அப்படிச் சொல்வீர்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டு விவசாயிகள், வாக்களித்தவர்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கட்டாயம் சொல்கிறேன். நான் இதற்குமேலே அதிகமான அளவுக்குப் போக விரும்பவில்லை.

அதேநேரத்திலே, ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம். சாதாரண கிராமத்திலே இருக்கிற தேநீர் கடைக்குப் போகிறோம். அங்கே தேநீர், இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய். பெரிய நகரங்களிலே 3 ரூபாய், 4 ரூபாய், தேநீர் விலை. தவிடு கேட்டீர்களென்றால், 4 ரூபாய், நாலரை ரூபாய், ஒரு கிலோ தவிடு விலை. ஆனால், இந்தச் சூழ்நிலையில், இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிற்கு, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய திட்டம்? இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். நிறைய எழுதி வைத்திருக்கிறேன், இந்த அறிவிப்பிலே இருப்பதை, நிதிநிலை அறிக்கையிலே. ஆகவே, இப்படி மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஒரு கோப்பை தேநீர் குடிப்பதை நிறுத்தினால், ஒருவேளை சாப்பாடு, குடும்பத்தில் எல்லோருக்கும். அவ்வளவு நல்ல திட்டத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். இதைப்போல நிறைய திட்டங்கள் வந்திருக்கின்றன.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிபற்றிச் சொன்னார்கள். நாங்களெல்லாம் அந்தக் குழுவிலே அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டு, அதுவும் ஒப்பந்தப்புள்ளி கோரி, ஒளிவு மறைவில்லாமல், திறந்த வெளியிலே வெளிப்படையாக, யாரும் குறை சொல்லாத அளவிற்கு, அந்த ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரி, அதை வெளிப்படையாக அறிவித்து, மிகக் குறைவான விலையிலே, இலவச மின்சாரத்தோடு, இன்னும் எல்லா இணைப்புகளையும் பெறக்கூடிய வகையிலே, ஒரு நல்ல திட்டத்தை வழங்கியிருக்கிறீர்கள். இப்படிப் படிக்கப் படிக்க நிறைய சொல்லிக் கொண்டேயிருக்கலாம்; நேரமில்லை. நிறைய பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படி நல்ல திட்டத்தைக் கொண்டுவந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நெஞ்சார நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9–55*

*அடுத்து, நம்முடைய காவிரிப் பிரச்சினை, மிக முக்கியமான பிரச்சினை. இந்தக் காவிரிப் பிரச்சினை நமக்குப் பாதிப்பை உண்டாக்கிய நேரத்தில், 1990–ல், காவிரி நடுவர் மன்றத்தைக் கொண்டுவந்த பெருமை, தலைவர் கலைஞர் அவர்களே, உங்களுக்கே உரித்தாகும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் காலத்தில் கொண்டு வரப்பட்டது. 6 ஆம் தேதி, அதனுடைய காலக்கெடு நிறைவு பெறுகிறது. அதனுடைய தீர்ப்பு வர இருக்கிறது. தீர்ப்பு வரக்கூடிய காலமும் தங்கள் காலமே! கொண்டு வந்தவர்களும் தாங்களே! தீர்ப்பும் தங்கள் காலத்திலே வர இருக்கிறது. ஆனால், தீர்ப்பு வரக்கூடிய காலத்தில், நல்ல தீர்ப்பாக வரவேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த நடுவர் நீதிமன்றம் அமைத்த நேரத்தில், நம்முடைய தமிழ்நாட்டின் சார்பில் கேட்கப்பட்டது 305* T.M.C. *ஆனால், வழங்கப்பட்டது 205* T.M.C. *இந்த 205* T.M.C. *முழுமையாகக் கிடைத்ததா? இல்லை. 1998, 1999 இரண்டு ஆண்டுகளிலும், இந்த ஆண்டும் கிடைத்திருக்கிறது. இந்த 3 ஆண்டுகளைத் தவிர 205* T.M.C. *மற்ற ஆண்டுகளிலே கிடைக்கவில்லை. இந்த 3 ஆண்டுகளிலும் கடுமையான வெள்ளம் வந்த காரணத்தினாலே, மழையினாலே கிடைத்ததே தவிர, மற்ற நாட்களில் இல்லை. ஆனால் இதற்கு ஒரு நல்ல நிலை உருவாக வேண்டுமென்று, 1998–லே அன்றைய பிரதமராக திரு. வாஜ்பாய் அவர்கள் இருந்த நேரத்திலே, இங்கே காவிரி நதிநீர் ஆணையம் கொண்டுவரப்பட்டது. அந்த ஆணையக் குழுவிலே 4 மாநில முதலமைச்சர்கள். அதற்கு அதிகாரம் இருந்ததா? இல்லையென்பதற்குச் சான்று, அது 37 முறை கூடியிருக்கிறது, அப்படி 37 முறை கூடிய பிறகும் ஒரு நல்ல தீர்வை நாம் எட்டவில்லை, மிக பாதிப்பாகவே இருக்கிறது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட விடமாட்டோம் என்று சொன்ன காலத்தையெல்லாம் நாம் பார்த்தோம், கர்நாடகாவிலிருந்து.*

*இதே இந்தியாவில் பக்ராநங்கல் திட்டம் இருக்கிறது. அந்த பக்ராநங்கல் திட்டத்திற்கும், அங்கே ஒரு நதிநீர் ஆணையம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இன்றையவரையிலே, தொடர்ந்து அந்த பக்ராநங்கல் நதிநீர் ஆணையம்தான் அந்த அணையைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இந்த மாநிலங்களுக்கிடையே இருக்கிற பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வுகளை உண்டாக்கக்கூடியவகையில் மாநிலங்களுக்குத் தண்ணீரைப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தவகையில், பக்ராநங்கல் நதிநீர் ஆணையத்தைப்போல, இந்தக் காவிரி*



*நதிநீர் ஆணையத்தினுடைய தீர்ப்பு, நல்ல தீர்ப்பாக வழங்கப்படவேண்டும். பக்ராநங்கல் ஆணையக் குழுவிலே, முதலமைச்சர்கள், அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் இல்லை. தொழில்நுட்ப வல்லுநர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். விருப்பு வெறுப்பு இல்லாமல் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதிலேயும் நல்ல தீர்ப்பாக, நமக்குரிய பங்கு கிடைக்கின்றவகையிலே, முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேவேளையில், தோழமைக் கட்சிகளாக, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற நாம், நமக்கு அதிலே அக்கறை இல்லையென்ற நிலையில் இல்லாமல், முதலமைச்சர் அவர்களின் நிலைபாட்டிற்கு இம்மியளவும் பிசகில்லாமல், எல்லா நிலைகளிலும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

*அடுத்து, மிக முக்கியமானது. இன்று நாடெங்கும் தனியார்மயம், தாராளமயம் மற்றும் உலகமயம் ஆகிவரக்கூடிய சூழ்நிலை. படித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு, வேலையே கிடைப்பதில்லை. அரசுப் பணிகள் அரிதாகிவிட்டன. அதிலும், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், வேலை நியமனத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து, தமிழ்நாட்டிலே வேலைவாய்ப்பே இல்லாத ஒருநிலை, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்டது. ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலையில், நீங்கள் 3 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, இந்தத் தனியார் நிறுவனங்களில், இட ஒதுக்கீடு திட்டம் வந்தால்தான், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சிறுபான்மையினருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதை மத்திய அரசினுடைய குறைந்தபட்ச செயல் திட்டத்திலே சேர்த்த பெருமை, தங்களுக்கு இருக்கிறது. நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், கடந்த சில தினங்களுக்கு முன்பு, இந்தியத் தொழில் கூட்டமைப்பினுடைய தலைவர் சேஷசாயி, அனில் அகர்வால் போன்றவர்கள் எல்லாம் பிரதமரைச் சந்தித்து, "இங்கே தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வேண்டாம்; நாங்களாகக் கொடுத்துவிடுகிறோம்; அந்தச் சட்டம் வேண்டாம்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை நிறுத்தப் பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிற்கு, சமூக நீதிக்கு அடித்தளமிட்டவர், இந்தியாவிற்கு வழிகாட்டியவர் தந்தை பெரியார். பெரியாருக்குப் பிறகு தமிழ்நாட்டிலே, இந்தியத் திருநாட்டிலே மரியாதைக்குரிய வி.பி. சிங், எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர்*

ஐயா அவர்கள் எல்லாம் சமூக நீதிக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தாலும்கூட, சமூக நீதியினுடைய பிறப்பிடத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பவர், எல்லா நிலைகளிலும் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருப்பவர், அதற்கு மெருகூட்டிக் கொண்டிருப்பவர், அதை அமலாக்கி, நிறைவேற்றிக் கொண்டிருக்கிற மகத்தான முதலமைச்சர், முதலிடத்திலே இருப்பவர் தாங்கள் என்பதை இங்கே நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், இது உங்களால் முடியும்.

மத்திய அரசினுடைய உயர் கல்வி நிறுவனங்களிலே 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வேண்டுமென்பதற்கு இந்தியாவிற்கு வழிகாட்டியாக இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினீர்கள். பிரதமரிடத்திலே, கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களிடத்திலே பேசி, அதை விரைவிலே நிறைவேற்றியிருக்கிறீர்கள். இந்தியச் சரித்திரத்திலே, தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே, நல்ல இடத்தை, முதல் இடத்தைப் பெற்றிருக்கின்ற தாங்கள், சமூக நீதிக்கு மேலும் பெருமை சேர்க்கின்றவகையில், இந்தத் தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டைக் கொண்டுவருவதற்குத் தாங்கள்தான் முயற்சிக்க வேண்டும்; அது தங்கள் காலத்திலே நிறைவேற வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இந்த மாமன்றத்திலே அதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் மீரா குமார் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். அதைக் குறைந்தபட்ச செயல் திட்டத்திலே சேர்த்து இருக்கிறீர்கள். அதிலே இருப்பது தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கு என்று இருக்கிறது. ஆனால், எல்லோரும் போற்றக்கூடிய வகையில், இந்தியத் திருநாட்டிலே இருக்கிற தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு என்பது, தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் என்று பொருந்தக்கூடியவகையில், அதைக் கொண்டு வரவேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–00*

அதேவேளையில், தமிழ்நாட்டிலேயும் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வேண்டும். மராட்டிய மண்ணிலே இன்றைய ஆளுநராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே அவர்கள் அங்கே கொண்டுவந்தார்கள். அதற்காக, தமிழ்நாட்டிலே நாங்கள் எல்லாம்கூட அவருக்குப் பாராட்டு விழா எடுத்தோம். ஆகவே,



அந்தவகையில், நீங்கள் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு கொண்டு வருவதற்கு வழிவகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இந்தச் சமூகநீதிப் பிரச்சினையிலே, இட ஒதுக்கீட்டிலே, மேலும் சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். இதையே கடந்த ஐந்து ஆண்டுகளாக, இதே சட்டமன்றத்திலே நான் வலியுறுத்திப் பேசினேன். வலியுறுத்திப் பேசியதற்கு ஒரு பதிலும் இல்லை. சமூக நீதிக்கான முன்னேற்றம், ஒரு விழுக்காடு அல்லது 0.1 விழுக்காடுகூட, தமிழ்நாட்டில் இல்லை. ஆனால், சமூக நீதிக்காக வித்திட்டவர் தாங்கள் என்ற காரணத்தினாலேதான், நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பிற்படுத்தப்பட்ட வகுப்பு இருக்கிற அந்த 30 விழுக்காட்டில், எல்லாச் சமுதாயத்திற்கும் உரிய பங்கு கிடைக்கின்றவகையில்—கொங்கு வேளாள கவுண்டர், ரெட்டியார், முதலியார், செட்டியார், நாயுடு என எல்லாருமே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே, 90 ஜாதிக்கு மேலே இருக்கிறார்கள்; உரிய பங்கு கிடைக்கும்வகையில்—இந்தத் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையைத் தாங்கள் கொண்டுவர வேண்டும். அண்டை மாநிலம் கர்நாடகம், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலே இது இருந்து கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த இட ஒதுக்கீட்டிலே creamy layer முறை இருக்கிறது. அது ஒழிக்கப்பட வேண்டும். கொண்டுவரக் கூடாது. நுழையவே விடக் கூடாது. அது நுழையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதேநேரத்திலே, இப்போது தாழ்த்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாரும் தகுதியானவர்கள். குழந்தைகளின் கல்வியிலே, மதிப்பெண் விகிதாச்சாரத்தைப் பார்க்கிறபோது, தாழ்த்தப்பட்ட குழந்தைகளும் அதிகம் மதிப்பெண் பெறுகிறார்கள். தகுதி, திறமை என்பது எல்லாச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும். தகுதி, திறமை என்பது எல்லோருக்கும் இருக்கின்ற காரணத்தினாலே, அரசுப் பதவிகளிலே பதவி உயர்விலேயும் இட ஒதுக்கீட்டு முறை கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மாணவர்கள் முன்னேற வேண்டும். தாங்கள் அவர்களுடைய கனவை நனவாக்கினீர்கள். தங்கள் ஆட்சிக் காலத்தில்தான், தொழில் கல்வி நிறுவனங்களில், கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று 15 விழுக்காடு இடத்தைக் கொடுத்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புற

மாணவர்கள் எல்லாம் உயர் கல்வி பெற்றார்கள். காசு இருந்தால்தான் படிக்கலாம்; கல்வி கடைச் சரக்காக விற்கிறது; கிராமத்துக்காரன் படிக்க முடியாது; அதற்காக வலியுறுத்தினீர்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே அது 25 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, யாரோ தூண்டிவிட்டு, நீதிமன்றத்திற்குச் சென்று, அது இந்த மாநிலத்திலே இல்லாமல் அற்றுப் போய்விட்டது. ஆகவே, தாங்கள் முதலமைச்சராக இருக்கிற இந்த நேரத்திலே, அதை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இட ஒதுக்கீடு என்பது சிறப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டிலே சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் தேவை. தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாச் சாதிச் சங்கங்களும் கேட்டுக் கொண்டிருக்கின்றன; வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றன; ஆகவே, சாதிவாரி கணக்கெடுப்பு செய்வதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எல்லோருக்கும் இட ஒதுக்கீடு. இன்றைக்குக் கல்வியிலே, வேலைவாய்ப்பிலே மிகச் சொற்ப அளவிலே இருக்கக்கூடியவர்கள் இஸ்லாமியர்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிறீர்கள்; சிறுபான்மை மக்களாக இருக்கிற இஸ்லாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று. இதை மக்கள் வரவேற்கிறார்கள். ஆகவே, இஸ்லாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் கிடைக்கக்கூடிய அந்த இட ஒதுக்கீட்டை விரைவாகக் கொண்டுவர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

அடுத்து, விவசாயிகளுக்கு நிறைய செய்திருக்கிறீர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே. விவசாயிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். நெல்லுக்கு, கரும்புக்கு இங்கே விலை கிடைக்கிறது. அதேநேரத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய காய்கறிகளுக்கு, பழங்களுக்கு, விலை கிடைக்க வேண்டுமென்றும், உழவர் சந்தை திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அது எப்படிக் கொண்டுவரப்பட்டது என்பது ஒரு பெரிய வரலாறு. எனக்குச் சொல்ல நேரம் இல்லை. கடந்த ஆட்சிக் காலத்திலே மாண்புமிகு



கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், கொண்டுவரப்பட்டது. இதே மன்றத்தில் நான்தான் பேசினேன். அப்பொழுது வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்கள். அவரும் சொன்னார், முதலமைச்சரும் சொன்னார்கள். ஒரு குழு போட்டார்கள், கேட்ட நேரத்திலே. இந்தியா முழுவதும் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொன்னார்கள். நானும் அந்தக் குழுவிலே இருந்து, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் சென்று வந்தோம். சென்னை விமான நிலையத்திலே வந்து இறங்கினோம். அந்தக் குழுவிலுள்ள நாங்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்திலே, மாலை தொலைபேசியிலே பேசுகிறோம். 'இந்த மாநிலங்களிலேயெல்லாம் இப்படி இருக்கிறது' என்று சொன்னோம். 'என்ன பெயர்?' என்றார்கள். அந்தப் பெயரைச் சொன்னோம். 'Raitha bazaar' என்றோம். 'Raitha bazaar என்றால் என்ன?' என்று கேட்டார். 'Raitha என்றால், விவசாயிகள்; bazaar என்றால், கடைகள்' என்று சொன்னோம். இதுதான் சொன்னோம். 'காலையிலே 10 மணிக்கு முதலமைச்சர் அலுவலகத்திற்கு வாருங்கள், குழு எல்லாம்; கலந்து பேசுவோம்' என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நாங்களெல்லாம் போய்விட்டோம். வந்த களைப்பிலே தூங்கி, 6–1/2 மணிக்கு எழுந்து, 'தினத்தந்தி' தாளைப் பார்த்தோம். தமிழ்நாட்டில் 100 இடங்களில் உழவர் சந்தை திறக்கப்படும் என்ற மகத்தான அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள்மேல் இருந்த அக்கறையினாலே, இந்த உழவர் சந்தை வந்தது. கடந்த இடைக்காலத்திலே ஐந்தாண்டுக் காலம் உழவர் சந்தை காணாமல் போய்விட்டது. இப்போது மீண்டும் வந்திருக்கிறது; வரவேற்கிறோம், விவசாயிகள் சார்பாக.

அதேமாதிரி ராகி, சோளம், கம்பு மற்றும் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எல்லாப் பொருள்களுக்கும் உரிய விலை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி, வெள்ளச் சேதம் எல்லாம் வருகின்றன. அப்பொழுது நிவாரணத்திற்கு நிதி இல்லை, தேடுகிறோம். அவற்றையெல்லாம் சரி செய்வதற்காக, மத்திய அரசுகூட நிதி வைத்திருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய மாநிலத்திலேயும் வறட்சி, வெள்ளச் சேதம் போன்ற நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக ஒரு நிதியம் உருவாக்கப்பட வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, சந்தை இடர்ப்பாடுகளைச் சமாளிக்கும் நிதி—Market Risk Mobilisation Fund—என்று, மத்திய அரசாங்கத்திலே இப்பொழுது புதிதாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். தக்காளி, வெங்காயம் போன்ற அழுகும் பொருள்களுக்கெல்லாம் சில நேரங்களிலே விலை கிடைப்பதில்லை. எல்லா விவசாயிகளும் கொண்டுபோய் கொட்டுகிறார்கள். விலை இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். அந்தநேரத்தில், அவர்களைப் பாதுகாக்க நிவாரணம் கொடுக்க அதற்கும் ஒரு நிதியத்தை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த ஆட்சியை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலவச மின்சாரம் மறுபடியும் கொடுத்துவிட்டீர்கள். இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் பாராட்டுகிறார்கள். அதேபோல, விவசாயிகள் கிணறு வெட்டி, மின் இணைப்புக் கிடைக்காமல், 10 வருடம், 15 வருடங்களாக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலை துவங்க வேண்டுமென்று சொன்னால், அரசு மின்னிணைப்பு உடனடியாக வழங்குகிறது, வரி விலக்கு அளிக்கிறது. மற்ற தொழில்களுக்கு அரசு முக்கியத்துவம் வழங்குகிற அதேவேளையில், விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள், விவசாயத்தையே ஆதாரத் தொழிலாகக் கொண்டிருக்கிற, முதல் தொழிலாகக் கொண்டிருக்கிற அந்த விவசாயி, கிணறு வெட்டிவிட்டு, oil engine வைத்துக்கொண்டு, மிகவும் கஷ்டப்படுகிறான். Diesel விலையால் முடியவில்லை. Diesel engine-ஐ வைத்து, விவசாயம் செய்வது மிகக் கடினமாக இருக்கின்ற காரணத்தால், விவசாயத் தொழிலுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய வகையில், விவசாயி கிணறு வெட்டி, மின்னிணைப்பு வேண்டி விண்ணப்பித்தால், உடனடியாக அது கிடைக்கக்கூடியவகையில், வழிவகை செய்ய வேண்டும். பக்கத்திலே இருக்கக்கூடிய கர்நாடகத்திலே மின்சாரப் பற்றாக்குறை; அங்கேகூட அந்த மாதிரி கொடுக்கிறார்கள். ஆகவே, அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று தங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்து இருக்கிற பெரிய தொழில் நெசவு. நெசவாளர்கள் கனவிலும்கூட காணவில்லை. விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கியதுபோலவே, இலவச மின்சாரம், நெசவாளர்களுக்கும் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள். இது நடக்காது என்றுதான் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நடக்காது என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் முகத்தில் கரியைப் பூசக்கூடியவகையில், (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் தந்த பெருமை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உண்டு, இந்த அரசுக்கு



உண்டு. ஆகவே இலவச மின்சாரத்தை வழங்கி இருக்கிறீர்கள். அது பெரிய தொழில். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. Point of order ஒன்றும் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இன்றைக்குத் தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கிறது. வேலைவாய்ப்பு இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அனுமதி மறுக்கிறேன். அனுமதி மறுக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய வகையில், இன்று பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், திரு. சேகர்பாபு, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தமிழ்நாடு பிரபலம் பெற்றிருக்கிறது. ஆகவே, இந்த நெசவுத் தொழில் இல்லாத மாவட்டங்களில், எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்து நெசவுத் தொழிலில் மற்றவர்களையும் ஈடுபட செய்கின்றபொழுது, வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவிற்குக் குறையும். ஆகவே, நெசவுத் தொழிலை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டும். அந்தவகையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு நெசவுத் தொழிற் பூங்கா அமைக்க வேண்டும் என்று இந்த அரசையும், முதலமைச்சர் அவர்களையும் நான் வற்புறுத்தி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இது மிக முக்கியமானது.

*முற்பகல் 10–10*

அதேமாதிரி, எங்கள் மருத்துவர் ஐயா சொல்வார்; வறுமை ஒழிப்பு, கல்வி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை வேண்டுமென்று—தொண்டையில்கூட கொஞ்சம் வலி—இப்போது கல்விக்கு நீங்கள் செய்திருக்கிறீர்கள். தனியார் கல்வி நிறுவனங்களிலே என்ன தேவை? இன்றைக்குப் பல்லாயிரம் இடங்களைப் பெற்றுத் தந்திருக்கிறீர்கள். பொறியியல் கல்லூரிகளிலே, 65, 35 விகிதாச்சாரம், தனியார் கல்வி நிறுவனங்களிலே அரசு ஒதுக்கீடு, நிர்வாக ஒதுக்கீடு;

அதேபோல மருத்துவக் கல்லூரிகளிலே கொண்டு வந்திருக்கிறீர்கள், வரவேற்கிறோம்; கல்வியிலே செய்திருக்கிறீர்கள். அதேபோல வறுமை ஒழிப்புக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று; தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களும் சமச்சீர் வளர்ச்சி பெறவில்லை. சில மாவட்டங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதேபோல, எல்லா மாவட்டங்களும் வளர்ச்சி பெறவேண்டும். கல்வியிலே, வேலைவாய்ப்பிலே, குடியிருப்பிலே, போக்குவரத்திலே, தொழிலிலே எல்லாவற்றிலும் வளர வேண்டும். சில மாவட்டங்கள் பின்தங்கி இருக்கின்றன. மத்திய திட்டக் குழுவிலே பின்தங்கிய மாவட்டங்களின் முன்னேற்றத்திற்குத் தாராளமாக நிதியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பின்தங்கிய மாவட்டங்களைக் கண்டறிவதற்கு, நம்முடைய ஆட்சியிலே அதிகாரிகளிடத்திலே, அரசிடத்திலே உரிய புள்ளிவிவரங்கள் இல்லை.

இப்போது, தமிழ்நாட்டினுடைய பின்தங்கிய மாவட்டம் தருமபுரி. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலே 5 மாவட்டங்கள் உள்ளன; அவற்றில் தருமபுரி மாவட்டம் இல்லை. பின்தங்கிய மாவட்டம், அதிலே சேர்க்கப்படவேயில்லை. இந்தப் புள்ளிவிவரங்கள் உரியவகையிலே இல்லாத காரணத்தால்தான் பின்தங்கிய மாவட்டங்களுக்கான முன்னேற்றத்திற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தப் பின்தங்கிய மாவட்டங்களைக் கண்டறிந்து அந்த மாவட்டங்களுடைய மேம்பாட்டிற்கு நீங்கள் கூடுதல் நிதியை, மத்திய அரசிடமிருந்து பெற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர்கள் நிரம்ப சிரமப்படுகிறார்கள். அன்றாட நிகழ்வுகளை அவ்வப்போது நாட்டிற்கு எடுத்துச் சொல்லக்கூடியவர்கள் பத்திரிகையாளர்கள். அவர்களுக்குச் சலுகை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, பத்திரிகையாளர் நல வாரியம் ஒன்று தொடங்கப்பட வேண்டும். அதேநேரத்தில், அவர்களுக்கு ஓய்வூதியம் கூடுதலாக வழங்க வேண்டும். வீட்டு மனைகளை வழங்க வேண்டும். நகரங்களில் மட்டுமல்லாமல், மாவட்டத் தலைமையிடத்திலே இருக்கக்கூடியவர்களுக்கும், வட்டத் தலைமையிடத்திலே இருக்கக்கூடியவர்களுக்குங்கூட, அவர்கள் பேருந்திலே பயணம் செய்வதற்கு, பயண இசைவுச் சீட்டு—pass—கொடுக்கிறீர்கள். அந்த மாவட்டத்திற்குட்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகப்



பேருந்துகளிலேதான் அவர்கள் போக வேண்டும் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் பயணம் செய்யக்கூடியவகையிலே, அந்தப் பயண இசைவுச் சீட்டு—pass—வழங்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கையைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காமராஜர் பிறந்த தினம். கடந்த ஐந்து வருடங்களாகச் சட்டமன்றத்திலே பேசினோம். நாங்கள் நிறைய கொண்டு வந்திருக்கிறோம்; கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தோம்; தனிநபர் தீர்மானம் கொடுத்தோம்; காமராஜரைப் பற்றிப் பெருமையாகச் சொல்லி, அதைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டோம். கடந்த ஆட்சியிலே கொண்டுவரப் படவில்லை. ஆனால், வரலாற்றில் நிலைப்பவர்களுக்கு, வரலாற்றிலே நிலைத்த இடத்தைக் கிடைக்கச் செய்தவர் கலைஞர் என்ற காரணத்தால், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காமராஜர் பிறந்த தினத்தைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தீர்கள். எவ்வளவு பெருமை பாருங்கள். இதெல்லாம் வரலாற்று நிகழ்வுகள்.

அடுத்து, வேலூர் சிப்பாய்ப் புரட்சி. அதுபற்றிப் பாடத்திலே இடம் பெறப்போகிறது. இதெல்லாம் வரலாற்று நிகழ்வுகள். வரலாற்று நிகழ்வுகளை யாரால் ஏறெடுத்துப் பார்க்க முடியும்; நிலைநாட்டச் செய்ய முடியும் என்று சொன்னால், வரலாற்றிலே நிலைத்திருப்பவர்களாலேதான், இதைச் செய்ய முடியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வரலாற்றிலே நிலைத்திருப்பவர், மக்கள் நெஞ்சங்களிலே நிலைத்திருப்பவர் கலைஞர் என்ற காரணத்தாலே அதைச் செய்து கொண்டிருக்கிறார்.

இன்னொன்றை நாங்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். சமூகநீதிக்கு வித்திட்டவர் தந்தை பெரியார். பெரியார் பிறந்த தினத்தைச் சமூகநீதி நாளாக அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து சொல்கிறோம். சமூகநீதிக்கு, தந்தை பெரியாருக்குப் பிறகு, இன்று இந்தியாவிற்கு வழிகாட்டிக் கொண்டிருப்பவர் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆகவே, அந்தச் சமூகநீதி நாளாக— தந்தை பெரியார் பிறந்த நாளையும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளையும் சமூகநீதி நாளாக—அறிவிக்க வேண்டுமென்று நான் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே இந்த அரசை வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேகூட நிறைய பேசப்பட்டது, தலித் மக்கள் பற்றி. மத்திய அரசாங்கத்திலிருந்து வழங்கக்கூடிய இந்தச் சிறப்புக் கூறுத் திட்டம் - Special Component Plan - என்று சொல்கிறார்கள். அது கடந்த ஐந்தாண்டுகளில் முறையாகச் செலவிடப்படவில்லை என்று பலராலே இந்த மன்றத்திலே பேசப்பட்டது. ஆகவே, தலித் மக்களின் முன்னேற்றத்திற்காக இருக்கிற அந்தத் திட்டத்திலே கூடுதல் நிதி பெறவேண்டும், அதை முறையாகச் செலவழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

அடுத்து, குடிசைமாற்று வாரியம் இருக்கிறது. இது மாநகராட்சிப் பகுதிகளில் மட்டும் செயல்படுகின்றது. தாத்தா காலத்திலே, அப்பா கால்த்திலே, மகன் காலத்திலே என்று மூன்று தலைமுறையாக, கூரை வீட்டைத் தவிர வேறு எதுவுமே பார்க்காத குடும்பங்கள், தமிழ்நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. அதிலும் மழை பெய்தால் ஒழுகுகிறது. சில நேரங்களில் தீ பிடிக்கிறது. ஆகவே அதையெல்லாம் போக்கக்கூடிய வகையில் அந்தக் குடிசை மாற்றுத் திட்டத்தை, கிராமப்புறங்களிலும் விரிவாக்கவேண்டும். அங்கேயும் குடிசை வீடுகளே இல்லாத ஒரு நிலையை உருவாக்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, வரி விலக்கு நிறைய கேட்டார்கள். வரியே இல்லாத வரவு-செலவுத் திட்டத்தைக் கொடுத்திருக்கின்றீர்கள். நாடே பாராட்டுகிறது. அரிசி, பருப்புக்கு வரி விலக்கு. ஆனால் இன்னும் கேட்கிறார்கள். அந்தப் பருப்பிலிருந்து வருவதுதான் மாவு. ஆகவே, மாவுக்கும் வரி விலக்கு வேண்டும்; வறுகடலை, அதேபோல, கரும்பிலிருந்து தயாரிக்கக்கூடிய வெல்லத்திற்கும் வரி விலக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நுகர்வோரிடமிருந்து ஒரு கோரிக்கை மனு வந்திருக்கிறது. உணவு விடுதிகளில், உணவுப் பொருட்களின் விலைகளெல்லாம், இட்லி, சாப்பாடு, தோசை, தேநீர் போன்றவற்றின் விலைகளெல்லாம் கூடிக்கொண்டே போகின்றன; இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதைப்போல, அரிசி, பருப்பு மற்ற உணவுப் பொருட்களைக் கடைகளில் விற்பனை செய்கின்றபோது, கூடுதலான விலை இருக்கிறது;



வரியெல்லாம் குறைக்கப்பட்டிருக்கிறது; வரி குறைப்புக்கேற்ப, பொருட்களின் விலையையும் குறைக்க வேண்டும் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கோரிக்கையையும் நுகர்வோர் சங்கத்திலிருந்து வைத்திருக்கின்றார்கள். உணவுப் பொருட்களில் நிறைய கலப்படம் இருக்கிறது; அந்தக் கலப்படத்திற்கு அதிகாரிகளே உறுதுணையாக இருக்கின்றார்கள் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யக்கூடியவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கக்கூடியவகையில், தண்டம் விதிக்கக்கூடியவகையில், நீங்கள் அதிகாரிகளை முடுக்கிவிடவேண்டும். அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சில கோரிக்கைகள், முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த அரசுக்கு. தமிழ்நாட்டில் இடைநிலை ஆசிரியர்களையெல்லாம் பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்கிறோம். அதைப்போல, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இளங்கலைப் பட்டதாரி ஆசிரியர்கள், B.Ed., ஆசிரியர்கள் இவர்களெல்லாம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள். எல்லோரும் கேட்கிறார்கள்; தேர்தல் நேரத்திலே சொன்னீர்கள்; கருணையுள்ளம் தங்களிடம் இருக்கிறது; ஆகவே, பதிவு மூப்பு அடிப்படையில் அவர்களை நீங்கள் தேர்வு செய்யவேண்டும். அவர்களெல்லாம் 15, 20 ஆண்டுகள், படித்துவிட்டு சும்மா இருக்கிறார்கள். இன்னும் பார்த்தோமென்றால், மாமியே படித்துவிட்டு, வேலைக்குப் போகவில்லை, வந்த மருமகள் B.Ed. முடித்துவிட்டு, வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாள். குடும்பத்தில் பிரச்சினை இருக்கிறது. இதில் ஒரு குறை இருப்பதாக அறிகிறேன். என்ன குறை என்றால், அன்றைக்குப் படித்தார்கள்; இன்றைக்குப் பாடத்தில் அவர்களுக்குப் புலமை இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தாலும்கூட, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு என்றவகையிலே, அவர்களைப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யவேண்டும். இரண்டு, மூன்று மாதங்கள் பணியிடைப் பயிற்சியை—Inservice training-ஐ—அவர்களுக்குக் கொடுக்கலாம். அந்தவகையில் அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இடைநிலை ஆசிரியர் பயிற்சி; கடந்தகாலத்திலே கொண்டுவரப்பட்டது. அதில் பயிற்சி பெற்றார்களா, இல்லையா என்று

தெரியாது. இல்லாமலேயே பல்லாயிரம் பேர் பயிற்சி முடித்ததாகச் சான்று வழங்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு மேலோங்கி, அவர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அதற்குப் பிறகு அன்றைய முதலமைச்சராக இருந்த, கலைஞர் அவர்களும், அன்றைய கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களும், ஒரு குழுவை அமைத்து அதற்கு வழிவகுத்தார்கள். வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். ஆகவே வாழ்விழந்தவர்களை எல்லாம் வாழவைக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித் தொடர்ந்து நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதில் 45 விழுக்காடுக்குக் குறைவாக மதிப்பெண் இருக்கின்றவர்களுக்கு வேலை இல்லையென்று இடையிலே ஆணை போட்டு 750 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நீங்கள் மறுவாழ்வு கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கிராம ஊராட்சி எழுத்தர்களுக்கு ஊதியம் குறைவு. அவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கவேண்டும். சத்துணவு, ஊட்டச்சத்து, அங்கன்வாடி பணியாளர்கள் குறைந்த ஊதியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வழிவகை செய்யவேண்டும்.

அதைப்போல, மின்சார வாரியத்தில், சர்க்கரை ஆலைகளில், இன்னும் போக்குவரத்துக் கழகங்களில் நீண்டகாலமாக, தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டும். ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் சாதாரண, கிராமங்களில் இருக்கின்ற ஏழைகள் எல்லாம் 5 ஆயிரம், 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினார்கள். அவையெல்லாம் இன்றைக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் என்று வந்துவிட்டது; வட்டி, அபராத வட்டி என்று வந்துவிட்டது. இப்போது ஜப்தி நடவடிக்கை என்று சிலபேர் வந்திருக்கிறார்கள். அதுகுறித்து 50 பேர் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த ஜப்தி நடவடிக்கையைக் கைவிடச் செய்யவேண்டும். அவர்கள் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். தங்களுக்கு மனம் இருக்கிறது; செய்வீர்கள் என்று நம்புகிறோம். இல்லையென்று சொன்னால், வட்டியையாவது தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்காக ரூபாய் 10 ஆயிரத்திற்கும்கீழ் வழங்கப்பட்டுள்ள கடன்கள், 362 கோடி ரூபாய் என்று கண்டறியப்பட்டு இருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றிச் சொல்லி இருக்கின்றீர்கள். ஆகவே, அதை விரைந்து நிறைவேற்ற வேண்டும். முதற்கட்ட நிதியையாவது ஒதுக்க வேண்டும் என்று தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்திலே, மிகவும் வறண்ட, பின்தங்கிய, அந்த மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு, அங்கு ஒரு தொழிற்சாலைகூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர் மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களும், தருமபுரியிலே ஒரு தொழிற்பேட்டை கொண்டு வர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அதுபோல, அந்த மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திற்கு நிறைய செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அந்த மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியும் வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக் கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. 1971–லே ஜனவரி மாதம் கலைஞர் அவர்களால், அங்கே நடிப்புத் துறை கொண்டு வரப்பட்டது. அந்த நடிப்புத் துறையிலே பயின்றவர்கள், இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் நிறைய பேர் இருக்கிறார்கள். இன்று தமிழ்த் திரையுலகத்திலே உச்சாணிக் கொம்பிலே

இருப்பவர்கள் என்று சொல்கின்றவர்கள் நிறைய பேர் அங்கே படித்தவர்கள்தான். நமது நெப்போலியன்கூட அங்கேதான் படித்திருக்கிறார். நிறைய பேர். ஆனால் அதற்குப் பிறகு, 2001–2002–லே, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியால் அந்த நடிப்புத் துறை மூடப்பட்டது. நிறைய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது மீண்டும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 450 பேர் அதிலே படித்துவிட்டு, இன்றைக்குத் திரைப்படத்திலே, திரைப்பட உலகிலே, தொலைக்காட்சி ஊடகத்திலே, வானொலியிலே, நடிப்புத் துறையிலே எல்லா இடங்களிலும் சிறந்து விளங்குகின்றார்கள். ஆகவே அந்த நடிப்புத் துறையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியிலே இரண்டொரு கோரிக்கைகள். மேட்டூர் தொகுதிக்கு ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, அரசுக் கல்லூரிகள் துவங்கப்பட மாட்டாது; இது அரசின் கொள்கை முடிவு என்ற நிலை இருந்தது. ஆனால் மேட்டூர் தொகுதிக்கு அரசுக் கல்லூரி வேண்டும் என்ற நேரத்தில், கொள்கை முடிவுகளை எல்லாம் தளர்த்தி, மேட்டூர் தொகுதிக்கு ஓர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கிய முதலமைச்சர் அவர்களை நானும் என்னுடைய தொகுதி மக்களும் நெஞ்சாரப் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்டத் தொகுதிகள், பக்கத்திலே இருக்கின்ற சேலம் மாவட்டத்திலே பல தொகுதிகள், ஈரோடு மாவட்டத்திலே இருக்கிற பல தொகுதிகள், ஆக 3 மாவட்டங்களிலே இருக்கின்ற தொகுதிகளில் உள்ள மாணவர்கள் எல்லாம் அந்தக் கல்லூரியிலே படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே முதலமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய மாவட்டத்து அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும், உயர் கல்வித் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு முனைவர் பொன்முடி அவர்களுக்கும், கலைஞர் அவர்களின் ஆலோசனையை ஏற்று நிதிநிலை அறிக்கையிலே நிதி அளித்த, மாண்புமிகு நிதியமைச்சர் போற்றுதலுக்குரிய இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை விரைவாக முடியுங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிட்டேன். முடித்துவிட்டேன். இறுதியாக ஒன்று. சென்னையிலே அடுக்குமாடிக் குடியிருப்புகள் இருக்கின்றன. 100 வீடுகள், 150 வீடுகள் ஒரே குடியிருப்பிலே இருக்கின்றன. அதன் குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்புக்கு எல்லாம் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 100 வீடுகள் இருக்கின்ற அந்தக் குடியிருப்பிலே ஒரு வீட்டிற்கு யாராவது கட்டணம் கட்டவில்லை என்று சொன்னால், முழுவதுமாக எல்லா வீடுகளுக்குமான இணைப்பு துண்டிக்கப்படுகிறது. உதாரணத்திற்குகூட நான் சொல்ல முடியும். சின்னமலையிலே மேத்தா குடியிருப்பு என்று 96 வீடுகள் இருக்கின்றன. அங்கே மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. ஓர் ஆள் செய்கின்ற தவறுக்காக, அங்குள்ள எல்லோரும் பாதிக்கப்படுகின்றார்கள். ஒரு வருடம், இரண்டு வருடம் என அப்படியெல்லாம் அந்தத் துண்டிப்பு நிகழ்கின்றது. ஆகவே, அப்படிக் கட்டணம் கட்டாதவர்கள் உடனடியாகக் கட்ட வேண்டும் என்று சொன்னால், பணம் கட்டாத அந்தத் தனியார் உள்ள அந்த வீட்டினுடைய மின் இணைப்பைத் துண்டித்துவிடலாம்; உடனடியாகக் கட்டிவிடுவான். ஆகவே, அதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை என்பது தேர்தல் நேரத்திலே சொல்லப்பட்டது மட்டும் அல்ல; சொல்லப்படாததும் வந்து இருக்கிறது. இது மகத்தான ஒரு மாமன்றம். தேர்தல் நேரத்திலே சொல்லக்கூடிய வாக்குறுதிகள், பொதுக் கூட்டங்களிலே சொல்லக்கூடிய வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்படுவதில்லை. இது, கடந்தகால வரலாறு; தமிழ்நாட்டு, இந்தியா நாட்டினுடைய வரலாறு. சட்டமன்றத்திலே, ஆளுநர் உரையில், அதேநேரத்தில் நிதிநிலை அறிக்கையில்—வரவு-செலவுத் திட்டத்தில்—சொல்லப்பட்டவை எல்லாம் நிறைவேற்றப்படாத வரலாறுகள் நிறைய இருக்கின்றன. ஆனால், நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது, தேர்தல் அறிக்கையிலே சொன்னவற்றையும், சொல்லாதவற்றையும் ஒரே வரவு-செலவுத் திட்டத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) முதல் திட்டத்தில் கொடுத்த மகத்தான அரசு, இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசுக்குத் தலைமையேற்றிருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும், தமிழுக்கும் பணியாற்றக்கூடிய முதலமைச்சர் அவர்களே, தாங்கள் ஐந்தாண்டுக் காலம் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள்; அதற்கு மேலும் தமிழ்நாட்டு மக்களுக்காகத் தாங்கள் நீடூழி வாழ வேண்டுமென்ற (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அவாவை வெளிப்படுத்தி, இந்த

நிதிநிலை அறிக்கையைத் தமிழ்நாட்டு மக்கள் சார்பிலே, குறிப்பாக தமிழர்கள் சார்பிலே வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை, மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள், சுமார் இரண்டு மணி நேரம் உரையாற்றி, 73 பக்கங்கள் கொண்ட ஓர் அறிக்கையினை, 188 அறிவிப்புகளாக இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அறிவிப்புகள் அனைத்தும் பல்வேறுபட்ட மக்களாலே பாராட்டப்படக்கூடியவகையிலே அமைந்திருக்கின்றன என்று சொன்னால், அது ஏற்புடையதாக இருக்கும்.

அதேபோன்று, இந்த நிதிநிலை அறிக்கையிலே சுமார் 38,731 கோடி ரூபாய் வரவாகவும், 39,860 கோடி ரூபாய் செலவாகவும், வருவாய் பற்றாக்குறை 1,129 கோடி ரூபாய் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிகர பற்றாக்குறை 4 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, பல்வேறுபட்ட சிறப்பு அம்சங்கள் நிறையவே இருக்கின்றன. அவற்றிலே, குறிப்பிட்டு ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக, புதிய தொழிற் கொள்கை நடப்பாண்டிலேயே அறிவிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். தமிழகத்தில் சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்திலே computer உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்க 100 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யும் தொழில்களுக்கு விற்பனை வரி, 10 ஆண்டுகளுக்கு விலக்களித்திருக்கிறீர்கள். இலவச colour T.V. முதற்கட்டமாக 30 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. அதற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை தரமணியிலே, இரண்டாவது Tidel பூங்கா அமைக்க இருக்கிறார்கள். சென்னை நகரில் போக்குவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வகையில், metro இரயில் திட்டம். நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குவதற்காக தரிசு நிலங்கள் கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. மதிப்புக் கூட்டு வரி 2007 ஆம் ஆண்டு, ஜனவரி முதல் தொடங்கப்பட இருக்கிறது. ஆயிரம் பேருந்துகள் வாங்க இருக்கிறார்கள். பின்னலாடை நகரமான



திருப்பூர், மாநகராட்சியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர உதவித் தொகை 200 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. பருப்பு, எண்ணெய்க்கு வரி விலக்கு. சென்னை அருகே வாகன ஆய்வு மையம். கடல்நீரைக் குடிநீராக்க, மற்றொரு திட்டம். சென்னை அருகே துணை நகரங்கள். வேலையில்லா இளைஞர்களுக்கு உதவித் தொகை. குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் licence இரத்து. வேலூரிலே சிப்பாய்க் கலகம் பற்றிய விவரங்கள், பாடப் புத்தகங்களிலே இடம்பெறும்வகையிலும், வேலூரில் மேலும் ஒரு நினைவுச் சின்னத்தை அமைக்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறுபட்ட அறிவிப்புகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது.

அரசு பொறுப்பேற்று 75 நாட்கள் ஆகின்றன. இந்த 75 நாட்களுக்குள்ளாக மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க வகையிலே, திட்டங்களைத் தீட்டி இன்றைக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறோம். ஓர் அரசு என்று சொன்னால், அந்த அரசுக்கு வருகின்ற அந்த 38 ஆயிரம் கோடி ரூபாயை அப்படியே செலவு செய்துவிடுவது என்பது ஒன்று. ஒரு நல்ல அரசு என்று சொன்னால், அந்த 38 ஆயிரம் கோடி ரூபாயைக்கொண்டு அதிலே ஊழல் இல்லாமல் எளியவர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களைச் செய்வது ஒரு நல்ல அரசு. அந்த 38,000 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு, இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள், சமுதாயத்திலே பின்தங்கிய மக்கள், வாழ்க்கையிலே பலவீனமான மக்களினுடைய வாழ்க்கைத் தரத்தை அறிந்து, யார் யாருக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து, அவ்வாறு தெரிந்து வைத்திருக்கின்ற பயனாலே, அந்த மக்களுக்கு உதவுகின்றவகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கின்றார்கள். அதனாலே இந்த நிதிநிலை அறிக்கை ஒரு மக்கள்நல நிதிநிலை அறிக்கை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–30*

2001 ஆம் ஆண்டு, இந்த அரசினுடைய மொத்த கடனுக்காக வட்டி மட்டுமே, 31–3–2001-ல் மாதம் ஒன்றுக்கு 293 கோடி ரூபாய். அன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு 3,116 கோடி ரூபாய் வட்டி செலுத்திக்கொண்டு இருந்தது. இன்றைக்கு 56,094 கோடி ரூபாய் கடன். மாதம் ஒன்றுக்கு 446 கோடி ரூபாய் வட்டி கட்டுகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 5,352 கோடி ரூபாய் வட்டி. 2001 ஆம் ஆண்டைவிட, 2006 ஆம் ஆண்டு, ஆண்டு ஒன்றுக்கு 2,236 கோடி ரூபாய்வீதம் வட்டி கட்டுகின்றது. வட்டியாக இந்த அரசு

அதிகமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஏன் ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

கடந்த காலங்களிலே, பல்வேறு நிலைகள் எடுத்து இருக்கிறார்கள். அரசுப் பணியாளர்களுக்கு நிறைய சலுகைகள் அளிக்கப்படவில்லை. அதனாலே அரசு ஊழியர்கள் மிகப் பெரிய போராட்டம் நடத்தினார்கள். ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். 10,000 சாலைப் பணியாளர்களுக்கு, அரசு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் அறிவித்தபோதும், வேலைவாய்ப்புக் கொடுக்கப் படவில்லை. மக்கள் நலப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப் பட்டார்கள். நிதியைச் சேமிக்கிறோம் என்று சொல்லி—இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப் போன்று, இந்த அரசு நிதிநிலையிலே மிகவும் பின்தங்கி இருக்கிறது. இந்த நிதிநிலையைச் சீர்செய்கிறோம் என்று சொல்லி—அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள். எடுத்தும்கூட இன்றைக்குக் கடன் உயர்ந்து இருக்கிறது; வட்டி உயர்ந்து இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் என்னுடைய பணிவான வேண்டுகோளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பற்றி, பல நண்பர்கள் இங்கே பாராட்டிப் பேசி இருக்கின்றார்கள். இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்கள் பாராட்டினார்கள். C.P.M. தலைவர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பாராட்டினார்கள். அதேபோன்று C.P.I. திரு. சிவபுண்ணியம் அவர்கள் பாராட்டினார்கள். அதேபோன்று, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், முன்னாள் அமைச்சர் அருமைச் சகோதரர் மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள், இங்கே எல்லாத் திட்டங்களையும் பாராட்டிவிட்டு, அத்தனைத் திட்டங்களையும் பாராட்டுகிறோம் என்று சொல்லிவிட்டு, கடைசியாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் பலன் இல்லை என்று ஒரே வார்த்தையில் மட்டும் குறிப்பிட்டார். மற்ற அனைத்தையும் அவர் பாராட்டியதற்கு நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வப் பெருந்தகை அவர்கள் இங்கே பேசுகின்றபோது 'தமிழிலே பெயர் மாற்றம் செய்வதற்கு கடந்த அரசு ஆண்ட காலத்திலே 200 ரூபாயாக இருந்ததை, 440 ரூபாயாக உயர்த்தி விட்டார்கள்; அதனை நீங்கள் குறைக்கவேண்டும்' என்ற வேண்டுகோளை



வைத்தார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகின்ற வேண்டுகோளையும், தமிழக முதலமைச்சர் அவர்களே, நீங்கள் ஏற்று, இன்றைக்கு அதை 50 ரூபாயாகக் குறைத்து இருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; நேற்றைக்கு முன்தினம், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்கூட தொலைக்காட்சிப் பெட்டி நீங்கள் வழங்குவதை ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். எப்படி வழங்கப் போகின்றீர்கள்; யார், யாருக்கு எல்லாம் வழங்கப் போகின்றீர்கள் என்ற வினாவை அவர்கள் தொடுத்து இருக்கின்றார்கள். அதன்மூலமாக, இந்த அரசினால் எல்லோருக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்ற உறுதிமொழியை அவர்கள் பெற்று இருக்கின்றார்கள். அதனாலே இந்த பட்ஜெட் (மேசையைத் தட்டும் ஒலி) கானல் நீர் பட்ஜெட் அல்ல; வற்றாத ஜீவநதி. (மேசையைத் தட்டும் ஒலி) மண் கோட்டை அல்ல; ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்டிய கற்கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) 'காகித ஓடம் கரை சேராது' என்று சொன்னார்கள். காகித ஓடம் அல்ல இது; மிகப் பெரிய கப்பல்; நிச்சயமாக அனைவரையும் கரை சேர்க்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கின்ற, தமிழகத்திலே இருக்கின்ற ஆறு கோடி மக்களையும் இந்த பட்ஜெட் கரை சேர்க்கும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

இன்றைக்கு இந்த அரசு ஒரு minority அரசு என்று இங்கே சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என அமைத்து, ஆட்சிப் பொறுப்பினை ஏற்றோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே, இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையிலே கூட்டணி ஆட்சி அமையுமென்று தேர்தலுக்கு முன்னாலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணி மக்களுக்கு வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதியின்படி, டாக்டர் கலைஞர்தான் முதலமைச்சர் என்று அன்னை சோனியா காந்தி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை ஏற்று இன்றைக்குக் காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, C.P.M., C.P.I இப்படி 163 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற அரசு—இங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 163, ஆளுங்கட்சிக்கு; எதிர்க்கட்சிக்கு 61, 6, 2—எப்படி இது ஒரு மைனாரிட்டி அரசு என்பதை நீங்கள் தெளிவாக விளக்க வேண்டுமென்று

நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில தினங்களுக்கு முன்னாலே, இங்கே முதலமைச்சர் அவர்கள், ஓர் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள். என்ன அறிவிப்பு என்று சொன்னால், காஞ்சிபுரம் மாவட்டத்திலே, ஓர் ஊரிலே ஒரு நிலப் பிரச்சினை. பஞ்சமி நிலப் பிரச்சினை ஏற்பட்டு, அந்தப் பஞ்சமி நிலப் பிரச்சினையின் காரணமாக, ஓய்வுபெற்ற நீதிபதி சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலே ஒரு விசாரணைக் குழு அமைக்கப்படும் என்று இந்த அவையிலே முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அறிவிப்பை அடுத்து, பல்வேறு கட்சிகள் இங்கே அந்த அறிவிப்பை வரவேற்றிருக்கின்றன. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த அறிவிப்பை வரவேற்றிருக்கின்றார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் 2 பேர் இங்கே பேசினார்கள். அப்போதெல்லாம் அந்த அறிக்கை பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால், அந்த அறிவிப்பு வந்து, இரண்டு தினங்களுக்குப் பின்னாலே, நேற்றைக்கு முன்தினம் இந்த அறிவிப்பை எதிர்த்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் ஒரு... (குறுக்கீடுகள்)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் பட்ஜெட்டுக்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். நான் அனுமதி தந்த பிறகுதான் யாரும் எழுந்து பேசமுடியும். எல்லோரும் உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள்.

***செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினை குறித்து, ஏற்கெனவே விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டுவிட்டதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. விசாரணை கமிஷன் அமைத்த பிறகு, அந்த விசாரணை முடியும்வரை அதைப்பற்றி இந்த அவையில் பேசுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அடுத்த subject-க்குப் போங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த விசாரணையைப் பற்றியோ அந்த அறிக்கையைப் பற்றியோ இங்கே எதையும் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னாலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அவருடைய கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) சரி. நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள் முதலில். உட்காருங்கள். நான் சொல்கிறேன் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அடுத்த subject-க்குப் போங்கள். (குறுக்கீடு)

***திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

*(முற்பகல் 10–40)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். No point of order. Sit down. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். உட்காருங்கள் brother. நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) I say, உட்காருங்கள் please. (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Permission is not granted. Please sit down. நீங்கள் பேசுங்கள். திரு. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சுதர்சனம் பேசுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலே, தமிழக அரசு, உடனடியாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற உடனே, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று அறிவித்த திட்டத்தை, தேர்தல் அறிக்கையிலே அறிவித்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி இருக்கின்றார்கள். சத்துணவு கொடுப்பதிலே வாரத்திற்கு இரண்டு முட்டைகள் என்று அறிவித்திருக்கின்றார்கள்.

விவசாயிகள் தமிழகத்திலே படுகின்ற இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள் அனைத்தையும் எண்ணிமாளாதவகையிலே, இன்றைக்குப் பல விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்ததை மாற்றி, சுமார் 7,000 கோடி ரூபாய்க்கான விவசாயக் கடன்களை இந்த அரசு இரத்து செய்திருக்கின்றது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தமிழகத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் பாராட்டுகின்றார்கள்; வாழ்த்துகின்றார்கள். அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு உரிய விதைகள், புதிதாக மழை பெய்திருக்கின்ற காரணத்தினால் விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களை, கூட்டுறவு வங்கிகள் மூலமாக திரும்பவும் விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கும் இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்ற இந்த 75 தினங்களுக்குள்ளாக எல்லா அமைச்சர்களும் முடுக்கிவிடப்பட்டு, இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, மக்கள் குறைகளைக் கேட்டு, சிறப்பாகப் பணியாற்றக்கூடிய பல்வேறு நிலைகளை உருவாக்கியிருக்கின்றார்கள்.

குறிப்பாக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். அவர்கள் வருகை தந்தபோது, நீண்ட நெடுநாள் கோரிக்கையான, பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்திற்கு, திருக்கச்சி நம்பி வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்த இடத்தைப் பார்வையிட்டு, அந்த இடம் உடனடியாக அரசுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்து, 4 கோடியே 28 இலட்சம் ரூபாய் விலைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் விலை நிர்ணயம் செய்து, அரசு அதிகாரிகளை எல்லாம் உடனடியாக அழைத்துப் பேசி, அந்தப் பூவிருந்தவல்லி பேருந்து நிலையம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

அதேபோன்று, ஆவடியிலே ஐந்தாண்டுகளுக்கு முன்னால், 4½ கோடி ரூபாய் செலவிலே போடப்பட்ட குழாய்களில் தண்ணீர் வராமல் இருந்த நிலையைப் போக்கி, இப்போது, 8 இலட்சம் லிட்டரை 16 இலட்சம் லிட்டராக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல; 2003 ஆம் ஆண்டு 38 கோடி ரூபாய் செலவிலே அங்கே குடிதண்ணீர் திட்டம் தயாரிக்கப்பட்டு, அது கிடப்பிலே போடப்பட்டது. 2004 ஆம் ஆண்டு அங்கே 138 கோடி ரூபாய் செலவிலே பாதாளச் சாக்கடை அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு திட்டம்



தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டமும் கிடப்பிலே போடப்பட்டது. அதையெல்லாம் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தேன். உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், என்னையும் அழைத்து, கோட்டையிலே ஒரு கூட்டத்தை நடத்தி, இந்தத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நம்முடைய உணவுத் துறை அமைச்சர் திரு. வேலு அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் பல்வேறு மாவட்டங்களுக்கெல்லாம் சென்று, உணவுத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் நீதிமன்றங்களுக்குச் சென்று, சுயநிதிக் கல்லூரிகள், பல பிரச்சினைகளைச் செய்து கொண்டிருந்தன; அந்தக் கல்லூரி முதல்வர்களை, தலைவர்களை எல்லாம் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி, 65 சதவிகித இடங்கள் அரசுக்கும், 35 சதவிகித இடங்கள் அவர்களுக்கும் என்று சொல்லி, ஒரு சுமுகமான தீர்வைக் கண்டு, அந்தக் கல்விப் பிரச்சினை, நீதிமன்றத்திற்குச் செல்லாமலேயே தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பல்வேறு அமைச்சர்கள் நிறைய பேர் பணி செய்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-45

இன்றைக்குத் தொழில் துறை மிகவும் வளர வேண்டிய ஒரு துறை. அந்தத் தொழில் துறை வேகமாக வளர்வதற்கு முதலீடுகள் அவசியம். முதலீடுகள் இல்லாமல் தொழில் துறை நிச்சயமாக வளர முடியாது. இன்றைக்குக் கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் எல்லாம் வெகு வேகமாகத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் தொழிற்சாலைகள் வருவதற்குப் பல்வேறுவிதமான காரணங்களைச் சொல்லி, தட்டிக் கழிக்கின்ற ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டிலே வாழ்கின்ற இந்தியர்களையெல்லாம் சந்தித்து, வெளிநாட்டிற்கு ஒருமுறை சுற்றுப் பயணம் செய்து, அங்கிருக்கின்ற

இந்தியர்களையெல்லாம் சந்தித்து, அவர்களிடத்திலே இருந்து நிறைய நிதியினைப் பெற்று, நிறைய தொழிற்கூடங்களைத் தமிழகத்திலே அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், வருகின்ற காலங்களிலே ஆண்டு ஒன்றுக்கு பொறியியல் பட்டதாரிகள் 75 ஆயிரம் பேர் வர இருக்கின்றார்கள். மருத்துவர்கள் நிறைய பேர் வர இருக்கின்றார்கள். M.A., M.Sc., B.A., B.Sc., போன்ற பட்டம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டியது இந்த அரசினுடைய கடமை. அவர்களுக்கெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். குறிப்பாக, தமிழகத்திலே நிறைய படித்துவிட்டு, வேலை இல்லாத இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது இந்த அரசினுடைய கடமை என்கிற காரணத்தினால், முதலீடு இல்லாத காரணத்தினால், அந்த முதலீட்டுக்கு நீங்கள் வழிவகை காணவேண்டும் என்ற ஓர் அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகக் கணக்கெடுப்பின்படி, அடுத்த பத்தாண்டுக் காலத்திற்குள்ளாக, உலகத்திலே சிறந்த பொறியியல் வல்லுநர்கள், தமிழகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்று அனைத்துக் கணக்குகளும் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அதேபோன்று, மருத்துவர்கள், இந்திய நாட்டைச் சேர்ந்த மருத்துவர்கள்தான், உலகளாவிய பெரிய மருத்துவர்களாக இன்னும் பத்தாண்டுகளுக்குள் வர இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அடுத்த பத்தாண்டுகளுக்குள் இந்தியாவில் இருக்கின்ற விஞ்ஞானிகள்தான், மிகப் பெரிய விஞ்ஞானிகளாக உலகம் பூராவும் திகழ்வார்கள் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் மனதிலேகொண்டு, இந்தச் சென்னை மாநகரத்திலும், தமிழகத்திலும் மிகப் பெரிய தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு, பெரிய அறிவுக் களஞ்சியங்கள் இங்கே வருவதற்கு, அறிவுக் கூடங்கள் வளர்வதற்கு முதலமைச்சர் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த தின விழாவைக் கல்வி வளர்ச்சி நாளாக நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், பிறந்து வளர்ந்து, பத்தாண்டுகள் சிறையிலேயிருந்து, ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த மாமன்றத்திலே முதலமைச்சர் பொறுப்பை ஏற்று, இந்த நாட்டுக்கு அவர் ஆற்றிய பணிகள் ஏராளம் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்; இந்த மன்றம் அறியும்.



அதுமட்டுமல்ல; அந்த ஒன்பது ஆண்டுக் காலமும் முதலமைச்சராக இருந்தபோது, 1957 ஆம் ஆண்டு அன்றைய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதிநிலை அறிக்கையினை இந்த மன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள். இந்த மன்றத்தினுடைய நிதிநிலை அறிக்கையில், அன்றைக்கு வரவு 100 கோடி ரூபாய்—பேராசிரியர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்; அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—100 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தைத் தமிழகத்திற்கு அளித்துவிட்டு, 'நான் century அடித்திருக்கிறேன்' என்று அன்றைய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு 38 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் அரசுக்கு வந்துகொண்டிருக்கிறது. வேகமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது, தமிழகம்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், பகலுணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது, பிறகு வளர்ந்து, வேகமாகப் பல்வேறு திசைகளிலே வளர்ந்து, இன்றைக்குச் சத்துணவுத் திட்டமாக மாறியிருக்கிறது. அதற்கு நிதி நிறைய ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். அது வேறு விஷயம்.

அதுமட்டுமல்ல; தொழிற்சாலைகளிலே, அவர் உருவாக்கிய தொழிற்சாலைகள்தான் இன்றைக்கு ஏராளமாக இருக்கின்றன. அதையும் நீங்கள் மனதிலேகொண்டு, கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்திருக்கின்றீர்கள், அது சட்டப்பூர்வமாக ஆக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள், அதற்காக காங்கிரஸ் கட்சி தன்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

1991 ஆம் ஆண்டு அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், ஸ்ரீபெரும்புதூரிலே மரணமடைந்தார்கள். ஸ்ரீபெரும்புதூருக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக வருகை தந்தார்கள். கடைசியாக, என்னுடைய தொகுதியிலே, பூவிருந்தவல்லியிலே பேசினார்கள். பேசிவிட்டு, ஸ்ரீபெரும்புதூருக்குப் போகின்றபோது, அவர் எந்த இலங்கைத் தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்க வேண்டுமென்று முயற்சித்தாரோ, எந்த இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினாரோ, அந்த இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களாலே, தீவிரவாதிகளாலே, விடுதலைப் புலிகளாலே அவர் படுகொலை செய்யப்பட்டார் என்பதை இந்த நாடு நன்றாக அறியும். அவருடைய

நினைவாக Rajiv Gandhi Aeronautical Academy என்ற ஒன்றை உருவாக்க திட்டம் இருக்கிறது; திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்றீர்கள். அதேபோன்று அங்கே மிகப் பெரிய கல்லூரி ஒன்று Aeronautical கல்லூரி அமைக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, அவருடைய துணைவியார் அவர்கள், எங்களுடைய காங்கிரஸ் கட்சினுடைய தலைவியாக அன்னை சோனியா காந்தி அவர்கள் இருக்கிறார்கள். அவருடைய வழிகாட்டுதலின்பேரில், மத்திய அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மத்திய அரசு இதற்காக, இந்த Aeronautical Engineering கல்லூரி, அதேபோன்று, விமானிகள் ஓட்டுகின்ற பயிற்சித் தளத்தையும் அமைப்பதற்கு எந்த உதவி வேண்டுமானாலும், இந்த அரசுக்குச் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தியாகி பகத் சிங் அவர்களுடைய நூற்றாண்டு விழா, இந்த ஆண்டு வருகிறது. இந்த ஆண்டிலே, அந்த நூற்றாண்டு விழாவை ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; இன்றைக்குப் பல்வேறு பிரச்சினைகள் தமிழகத்திலே இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி, அவற்றை நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், பாலாற்றின் குறுக்கே அணையைக் கட்ட துவங்கியிருக்கின்றார்கள். அந்த அணை கட்டுவதன்மூலமாக, தமிழகம் ஒரு வறண்ட மாநிலமாகும். காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகிய மாவட்டங்கள், ஒரு மிகப் பெரிய பிரச்சினைக்கு உள்ளாகும் நிலை ஏற்படும். கர்நாடக மாநிலம், போத்தமங்கலத்தில் பாலாற்றின் குறுக்கே அணையைக் கட்டிவிட்டார்கள். ஆந்திரா 32 இடங்களிலே தடுப்பணைகள் கட்டியிருக்கிறது. அங்கே பாலாற்றிலே, ஆந்திர முன்னாள் முதலமைச்சருடைய குப்பம் தொகுதியிலே, சுமார் 160 அடி உயரத்திற்கு, ரூபாய் 250 கோடியிலே மிகப் பெரிய அணையைக் கட்ட திட்டமிட்டு, பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பணி துவக்கப்பட இருக்கிறது. அந்தப் பகுதி வனத் துறைக்குச் சொந்தமான இடம். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ராஜா அவர்கள் மத்திய அமைச்சரவையிலே



அமைச்சராக இருக்கிறார்கள். இந்த அவையிலே நாம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அந்த அணையைக் கட்டுவதைத் தடுக்க ஆவன செய்ய வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நிலம், நீர், காற்று, ஆகாயம் என்பது இந்த நாட்டின் பொதுச் சொத்து. அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்துவந்து, வருங்கால தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. அதுவும் நிலம் என்பது ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம். அதிலும் அரசு நிலம் என்பது ஏழை மக்களுக்கு மட்டும் சொந்தமானது. இந்த அரசு நிலத்தை ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்த நிலத்தைப் பெரும் முதலாளிகளிடமும், பெரிய தொழிலதிபர்களிடமும் ஒப்படைப்பது, இந்த நாட்டு மக்களுக்கு நாம் செய்யக்கூடிய மிகப் பெரிய துரோகம். ஆனால், ஆயிரக்கணக்கான ஏக்கர் அரசு நிலங்கள், மிகப் பெரிய முதலாளிகளிடமும், ஆலை அதிபர்களிடமும் சிக்கி இருக்கின்றன. அவற்றை மீட்டு வருங்கால சந்ததியிடம் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் *10–55*

இதற்கு ஒரேயொரு உதாரணம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தாலுகாவிலே, Maruthi Marine Limited என்ற ஒரு Company, TIDCO-வினுடைய ஒரு joint venture நிலம், இடம். அதன் பங்குகளில், 51 சதவிகித பங்குகள் அவர்களுக்கும், 49 சதவிகித பங்குகள் அரசுக்கும் சொந்தமாக இருக்கின்றன. சுமார் 5,000 ஏக்கர் நிலம்; அந்த இடத்தை உப்பு தயாரிப்பதற்காக அரசு ஒதுக்கியிருக்கிறது. உப்பு தயாரிப்பதற்காக 25, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒதுக்கியிருக்கிறது. அந்த 5,000 ஏக்கர் நிலம், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னாலே, 25 ஆண்டுகள் குத்தகை என்ற பெயரிலே ஒதுக்கப்பட்டு இன்று செயல்பட்டு வருகிறது. இதுவரை அந்தத் தொழிற்சாலை இலாபத்திலே இயங்குகிறதா என்று பார்த்தால், அந்த உப்பு செய்கின்ற தொழிலை விட்டுவிட்டு, அவர்கள் இறால் பண்ணை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவே ஒரு தவறு. ஆனால், அந்த நிலம்—Maruthi Marine Limited பயன்படுத்தி வந்த அந்த நிலம்—25 ஆண்டுக் காலமாக நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று அவர்கள் அறிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு ஆணை ஒப்பந்தம் மீறல். இறால் பண்ணைகளுக்கு அவர்கள் மேல் குத்தகைக்கு

விட்டுவிட்டு, அரசுக்குச் செலுத்தவேண்டிய பணத்தை, இதுவரை வாடகைகூட அவர்கள் செலுத்தவில்லை. முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுத்து, அந்த 5,000 ஏக்கர் நிலத்தை வாங்கி, நிலமற்ற ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் என்று சொல்லுகின்றோமே, அதற்குக் கொடுக்கவேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வீட்டு வசதி வாரியத்தால், திருவான்மியூர் வீட்டு வசதித் திட்டத்திற்கு, Part-II Scheme என்று ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. 96 ஏக்கர் நிலம் அரசு கையகப்படுத்தவேண்டும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதிலே 1980 ஆம் ஆண்டு G.O. No. 190–ன்படி, அந்த 96 ஏக்கர் 92 சென்டிலே, பல பேர் வீடு கட்டியிருக்கின்றார்கள் என்று சொல்லி, பல்வேறு இடங்களை ஒதுக்கிக் கொடுத்துவிட்டது. ஆனால், இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அங்கே மிகப் பெரியவர்கள் எல்லாம் N.O.C. வாங்கி வீடு கட்டி, apartments கட்டி முடித்துவிட்டார்கள். சாதாரணமாக இருக்கின்றவர்கள், ஏழைகள் N.O.C. போய்க் கேட்கின்றபொழுது, 'உங்களுக்கு 4 (1) Notice கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லுகிறார்கள். 4 (1) Notice கொடுத்து, 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒன்று, அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும்; நிலத்தைக் கையகப்படுத்திக்கொண்டு, பணத்தைக் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால், N.O.C. கொடுக்க வேண்டும். பல்வேறு நண்பர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, தடையாணை பிறப்பிக்கப்பட்டு, அந்தத் திட்டமே நிறுத்தப்பட்டுவிட்டது. பல்வேறு இடங்களிலே மிகப் பெரிய மாளிகைகள் எல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த இடத்திலே இருக்கின்ற சிறிய, ஒரு 5 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள், 10 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் N.O.C. இல்லாமல் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அரசு ஆணை எண் 190, 23–2–1980-ன்படி அவர்களுக்கெல்லாம் N.O.C. கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கவேண்டும் என்று நான் அன்போடு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தமிழக மக்கள் சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டும் என்று விருப்பப்படுகிறார்கள். அவர்கள் விருப்பம் ஈடேற வேண்டுமென்று சொன்னால்—இங்கே ஆறு கோடி மக்கள், 234 சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றார்கள்; யார் யார் என்ன பணி செய்கிறார்கள் என்று மக்களுக்குத் தெரிவதில்லை—அந்த மக்கள் பயன்படுகின்றவகையிலே, ஆந்திர மாநிலத்திலே இருப்பதுபோன்று,



கர்நாடக மாநிலத்திலே இருப்பதுபோன்று, கேரள மாநிலத்திலே இருப்பதுபோன்று, பாராளுமன்றத்திலே இருப்பதுபோன்று, இங்கே இருக்கின்ற சட்டமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொலைக்காட்சியிலே ஒளிபரப்புவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்ற ஓர் அன்பான வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு, ஏற்கெனவே ஒன்பது நல வாரியங்களை அரசு அமைத்துக் கொடுத்திருக்கிறது. அதேவகையில், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் ஒன்று அமைத்திட வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளைத் தமிழக அரசுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட இயக்கங்கள் பற்றிய ஆய்வு மையம் ஒன்று, சென்னைப் பல்கலைக்கழகத்திலே நிறுவப்படும் என்ற அறிவிப்பை நான் வரவேற்கிறேன். அதேநேரத்திலே, தமிழகத்தில், தேசிய இயக்கங்கள் செயல்பாட்டின் வரலாறு பற்றிய ஆய்வு மையம் ஒன்றினையும் அரசு நிறுவவேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் முழுவதுமுள்ள பட்டு, கைத்தறி நெசவாளர்கள் இப்பொழுது கூலி இல்லாமல், வேலை இல்லாமல் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். கைத்தறித் தொழிலையே நம்பி வாழும் தொழிலாளர்களுக்குக் கைத்தறி நெசவாளர் நல வாரியம் ஒன்றினை உருவாக்கிட அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிட்டா நூலுக்கு 2 சதவீத வரியை நீக்கியதற்கும், கைத்தறி நெசவாளர்களுக்கு அளிக்கப்பட்ட இலவச மின்சாரம் குறித்தும் நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில், அவர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை, கைத்தறி நெசவாளர்களுக்கு 2 மாதங்களுக்கு 200 யூனிட்டுகளும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டுகளும் என்று உயர்த்தி வழங்க வேண்டுமென்ற ஓர் அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–00

சென்னை நகரம் வேகமாக வளர்ந்து வருகின்ற நகரம். இங்கே வாகனங்கள் அதிகமாக இருக்கின்றன. உதிரிப் பாகங்கள் கிடைப்பதற்கு

மிகவும் துன்பப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. டெல்லி, கல்கத்தா, ஹைதராபாத் போன்ற நகரங்களிலே இந்த வாகனங்களுக்கென்று தனியாக ஓர் ஆட்டோ நகரம் உருவாக்கியிருக்கின்றார்கள். பழைய வாகனங்களை யெல்லாம் கொண்டுவந்து, அந்த இடத்திலே விற்கிறார்கள்; வாங்குகிறார்கள். பழைய வாகனங்களுக்கு வேண்டிய உதிரிப் பாகங்கள் எல்லாம் அங்கே கிடைப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அதாவது, சுருக்கமாகச் சொல்லப்போனால், Mount Road–இலே, ஏற்கெனவே இருந்த காயலாங் கடையைப் போன்று, மிகப் பெரிய அளவிலே, அவர்களுக்கு ஆட்டோ நகர் ஒன்றை உருவாக்கிட வேண்டும். இந்த வாகனங்களுக்கு வேண்டிய உதிரிப் பாகங்கள் விற்க tinker வேலை அல்லது மர வேலை போன்றவற்றை எல்லாம் செய்வதற்கு ஏதுவாக, ஆட்டோ நகரை உருவாக்கித் தர வேண்டுமென்ற ஓர் அன்பான வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு முறையில் நியமனம் செய்யப் போவதாக அரசு அறிவித்துள்ளது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் பல்லாண்டுக் காலமாக வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து, பணிக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே, தேர்வு முறை என்பதை மாற்றி, பதிவு மூப்பு அடிப்படையிலே நியமனம் செய்ய வேண்டுமென்ற ஓர் அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விருதுநகர் மாவட்டம், ஆலங்குளத்திலே இருக்கின்ற சிமெண்ட் தொழிற்சாலை பற்றி ஒரு கருத்து. இன்றைக்கு சிமெண்ட் தொழில் என்பது வேகமாக வளர்ந்து வருகிறது. தனியார் சிமெண்ட் ஆலை உரிமையாளர்கள் எல்லாம், ஆலை அதிபர்கள் எல்லாம் இலாபத்திலே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆலங்குளம் ஆலை பல்வேறு காரணங்களினாலே, இலாபத்திலே இயங்கவில்லை. அங்கே கிடைக்கின்ற சுண்ணாம்புக் கல் மிகவும் தரம் வாய்ந்த சுண்ணாம்புக் கல் என்று சொல்கிறார்கள். இந்த ஆலையை நவீனப்படுத்தி, ஒரு நல்ல நிருவாகத்தை ஏற்படுத்தி, அந்த ஆலையை மிக இலாபகரமான ஒரு சிமெண்ட் தொழிற்சாலையாக மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வைக்கிறேன்.

அதேபோன்று, ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நியமன முறை நீக்கப்படும் என்று இந்த பட்ஜெட் உரையிலே அறிவித்திருக்கிறீர்கள். இந்நிலையில் தற்போது தமிழகத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில்



கணினிப் பிரிவு ஆசிரியர்கள்—கணினி ஒரு முக்கியமான பணியாற்றும் கணினிப் பிரிவு ஆசிரியர்கள்—கணினி இல்லையென்று பொருளாக இப்போது கருதப்படுகிறது; கணினி இல்லையென்று சொன்னால், எதுவும் இல்லை என்ற ஒரு நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது—அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஒப்பந்த ஆசிரியர்கள் அனைவரும் நிரந்தரமாகப் பணியமர்த்தப்பட வேண்டும்; அவர்களுக்கு நிரந்தர ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, விவசாய விளைபொருட்கள், பருப்பு, பயறு மற்றும் எண்ணெய் ஆகிய பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சிக்குரிய விஷயம். அதேபோன்று விவசாய விளைபொருளான கரும்புக்கு, வெல்லத்திற்கு 4 சதவீதம் கொள்முதல் வரியை இரத்து செய்வது விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் பயன் அளிப்பதாக இருக்கும். அதனாலே தமிழக முதலமைச்சர் அவர்கள், வெல்லத்திற்கு 4 சதவீதமாக உள்ள விற்பனை வரியை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கரும்பு உற்பத்தி ஆலைகளிலே இருக்கின்ற molasses–ஐ இன்றைக்கு டன் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை ethanol செய்வதற்கு உபயோகப்படுத்தினால் அல்லது வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தால், அந்தக் கரும்பு உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படி 1,000 ரூபாய் கிடைப்பதற்கு வழிவகை செய்து, கரும்பு விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற வகையிலே—கரும்பை வெட்டி, லாரியிலே ஏற்றி, ஆலைக்குக் கொண்டு போகின்ற செலவு டன் ஒன்றுக்கு 60 ரூபாய்க்கு மேல் ஆகிறது; அந்த ethanol, molasses விற்பனையின் மூலமாக வருகின்ற அந்தப் பணத்தைக் கொண்டு, கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையில்—லாரி சத்தத்தை, கூலியை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் ஆலை அதிபர்களும் கொடுக்க வேண்டும் என்று அறிவிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–05

அரசுப் பணியில் சேர, கடந்த ஆட்சியில் பெரும் தடையினை உருவாக்கி, கடந்த ஆட்சிக் காலத்தில் ஒருவர்கூட அரசுப் பணியில் சேர இயலாமல் போயிற்று. தற்போதைய முதல்வர் இதனை உணர்ந்து அரசுப் பணியில் சேர ஐந்து ஆண்டு வயதுத் தளர்வினை

அறிவித்ததன்மூலம், ஆயிரக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலம் நல்ல முறையில் அமைய தமிழக அரசு உத்தரவிட்டதற்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், நடைபெறவுள்ள காவல் துறைத் தேர்வுகளிலும், குறிப்பாக, உதவி ஆய்வாளர் தேர்விலும், இந்த வயதுத் தளர்வு சலுகையினை வழங்கி இளைஞர்களுடைய வாழ்க்கைக்கு வளம் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் கிராம அலுவலர்கள் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கிட, அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக ஊராட்சிகளிலே தற்காலிக ஊராட்சிப் பணியாளர்கள், பகுதி நேர எழுத்தர்கள் ஆகியோருக்குப் பணி நிரந்தரம் செய்ய ஆணைகள் வழங்கவேண்டும்.

ஈரோடு மாவட்டத்திலே அமைந்துள்ள காளிங்கராயன் பாசனக் கால்வாயில் சாயப் பட்டறைகளின் கழிவுகள், தோல் கழிவுகள் கலப்பதால், கால்வாய் பெரிதும் மாசுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கழிவுநீர் கலப்பதால், இதனைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்குத் தோல் வியாதியும், கால்நடைகளுக்குப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே, காளிங்கராயன் வாய்க்கால் மாசுபடுவதைத் தடுக்க, கடும் நடவடிக்கை எடுத்து, விவசாயிகளையும், கால்நடைகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி ஒரு சிறந்த நல்ல பட்ஜெட்டை இந்த அரசு அளித்திருக்கிறது. ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, இங்கே கலைஞருடைய தலைமையிலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. இப்படித் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும், இந்த ஒரே பட்ஜெட்டிலே, எப்படித் தேர்தலுக்கு முன்னாலே நாம் அறிவித்தோமோ, அதேபோன்று, தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும்—முதல் பட்ஜெட்டிலே இடம்பெறும் என்று நீங்கள் அறிவித்தீர்கள்; அத்தனையும், நீங்கள் தேர்தலில் அளித்த வாக்குறுதிகள் அத்தனையும்—இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த பட்ஜெட் ஒரு சிறப்புவாய்ந்த பட்ஜெட்; மக்கள் நல பட்ஜெட் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006—2007 ஆம் ஆண்டிற்கான இந்தத் திருத்திய நிதிநிலை அறிக்கை குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகளை இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். 2006—2007 ஆம் ஆண்டிற்கான இந்தத் திருத்திய வரவு—செலவுத் திட்டம், புதிய ** தி.மு.க. அரசு கடந்த மே மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், சட்டப் பேரவைமுன் வைத்த முதல் நிதிநிலை அறிக்கை என்பதால், இதனைப்பற்றி ஒருசில நல்ல வார்த்தைகளையாவது பேசுவதற்கு அரும்பாடுபட்டு முயன்று பார்த்தேன். பாராட்டுவதற்கு இதில் ஏதாவது கிடைக்குமா என்று துருவித் துருவித் தேடிப் பார்த்தேன். பாராட்டும்படி ஓரிரு நல்ல அம்சங்களையாவது கண்டுபிடிக்க பெரிதும் சிரமப்பட்டுத் தேடினேன். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் பாராட்டுக்குரியதாக எதுவுமே இல்லை என்பதுதான் கசப்பான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக மக்களுக்கு, ** தி.மு.க. அரசு இழைக்கும் நம்பிக்கைத் துரோகத்தைத்தான், இந்த நிதிநிலை அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் இதில் நன்மை உள்ளது போன்றதொரு மாயத் தோற்றத்தை உருவாக்க, இந்த அரசு மெத்த சிரமப்பட்டு முயன்றுள்ளது. ஆனால், ஆழமாக ஆராய்ந்து உற்றுப் பார்த்தால், இது தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு விரோதமான பட்ஜெட் என்பது புரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீபாவளியன்று வானத்தில் வாண வேடிக்கை காட்டுவதுபோல் உள்ளது இந்த பட்ஜெட். தீபாவளி நேரத்தில் வானத்தில் ஆயிரம் ஆயிரம் இரத்தினக் குவியல்களைப் போல், மின்னுகின்ற வண்ண வண்ண நட்சத்திரங்களைப்போல், ஒளி வீசும் மின்னல் சிதறல்களைக் காணுகின்றபோது, பார்ப்பவர்களுக்குப் பிரமிப்பும், வியப்பும் ஏற்படும். ஆகா! எவ்வளவு அற்புதமான காட்சி என்று எண்ணத் தோன்றும். ஆனால், அடுத்த சில விநாடிகளிலேயே, நொடிப் பொழுதில், அந்த இரத்தினக் குவியல்களும், ஒளி வீசும் வண்ண நட்சத்திரங்களும், எரிந்து சாம்பலாகி உதிர்ந்து விடும்; (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணில் குப்பையாக வீழ்ந்துவிடும். அப்படிப்பட்டதுதான் இந்த பட்ஜெட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தூரத்திலிருந்து பார்த்தால், வெளிச்சம்போல் தெரியும் மின்மினிப் பூச்சியைப் போல, தவித்த வாயின் தாகத்தைத் தணித்து, உயிர் காக்கும் தண்ணீர் கிடைக்கும் என்று நம்பவைத்து ஏமாற்றம் அளிக்கும், இல்லாத கானல் நீரைப் போல (மேசையைத் தட்டும் ஒலி) அப்பாவி தமிழ்நாட்டு மக்களை நம்பவைத்து, நம்பிக்கைத் துரோகம் செய்யும் போலி ஆவணம்தான் இந்த நிதிநிலை அறிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

முந்தைய தி.மு.க. ஆட்சியில், 2000–2001 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் நிதிநிலை எத்தகைய அதலபாதாளத்தில் தள்ளப்பட்டதோ, முந்தைய தி.மு.க. அரசின் நிதி நிர்வாகத் திறமையின்மையால், தமிழ்நாட்டில் எப்படிப்பட்ட நிதி நெருக்கடி ஏற்படுத்தப்பட்டதோ, அத்தகைய அதல பாதாளத்தில் தமிழ்நாட்டின் நிதிநிலை மீண்டும் தள்ளப்படவுள்ளது. அப்படிப்பட்ட நிதி நெருக்கடி தமிழ்நாட்டில் மறுபடியும் ஏற்படப் போகிறது என்பதற்கான வாக்குமூலம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதியமைச்சர், பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சட்டப் பேரவையில் சமர்ப்பித்துள்ள 2006–2007 ஆம் ஆண்டுக்கான இந்தத் திருத்திய நிதிநிலை அறிக்கை.

ஒரு மாநிலத்தின் நிதிநிலை ஆரோக்கியமாக உள்ளதா என்பதைக் கண்டறிய பயன்படுத்தப்படும் எளிதான அளவுகோல்தான் வருவாய்ப் பற்றாக்குறை எனப்படுவதாகும். இந்த ஆண்டு 2006 ஜனவரி 20 ஆம் தேதியன்று 2006–2007 ஆம் ஆண்டுக்கான Interim Budget—இடைக்கால நிதிநிலை அறிக்கை—சட்டப் பேரவையில், எங்கள் கழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. அதில், 2006–2007 ஆம் ஆண்டுக்கான Revenue Deficit—வருவாய்ப் பற்றாக்குறை—207.27 கோடி ரூபாயாக எங்கள் அரசால் காட்டப்பட்டது. அந்த வருவாய்ப் பற்றாக்குறை, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள Budget Estimate–ல், 1,129.23 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்நேரம் 2005–2006 ஆம் ஆண்டுக்கான முழுமையான account-கள், வரவு–செலவு விவரங்கள் வந்திருக்க வேண்டும். அவற்றைப் பார்த்தால், உபரி வருவாய் வந்திருப்பதைக் காட்டும். இடைக்கால பட்ஜெட் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதியே தாக்கல் செய்யப்பட்டது. அன்றைய நிலவரப்படி வருவாய்ப் பற்றாக்குறை ரூ.207.27 கோடியாக இருந்தது. ஆனால், 2006 மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையிலான 2005–2006 ஆம் ஆண்டுக்கான முழுமையான வருவாய்க் கணக்கை எடுத்துப் பார்த்தால், நிச்சயமாக பற்றாக்குறை நீங்கி, உபரி



வருவாய் வந்திருக்கும். அதாவது, எங்கள் கழக அரசின் திறமையான நிதி நிர்வாகத்தினால் உபரி வருவாய் கிடைத்திருக்கும். ஆனால், இந்த ** தி.மு.க. அரசின் தவறான நடவடிக்கைகளால் அது வருவாய்ப் பற்றாக்குறையாக மாறிவிட்டது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பத்திலிருந்து ** என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான்கூட.... (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கய்யா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நான்கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசும்போது ரும் எழுந்திருக்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசும்போது எழுந்திருக்கக்கூடாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள், மரபைக் கடைப்பிடியுங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக இங்கே சொன்னார்கள். Church Park Convent–இலே படித்தவர்களுக்குக் கணக்குக்கூட தெரிந்திருக்காது என்று நான் கருதவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 234 மொத்த இடங்களில், 163 இடங்களைப் பெற்றிருக்கிற இந்தக் கூட்டணி ஆட்சியை, ** என்று சொன்னால், கணக்குத் தெரியவில்லை என்று நினைப்பதா அல்லது வேறு ஏதாவது குழப்ப வேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்று எண்ணுவதா? (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலாட்டா செய்வதற்கென்றே வந்திருக்கிறார்கள். நான் அவர் சொன்ன ** என்று சொன்ன கருத்திற்கு, நான் விளக்கம் கொடுத்திருக்கிறேன். அதற்கு அவர்கள் பதில் சொல்லட்டும். நான் பதில் சொல்லத் தயாராக

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தச் சத்தம் போடறது, கூச்சல் போடறது, இதனாலேயே பேர் வாங்க வேண்டுமென்று நினைத்தீர்களானால், அது ஆளுங்கட்சியில் இருக்கும்போதுதான். ஆளுங்கட்சியில் இருக்கும்போது முதலமைச்சரைத் தட்டிக் கொடுத்தே பெயர் வாங்கவேண்டுமென்று நினைத்தார்கள். இப்போது சத்தம் போட்டு, நாங்கள் பேசுவதற்கு– (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சியில் இருக்கிறோம்; நாங்கள் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

(அ.இ.அ.தி.மு.க உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் கையை நீட்டி அமைச்சரைப் பார்த்து ஏதோ பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது, யாரும் எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள் முதலிலே. இந்த மாதிரி பழக்கம் நல்ல பழக்கமல்ல, உட்காருங்கள். கைநீட்டிப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) கைநீட்டிப் பேசாதீர்கள். கைநீட்டிப் பேசக்கூடாது; உட்காருங்கள் முதலில். என் அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள். முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) என் அனுமதியில்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள் முதலிலே. நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள்.

முற்பகல் 11–15

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் Matriculation Public Exam எழுதியபோது கணக்கில் இருநூறுக்கு இருநூறு mark வாங்கியுள்ளேன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நிச்சயமாக நான் கணக்கில் weak அல்ல. ஏன் இதை ** என்று குறிப்பிடுகிறேன் என்று கேட்கிறார். 163 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற கூட்டணி அரசு என்று குறிப்பிட்டார். உண்மையாக, அனைத்துக் கூட்டணிக் கட்சிகளும் இந்த ஆட்சியில் பங்கு கொண்டிருந்தால், இது கூட்டணி அரசாக இருந்திருந்தால், அப்போது ** என்று சொல்லமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், (குறுக்கீடு) **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் என்ற முறையில் ஒரு விளக்கம் சொல்லவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இது ** என்று நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியுமானால், ஆதாரம் இருக்குமானால், அதை நிலைநாட்டுவதற்கு ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி, (மேசையைத் தட்டும் ஒலி) ** வீட்டுக்கு அனுப்பிவிட்டோம் என்று சொன்னால்தான், இது ** இல்லாதவரையில் majority அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடுகள்)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You pass on to the next subject. Madam. (குறுக்கீடு) Next subject–க்குப் போங்கள். (குறுக்கீடு) இது எதற்கு, ** என்றெல்லாம் எதற்கு? (குறுக்கீடு) அவர்தான் விளக்கம் சொல்லிவிட்டாரே!

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ** என்று சொல்வதில் என்ன தவறு? இது **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் நல்ல விளக்கம் சொல்லிவிட்டார்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அவர்கள் சொல்கிற விளக்கத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு விளக்கம் சொல்லியாகிவிட்டது. நீங்கள் வேறு subject–க்குப் போங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அவர்கள் சொல்கின்ற விளக்கத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இது ** (கூச்சல்–குழப்பம்) தி.மு.க. 118 உறுப்பினர்களைப் பெற்றிருக்குமேயானால்–

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2006 ஜூலை 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு செய்தி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள் முதலில்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த அரசை ** என்று சொல்கிறார்கள். நான் ஒன்றை விளக்க விரும்புகிறேன். (கூச்சல்–குழப்பம்) அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, minority-யான இடங்களிலே வெற்றி பெற்ற காரணத்தினாலேதான், இப்போது எதிர்ப்புறத்திலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து வெற்றிபெற்ற காரணத்தினாலே, ஆளுகின்ற பொறுப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஆட்சிக்கு நாங்கள் வெளியிலிருந்து ஆதரவு தெரிவிப்போம் என்று உறுதியாகத் தெரிவித்திருக்கிறோம். ஆகவே, இது ** அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள், நீங்கள் பேசுங்கள், எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜூலை 31]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மன்னிக்க வேண்டும்.
ஒரு விளக்கம் சொல்லவேண்டிய கட்டாயம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்
அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இந்த அரசு ** என்று
சொல்கிறவர்கள், "இது எங்களுடைய கருத்து; ஆளுங்கட்சி சொல்கின்ற
கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை" என்று ஒரு வாதத்தை
வைக்கிறார். அவருடைய வாதப்படி, நான் ஒரு வாதத்தைச் சொல்ல
விரும்புகிறேன். இதை ** என்று உலகத்திற்குச் சொல்லவேண்டுமானால்,
அந்த வார்த்தை எடுபடவேண்டுமானால், அவர் கட்சியும் majority ஆக
இருக்கவேண்டும். அவர்கள் இதைவிட ** ஆக இருந்துகொண்டு, இதைப்
பார்த்து ** என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு
** எந்த ** ஏற்றுக்கொள்வது என்பதை நாடு தீர்மானித்துதான் நாங்கள்
இங்கே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)
(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மிகவும் மூத்தவரான அவை முன்னவர் அவர்கள், இப்படி
** ஒரு கூற்றைப் பேசுவதைக் கேட்டு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.
(குறுக்கீடுகள்) எங்களை நாங்கள் ** என்று ஏன் சொல்லிக்கொள்ள
வேண்டும்? நாங்கள் ஆளுகின்ற கட்சி என்று எங்களைச் சொல்லிக்
கொள்ளவில்லையே? அரசு அமைத்திருக்கிறோம் என்று சொல்லிக்
கொள்ளவில்லையே? நாங்கள் 61 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்று
minority ஆகத்தான் இருக்கிறோம். அதனால்தான் பிரதான
எதிர்க்கட்சியாக இங்கே அமர்ந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)
ஆனால், தி.மு.க.–வில் எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள்
இருக்கிறார்கள்? 95 பேர்தானே? எப்படி அது majority அரசாக இருக்க
முடியும்? (குறுக்கீடு) ** என்று சொன்னால், ஏன் இவ்வளவு கோபம்
வருகிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,

(உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், அமைச்சரைப் பார்த்து
கையை நீட்டி ஏதோ பேசினார்.)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** உட்காருங்கள், நீங்கள் என்ன என்னைச் சொல்வது? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், நீங்கள் கையை நீட்டிப் பேசுவது முறையல்ல; அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேசுவதற்கு நான் உரிமை கொடுக்கவில்லை. உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, முதலில் உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, முதலில் உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) No, முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன் (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கையை நீட்டிப் பேசுவதை முதலில் நிறுத்துங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எதிர்க்கட்சிக் கொறடாவாக இருந்துகொண்டு அப்படிச் செய்யக்கூடாது.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விவாதங்களில் கலந்துகொள்கிற உரிமை அமைச்சர்களுக்கு இருக்கிறது. அந்த உரிமையை வேண்டுமானால், ஆதாரப்பூர்வமாகச் சொல்லவேண்டுமானால், கடந்த சட்டமன்றத் தொடரிலே சொல்லப்பட்டிருக்கிற செய்தியை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். நான்தான் அப்போது பேசிக்கொண்டிருந்தேன். "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—அப்போது நான் சொன்ன வார்த்தை—point of order. அமைச்சர்கள் பேசும்போது நாங்கள் குறுக்கிட்டால், அவர்கள் பேசி முடித்தபிறகு பேசுங்கள் என்று சொல்லுகிறீர்கள்; தயவுசெய்து அதேபோல, அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசும்போது, உறுப்பினர்கள் பேசி முடித்தபிறகு பேசுங்கள் என்று நீங்கள் அவர்களுக்குச் சொல்லலாம் அல்லவா?" என்று நான் அன்றைய பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டபோது, அவர் அளித்த ruling, இன்றைய முதலமைச்சரையும் சேர்த்து அன்று அளித்த ruling என்னவென்று சொன்னால், "இல்லை, இல்லை அமைச்சர்களுக்கு அந்த விதியெல்லாம் பொருந்தாது. அமைச்சர்கள், நீங்கள் ஏதாவது முக்கியமான, சிக்கலான சில பிரச்சினைகளைக் கிளப்புகிறபோது உடனடியாக பதில் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது" என்று அன்று சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையிலே நான் எழுந்து பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, எனக்கு பதில் சொல்ல வேண்டுமென்றால், எதிர்க்கட்சித் தலைவர் சொல்லட்டும்.



வேண்டுமென்றே இங்கே இருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுக் கையைக் காட்டி மிரட்டுவது போன்ற வார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது போன்றவற்றை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஆக, அரசியலமைப்பின்படியே— ஒன்று அரசியலமைப்பைத் தெளிவாகப் புரிந்து வைத்திருக்க வேண்டும்— ஒரு பெரும்பான்மை அரசு இருக்கிறது என்று சொன்னால் 163 உறுப்பினர்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கிற அரசு ஒரு பெரும்பான்மை அரசுதான். ** இருக்கவே முடியாது. ஆக இது பெரும்பான்மை அரசுதான், பெரும்பான்மை அரசுதான். அமைச்சரவையிலே இல்லை என்ற காரணத்தினாலேயே, இது கூட்டணி அரசு இல்லை என்று சொல்லுகின்ற வாதம், ஒன்று அரசியலமைப்பு தெரியாதவர்கள் சொல்லுகிற வாதமாக இருக்க வேண்டும். அரசியலுக்குப் புதிதாக வந்தவர்கள் சொல்லுகின்ற வாதமாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். குறுக்கே யாரும் பேசக்கூடாது. நீங்கள் பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சிக் காலத்தில், பேராசிரியர் அன்பழகன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அவர் எப்பொழுதெல்லாம் பேச எழுந்தாரோ அவருக்கு உரிய மரியாதை அளித்து, அவரைப் பேச அனுமதித்தோம். ஆனால், இன்றைய சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரைப் பேசவேவிடாமல் வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிட்டுக் கொண்டு, இப்படி அமைச்சர்கள் கைநீட்டி, மிரட்டி, அச்சுறுத்துகின்ற போக்கைப் பார்க்கின்றபோது வருத்தமாக இருக்கின்றது. (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், மறுபடியும் என்னுடைய நேரத்தை எடுத்துக் கொண்டால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் பேசட்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, history repeats itself, நான் இதே வார்த்தையைத்தான் கேட்டேன், மாண்புமிகு முதலமைச்சரிடம், இதே அவையிலே உட்கார்ந்திருக்கிறபோது நான் கேட்டேன்; (குறுக்கீடுகள்) தயவுசெய்து நான் பேசிய பிறகு பேசுங்கள்; குறுக்கிட்டால் என்னுடைய பேச்சு தடைப்படும் என்று. அன்றைய முதல்வர் என்ன சொன்னார் தெரியுமா? 'இங்கே வந்திருப்பவர்கள், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எல்லோரும் வாதத் திறமைமிக்கவர்களாக இருக்க வேண்டும்; எத்தனைக் குறுக்கீடுகள் வந்தாலும், பேசுகிற ஆற்றல், பொன்முடிக்கு இருக்கிறது என்று கருதுகிறேன்.' எனக்கே இருக்கிறபோது, முதலமைச்சராக இருந்திருப்பவர், எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர், நாங்கள் குறுக்கிடுகிறபோது உங்களால் பதில் சொல்ல முடியாதா? நீங்கள் பேசுகிறபோது குறுக்கீடு இல்லாமல் பேசினால், சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கும் எதற்கும் என்னால் பதில் சொல்ல முடியும். ஆனால் பேசுவதற்கு நேரம் அளிக்கப்பட வேண்டும். எங்கள் கழக அரசின் திறமையான நிதி நிர்வாகத்தினால் உபரி வருவாய் கிடைத்திருக்கும். ஆனால், இந்த ** தி.மு.க. அரசின் தவறான நடவடிக்கைகளால், அது வருவாய்ப் பற்றாக்குறையாக மாறிவிட்டது. ஆக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ஆக, தமிழ்நாட்டின் நிதிநிலையில் ஏற்பட்டுள்ள முழுமையான பின்னடைவை, மோசமான சரிவை, அபாயகரமான வீழ்ச்சியைத்தான் இந்தத் திருத்திய நிதிநிலை அறிக்கை தெள்ளத்தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, உபரி வருவாயை ஈட்டி, ஸ்திரமான பொருளாதார நிலையை உறுதிப்படுத்தி, நல்ல ஆரோக்கியமான நிதிநிலையை உருவாக்கி, நல்ல நிலையில் தமிழ்நாட்டை, கம்பீரமாக, தலைநிமிர்ந்து நிற்கச் செய்த சூழ்நிலையை, இரண்டே மாதங்களில் கெடுத்து, தலைகீழாக மாற்றி, சீரழித்து மறுபடியும் தமிழ்நாட்டின் நிதிநிலையை மோசமானதாக்கி, மீண்டு வர முடியாத அதல பாதாளத்திற்குள், படுகுழிக்குள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தள்ளிவிட்டிருக்கிறது, இந்த ** தி.மு.க அரசு. 2006–2007 ஆம் ஆண்டுக்கான வருவாய்ப் பற்றாக்குறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்..

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் சொன்னார்கள், முன்னவருடைய வார்த்தைகளுக்கு, நிதி அமைச்சருடைய வார்த்தைகளுக்கு ** இல்லை என்று சொன்னார்கள். அதே ஒரே வார்த்தையில் எதிர்க்கட்சித் தலைவருடைய வார்த்தைகளுக்கு ** இல்லை என்பதை மட்டும் சொல்லி, வேறு விளக்கம் இப்போது, இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்பவில்லை; ஆனால் விளக்கங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். என்ன சொல்லப் போகிறேன் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன்னாலேயே, எனது பேச்சுக்கு ** என்று மாண்புமிகு நிதியமைச்சர் கூறுவது, விநோதமாக உள்ளது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் சொன்னது, சற்று நேரம் முன்னர், எதிர்க்கட்சித் தலைவர், நிதியமைச்சருடைய பேச்சுக்கு ** என்று சொல்லிவிட்டு அவர்கள் பேசினார்கள். அதை நான் திரும்பச் சொல்வதற்காக. அவருடைய வார்த்தைக்கு ** என்று சொன்னேன். அவர் சொல்லக்கூடிய எல்லாக் கருத்துக்கும் மறுப்பு என்னால் சொல்ல முடியும் என்பதை நான் தெரிவித்தேன். அவ்வப்போது எழுந்துநின்று நான் பேசுவதன் காரணமாக, எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சு தடைப்படுகிறது என்று

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் கருதுகிற காரணத்தால், தடைப்படாமல் பேசுங்கள், மொத்த சப்தத்திற்கும் நான் இறுதியிலே பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையில்லாமல் பேசுங்கள் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார். ஆகவே, அதை மதித்து, தி.மு.க.–வைச் சேர்ந்த பிற அமைச்சர்கள் இனிக் குறுக்கிட மாட்டார்கள் என்று நம்புகிறேன். (குறுக்கீடு) இதோ பாருங்கள்! என்னங்க, இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலேயே சொல்லியிருக்கிறார்கள். அன்றைய அமைச்சர் பொன்னையன் அவர்கள், இதே வார்த்தையைச் சொல்லுகிறபொழுது, அவர்களை உணர்வுகளைத் தூண்டுகிற மாதிரி நீங்கள் பேசக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறார். நீங்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இதுபோன்ற ** பேசுகிறபொழுது, நீங்கள் எந்த அளவிற்கு உணர்ச்சிகளை உருவாக்காமல் பேசுகிறீர்களோ, அதே அளவிற்கு நாங்களும் அமர்ந்து பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை 1,129.23 கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்து குறிப்பிட்டிருப்பதுகூட, அதிகப்படியான மாநில விற்பனை வரி வருவாய் இருக்கும், அதாவது, வணிக வரிகளின் வசூல் அதிகமாக இருக்கும் என்றும், ஆயத்தீர்வை வரவுகள் அதிகமாக இருக்கும் என்றும் எதிர்பார்த்து, மாநில வருவாய் அதிகமாக இருக்கும் என்று மதிப்பீடு செய்ததால்தான், மிகையான மதிப்பீடுகளால்தான், 1,129.23 கோடி ரூபாய் அளவிலாவது வருவாய்ப் பற்றாக்குறை இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை நிலை அதுவல்ல. இந்த நிதியாண்டின் இறுதியில், அல்லது இறுதிக்குள், மாநிலத்தின் நிதிநிலையில் ஏற்பட்டிருக்கும் மொத்த சீரழிவு வெளிப்படையாகப் புலப்படும். நிதிநிலை அறிக்கையின் பக்கம் 75 மற்றும் 76–ல், பத்தி 3 மற்றும் 4–ல், 'தமிழ்நாடு அரசு 2003 ஆம் ஆண்டில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொண்டு வந்து, பின்னர் 2004 மற்றும் 2005–ல் திருத்தப்பட்ட, தமிழ்நாடு
அரசு 2003 ஆம் ஆண்டு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின்படி,
கட்டாயமாக்கப்பட்ட நடுத்தரகால நிதித் திட்டம் செயல்படுத்த
முடியாமல் கைவிடப்பட்டுள்ளது' என்று நிதியமைச்சர் அவர்கள்
வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

For the benefit of the English language periodicals, I will repeat this
paragraph in English: "The Finance Minister has openly confessed that the
Medium Term Fiscal Plan which is mandated by the Tamil Nadu Fiscal
Responsibility Act 2003 which was subsequently amended in 2004 & 2005 has
broken down". Budget-இன் 70 ஆம் பக்கம், பத்தி 182–ல் மொத்த கடன்
பொறுப்புகள் பற்றி, சம்பந்தமே இல்லாத, பொருத்தமற்ற சில கருத்துகள்
தெரிவிக்கப்பட்டுள்ளன. 31–3–2006 நிலவரப்படி, மொத்த கடன்
பொறுப்புகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளில் மொத்த
கடன் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பது, அனைவருக்கும் தெரிந்த ஒன்று.
நாம் எதைப் பார்க்க வேண்டுமென்றால், மொத்த வருவாய் வரவில்,
அதாவது, Total Revenue Receipts–இல் அல்லது மாநிலத்தின் மொத்த
சொந்த வருவாயில், அதாவது, STATES' OWN TOTAL REVENUE–வில்
மொத்த வட்டித் தொகையின் விழுக்காடு என்ன என்பதைத்தான் பார்க்க
வேண்டும். மொத்த வருவாய் வரவுகளில் வழங்கப்பட்ட வட்டித்
தொகையின் விழுக்காடு, 2000–2001–ல், முந்தைய தி.மு.க. ஆட்சியில்,
மிகவும் பயங்கரமான, அபாயகரமான உயரத்தை எட்டிவிட்டது. எனது
தலைமையிலான கழக அரசுதான், கடன் பொறுப்புகளைக் கட்டுப்படுத்தி,
வட்டிச் சுமையையும் குறைத்தது. In para 182, an irrelevant comment about
the total debt stock as on 31-3-2006 has been made. Everyone knows that in a
period of 5 years, the total debt will go up. What is relevant is to see whether the
total interest burden as a percentage of Total Revenue Receipts or even as a
percentage of the State's own total revenue comes down from the alarming
levels which were reached in 2000-2001 under the earlier D.M.K. Government.
In fact, it was my Government which controlled the increase in debt and brought
down the interest burden, as a percentage of total revenue receipts.

முற்பகல் 11–30

2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட Budget Estimate–இல்
மொத்த வருவாய் வரவு 38,475 கோடி ரூபாயாக மதிப்பீடு
செய்யப்பட்டுள்ளது. இதில் மாநிலத்தின் சொந்த வருவாய் 27,010.70
கோடி ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது, மாநிலத்தின்

சொந்த வரி வருவாய், 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளைவிட 22 விழுக்காடு அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சமாதான் திட்டம்மூலம் அதிக வருவாய் கிடைக்கப்பெறும் என்று அரசு கணக்குப் போட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த சமாதான் திட்டத்தின் மூலம், வரி கட்டாமல் ஏய்ப்பவர்கள் அநியாயமாக இலாபம் அடையவும் கூடாது. இதனால் தமிழக மக்கள் நஷ்டத்திற்கு ஆளாக்கப்படவும் கூடாது.

2005–2006 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளில் காட்டப்பட்டதைவிட, 21.95 விழுக்காடு அதிகமாக, 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளில் மாநில ஆயத்தீர்வை வரவுகள் 3,673 கோடி ரூபாயாக இருக்குமென்று காட்டப்பட்டுள்ளது. இதை அரசு எவ்வாறு சாதிக்கப்போகிறது? இரண்டு வழிகள் உள்ளன. ஒருவழி, ஆயத்தீர்வை உயர்த்தப்படலாம்; அல்லது இரண்டாவது வழி, மதுபானக் கடைகளின் எண்ணிக்கையைக் கூட்டி ஏலத்திற்கு விடலாம். இந்த இரண்டும் அரசின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிகிறது. இரண்டில், எந்த வழியைப் பின்பற்றினாலும், அது தவறான கொள்கை முடிவாகவே இருக்கும். மொத்தத்தில் வருவாய் வரவுகளை மிக அதிகமாக மதிப்பீடு செய்தும், மொத்த வருவாய்ச் செலவுகளை மிகவும் குறைவாக மதிப்பீடு செய்தும், இந்த அரசு தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு எல்லோரையும் ஏமாற்றப் பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்பொழுது, இரண்டுவிதமான வருவாய்தான் இருக்கிறது; ஒன்று, Sales Tax, இன்னொன்று, Excise Duty; அப்படி இருக்கும்பொழுது, எப்படி மூவாயிரத்துச் சில்லரை கோடி ரூபாய் அதிகமாக வரும் என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். கடந்தகால ஆட்சியில் மது கொள்முதல் செய்வதில் ஆயத்தீர்வை; அதாவது Excise Duty சரியாக அரசாங்கத்திற்கு வரவில்லை. இந்த ஆட்சி நிச்சயமாக அந்த மது உற்பத்தியாளர்களிடமிருந்து ஆயத்தீர்வை எந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு வரவேண்டுமோ அதற்கான நடவடிக்கை எடுப்பதன்மூலம் அதை முழுமையாகச் செலுத்துவார்கள் என்ற காரணத்தினால்தான், அந்த மூவாயிரத்துச் சில்லரை கோடி ரூபாய் ஆயத்தீர்வையாக இந்த ஆண்டு வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்த அரசு தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு எல்லோரையும் ஏமாற்றப் பார்க்கிறது. இவ்வளவு செய்தும்கூட, 1,129 கோடி ரூபாய் அளவிற்கு மிக அதிகமான வருவாய்ப் பற்றாக்குறை இருக்கிறது. இந்த மிகப் பெரிய பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு, மேலும் கடன் வாங்குவதைத்தவிர. வேறு வழியில்லை. வேண்டுமென்றே, மக்களை திசை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்களை... (குறுக்கீடுகள்)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்பொழுதுதான் தலையிடமாட்டேன் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்கள் சொல்கிற காரணத்தால், அந்தப் புள்ளிவிவரத்திற்கு ஒரு விளக்கம் சொல்லவேண்டியிருக்கிறது. இப்பொழுதுள்ள பற்றாக்குறை, 1,129 கோடி ரூபாய் என்பது மிக அதிகம் என்று சொல்கிறார்கள். 11-வது திட்ட அடிப்படையிலேயும், நிதிக் குழு தெரிவித்திருக்கின்ற ஆலோசனையின் அடிப்படையிலேயும் இந்த வரவு—செலவுத் திட்டத்தில், மாநில மொத்த வருமானத்தில் ரூ.1200 கோடி பற்றாக்குறை இருக்கலாம். எனவே, அதைவிடக் குறைவாகத்தான் இந்தப் பற்றாக்குறை இருக்கிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) பற்றாக்குறையை, சமூகநலன் அடிப்படையில் எண்ணிப்பார்க்கிறபோது, இந்தப் பற்றாக்குறைதான் சமூகநலனைக் காப்பதற்கு, உடனடியாகப் பசியைத் தீர்ப்பதற்குப் பயன்படுகிறது என்றமுறையில், இந்தப் பற்றாக்குறை வரவேற்கப்பட வேண்டியது என்பதும், இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. ஒருவேளை, இது எங்களை நாங்களே ஏமாற்றிக்கொள்வது என்றால், நாட்டுக்காக எங்களை நாங்களே ஏமாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** வேண்டுமென்றே மக்களை திசை திருப்புவதற்காக நிதி அமைச்சர் அவர்கள், மாநில அரசின் கடன் பொறுப்பு மற்றும் செலுத்தவேண்டிய வட்டி பற்றி சில புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார். 31-3-2001 நிலவரப்படி ஒவ்வொரு

மாதமும், 293 கோடி ரூபாய் வட்டியாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், தற்போது ஒவ்வொரு மாதமும் வட்டியாக 446 கோடி ரூபாய் செலுத்தவேண்டியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார். 2001–ல் தி.மு.க. ஆட்சியைவிட்டு இறங்கியபோது...

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் எழுந்துவிட்டார் என்றால், உட்காருங்கள். (குறுக்கீடு) அதுதான் மரபு; உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசவில்லை. புள்ளிவிவரங்களை எல்லாம் எழுதி, முறைப்படுத்திக்கொண்டு அதைத்தான் இங்கே நமக்கு விளக்கமாகச் சொல்கிறார்கள். புள்ளிவிவரத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொல்கிறவகையில், கடந்த காலத்தில் நீங்கள் செலுத்தியதைவிட இப்போது பெரிய வட்டி செலுத்த வேண்டிய ஒரு நிலைமைக்கு எங்களை ஆளாக்கியிருக்கிறீர்கள். அதனால் இந்த ஆட்சி பற்றாக்குறையுமிருந்து வட்டியும் அதிகம் செலுத்த வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறது என்று அவர்களே கேட்கிறார்கள். கேள்வி நியாயம்தான். ஆனால், தி.மு.க. ஆட்சி மாறினபோது 2001–ல் அப்போது வைக்கப்பட்டிருந்த கடன் 28 ஆயிரம் கோடி ரூபாய். நாங்கள் உங்களுக்குச் சொத்தாக வைத்து விட்டுப்போனது, 28 ஆயிரம் கோடி ரூபாய் கடன். இப்போது, நீங்கள் எங்களுக்குத் தந்திருக்கின்ற சொத்து, 56 ஆயிரம் கோடி ரூபாய் கடன். நீங்கள் உங்கள் ஆட்சி முடிவில் விட்டுப்போனது 56 ஆயிரம் கோடி ரூபாய். நாங்கள் அதற்காகக்கூட உங்களைக் குறை சொல்லவில்லை. உங்கள் ஆட்சிமுறையினால், இந்தப் பெரிய கடனை நாங்கள் தாங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



**செல்வி ஜெ ஜெயலலிதா:** 2001–ல் தி.மு.க. ஆட்சியைவிட்டு இறங்கியபோது மாநிலத்தில் நிதிநிலை மிகவும் மோசமாக இருந்தது என்று அடிக்கடி நான் கூறி வந்துள்ளேன். அதற்காகத்தான் நிதியமைச்சர் அவர்கள் இதைக் குறிப்பிட்டிருக்கிறார். 2001–ல் தி.மு.க. ஆட்சியைவிட்டு இறங்கியபோது நிதிநிலை, படு பாதாளத்தில் இருந்ததைப் பற்றியும், மலைபோல் கடன் பொறுப்புகள் இருந்தது பற்றியும், முடிக்கப்பட்ட பணிகளுக்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குக் கட்டப்படாத, பணம் செலுத்தாமல் விடப்பட்ட பாக்கிகள், unpaid bills பற்றியும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருந்த 4,851 கோடி ரூபாய் மொத்த நஷ்டத்தைப் பற்றியும், போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டிருந்த 2,031 கோடி ரூபாய் நஷ்டத்தைப் பற்றியும், இதர பொதுத் துறை அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்த பெரிய தொகைகள் பற்றியும் இந்தச் சட்டப் பேரவையிலேயே, கடந்த ஐந்தாண்டுக் காலமாகப் பலமுறை விளக்கமாகக் கூறியிருக்கிறோம். நாங்கள் மேற்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால், மாநிலத்தில் நிதிநிலையை நல்ல நிலைக்குக் கொண்டுவந்து, ஆரோக்கியமான நிலையில் விட்டுவிட்டுச் சென்றோம்.

தமிழக அரசு மாதந்தோறும் செலுத்த வேண்டியுள்ள வட்டித் தொகை அதிகரித்துள்ளது என்று குறிப்பிடுவதன்மூலம், ஏதோ நாங்கள் மாநிலத்தில் நிதிநிலையை நல்ல நிலையில் வைக்கவில்லை என்பது போல் திமுக.** அரசு உண்மைக்கு மாறான, தோற்றத்தை உருவாக்க முயல்கிறது. வட்டியாகச் செலுத்த வேண்டிய தொகையை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடன்களைப் பெற்று அந்த நிதியை வைத்து பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டது. 2001 முதல் 2006 வரையிலான காலக்கட்டத்தில், நாங்கள் வாங்கிய கடன்களை வளர்ச்சித் திட்டங்களுக்காகவே பயன்படுத்தினோம். ஆனால் 1996 லிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28 ஆயிரம் கோடி ரூபாய் கடனை 56 ஆயிரம் கோடி ரூபாயாக இரண்டு மடங்காக ஆக்கிச் சென்றது மட்டும்ல்ல; வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டதாகச் சொல்கிறார்கள். அவர்களுடைய காலத்திலேதான், அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட bonus நிறுத்தப்பட்டது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட bonus நிறுத்தப்பட்டது. அவர்களுடைய காலத்திலேதான், அரிசி விலை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மூன்றரை ரூபாயிலிருந்து ஆறு ரூபாயாக உயர்த்தப்பட்டது. 2 இலட்சம் பணியாளர்களுக்குமேல் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். புதிய வேலைவாய்ப்புகளே கொடுக்கப்படவில்லை. இவ்வளவையும் செய்துவிட்டு, இவர்கள், இப்போது நாங்கள் சொல்கிறபோது, ஏதோ நிதிநிலையை அப்படியே நிரம்ப தாராளமாக விட்டுவிட்டுப் போனது மாதிரி பேசுவது எல்லாம் சரியாக இல்லை. எதிர்க்கட்சியிலே இருக்கிற தலைவர்களுக்குப் புள்ளிவிவரங்கள் இல்லாமல் இருக்கலாம். நீங்கள் வைத்துவிட்டுச் சென்ற நிதிநிலையைப்பற்றி எங்களுடைய நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பெருந்தன்மை கருதி, உங்களைப் போல் ஐந்து ஆண்டுகளும், "விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள், விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள், விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள்" என்று திரு. பொன்னையன் சொன்னதுபோல சொல்லக்கூடாது என்ற நாகரிகத்தோடு, இருக்கிற புள்ளிவிவரங்களை மட்டும் சுட்டிக்காட்டி இருக்கிறார்களேதவிர, குறை சொல்ல வேண்டுமென்பதுகூட, இந்த அரசினுடைய நோக்கம் அல்ல. ஆனால், உண்மையான நிலவரம், 28 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து, 56 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு 2 மடங்காகக் கடனை வைத்துவிட்டுப் போயிருக்கிறீர்கள் என்பதுதான் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*முற்பகல் 11–40*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** 1996–லிருந்து 2001 வரை இருந்த முந்தைய தி.மு.க. அரசு, கடன்களை வாங்கி, அந்தப் பணத்தையெல்லாம் Revenue expenditure–காக, வருவாய் செலவிற்காகப் பயன்படுத்தியது. அதுதான் எங்கள் ஆட்சிக்கும், முந்தைய தி.மு.க. ஆட்சிக்குமிடையே இருக்கின்ற பெரிய வித்தியாசம். இதில் எதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்? மொத்த வருவாய் வரவுகளில், எத்தனை சதவிகிதம், வட்டியாகச் செலுத்தப்படுகிறது என்பதைத்தான் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2000–2001 ஆம் ஆண்டில் அது 17.06 வரை சென்றது. ஆனால் அதனை 2005–2006 ஆம் ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடுகளில் நாங்கள் 14.37 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைத்து விட்டோம். மதுபான விற்பனை மற்றும் ஆயத்தீர்வைமூலம் ஈட்டப்பட்ட மொத்த வருவாய், 1996–லிருந்து 2001 வரையிலான தி.மு.க. ஆட்சியில் 12,715.98 கோடி ரூபாய். 2001–லிருந்து 2006 ஆம் ஆண்டு வரையில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் 21,945.39 கோடி ரூபாய்.



(மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கூடுதலாக நாங்கள் ஈட்டிய வருவாய் 9,229.41 கோடி ரூபாய். மணல் குவாரிமூலம் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் 1996 முதல் 2001 வரையில் தி.மு.க. ஆட்சியில் 64.08 கோடி ரூபாய்தான். ஆனால் அதுவே 2001–லிருந்து 2006 வரையிலான அனைத்திந்திய அண்ணா தி.மு. கழக ஆட்சியில் 385.06 கோடி ரூபாயாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக நாங்கள் ஈட்டிய வருவாய் 320.98 கோடி ரூபாய் ஆகும். வணிக வரிகள்மூலம் ஈட்டிய மொத்த வருவாய் 1996–லிருந்து 2001 வரையில் இருந்த தி.மு.க. ஆட்சியில் 34,440 கோடி ரூபாய் ஆகும். ஆனால் அதுவே 2001–லிருந்து 2006 வரையில் இருந்த அனைத்திந்திய அண்ணா தி.மு. கழக ஆட்சியில் மொத்த வருவாய் 59,770 கோடி ரூபாயாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக நாங்கள் ஈட்டிய வருவாய் 25,330 கோடி ரூபாயாகும். ஆக மொத்தம், இந்த 3 இனங்களில் மட்டும் முந்தைய தி.மு.க. ஆட்சியைவிட எங்கள் ஆட்சிக் காலத்தில், எங்கள் திறமையான நிர்வாகத்தால் 34,880.39 கோடி ரூபாய் கூடுதல் வருவாயை ஈட்டியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலான கடன் பொறுப்புகளைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள நிதி அமைச்சர், நிதிநிலை அறிக்கையில் ஏன் இதையும் குறிப்பிடவில்லை?

பத்தி 6–ல், கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய 6,866 கோடி ரூபாய்க்கான கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2004–ல் எனது தலைமையிலான அரசு, விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை மாற்றி அமைத்த பிறகு, Reschedule செய்த பிறகு, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்திய 400 கோடி ரூபாய் தொகையும், இதில் சேர்க்கப்பட்டுள்ளது என்று அறிகிறேன். அப்படியானால், கடனைத் திருப்பிக் கட்டிய விவசாயிகளுக்கு அந்த 400 கோடி ரூபாய் திருப்பித் தரப்படுமா? இதற்கு அரசு விளக்கம் தர வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கேட்கிறார்கள். ஆகவே, நான் சொல்லுகிறேன். 400 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. பல காலக்கட்டத்தில் 400 கோடி ரூபாய் என்பது வட்டியாக அவர்கள் செலுத்த வேண்டிய தொகை தள்ளுபடி செய்யப்பட்டது– (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் பேசியதற்குப் பின்னர், நீங்கள் உங்கள் கருத்தை அப்புறம் சொல்லுங்கள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக்கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தாங்கள் சொல்லக்கூடிய எல்லா விளக்கத்தையும் சொல்ல நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ரூ.6,800 கோடி தள்ளுபடி என்று சொன்னால், அந்த விவசாயிகள் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டத் தேவையில்லை என்று அவர்களுக்கே வங்கியினால் அறிவிப்பு தரப்பட்டு, அவரவர் செலுத்த வேண்டிய தொகையை, 'நீங்கள் செலுத்தத் தேவையில்லை' என்று அவர்களுக்கே தரப்பட்டு விட்டது. இப்பொழுது தள்ளுபடி செய்யப்பட்டது கடன் தொகை. அப்பொழுது தள்ளுபடி செய்யப்பட்டது, 2, 3 ஆண்டுகளின் வட்டி. அந்த வட்டி தள்ளுபடி செய்யப்பட்டதற்குப் பின்னர், அது கணக்கிலே இருக்காது. தள்ளுபடி செய்யப்பட்ட அந்த வட்டியைக் கணக்கிலே வைத்திருப்பதற்கு எந்தக் கூட்டுறவு வங்கிக்கும் நியாயம் கிடையாது. ஆக, இப்பொழுது கூட்டுறவு வங்கியிலே உள்ள கடன் என்பது விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனைத் தள்ளுபடி செய்து கொடுத்ததோடு மட்டுமல்ல. அவர்களுக்குக் கடன் இல்லை என்பதற்கான ஒரு Certificate முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு சில இடங்களில் மட்டும்தான் பாக்கி இருக்கிறது. அதுவும் நாளையோடு முடித்துவிடுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிலும் இப்படிதான். நான் கேட்ட கேள்வியே வேறு. அமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்ற பதிலே வேறு. (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்டது, 2004–ல் எனது தலைமையிலான அரசு, விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை மாற்றி அமைத்து Reschedule செய்த பிறகு, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குத் திருப்பி செலுத்திய 400 கோடி ரூபாய் தொகையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது என்று அறிகிறேன் என்று கேட்டேன். அப்படியானால்... (குறுக்கீடு)



முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தள்ளுபடி செய்யப்பட்டது, விவசாயி எந்தக் கடன் கட்ட வேண்டியதாக மிச்சம் இருந்ததோ, அந்தக் கடன்தான். எந்த விவசாயிக்கோ அரசாங்கமே ஏற்கெனவே தள்ளுபடி செய்திருந்தால், அது இந்தக் கடனிலே சேர்க்கப்படவில்லை. தள்ளுபடி செய்தது, ஏற்கெனவே கணக்கில் நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, தள்ளுபடியையும், அவர்களாக செலுத்தியதையும்தவிர, செலுத்த வேண்டியுள்ள பாக்கி மட்டும்தான், இந்த 6,800 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி செய்யப்பட்ட கடனைப் பற்றி நான் கேட்கவில்லை. 2004–ல் எங்கள் கழக அரசு விவசாயக் கடன்களை மாற்றி அமைத்த பிறகு, விவசாயிகள் 400 கோடி ரூபாய் அளவுக்குக் கடன்களை திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற இந்த 6,866 கோடி ரூபாய் தள்ளுபடி என்பதில், இந்த 400 கோடி ரூபாயையும் சேர்த்திருக்கிறீர்கள் என்று நான் அறிகிறேன். ஆகவே, அந்த 400 கோடி ரூபாயைக் கட்டிய விவசாயிகளுக்குத் திருப்பிச் செலுத்துவீர்களா என்றுதான் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலிலே அதையே நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 400 கோடி ரூபாயையும் சேர்த்து நாங்கள் அறிவிக்கவில்லை. கூட்டுறவு வங்கியிலே எவ்வளவு இருந்ததோ அதைத்தான் நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அப்படி 400 கோடி ரூபாயைச் சேர்த்திருந்தால், கூட்டுறவு வங்கியினுடைய நிர்வாகிகள், அந்தச் சங்கத் தலைவர்கள் இவ்வளவு நாட்களில் அரசுக்குத் தெரிவித்திருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, எனது ஆட்சிக் காலத்திலேயே 1,169.31 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் மீதான வட்டி.

அபராத வட்டி, திரண்ட வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தோம். எங்கள் ஆட்சிக் காலத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் மறுக்கிறேன். 3, 4 ஆண்டுக் காலத்தில் அரசு தள்ளுபடி செய்ததாக, கூட்டுறவு வங்கிகளுக்குத் தெரிவிக்கப்பட்ட தொகை, ரூபாய் 400 கோடிக்குள்ளாகத்தான் இருந்தது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகளிடம் விவரங்களை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கேட்டுப்பெறலாம். எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் தள்ளுபடி செய்த இந்த 1,169.31 கோடி ரூபாய் தொகையையும் உள்ளடக்கித்தான், இதையும் சேர்த்துத்தான் இப்போது ஒட்டுமொத்தமாக 6,866 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் தள்ளுபடி செய்திருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையில் தம்பட்டம் அடித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்பட்டம் எங்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல, எல்லோருக்கும் தம்பட்டம் சொந்தம். இப்போது தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எதிர்க்கட்சி... (குறுக்கீடுகள்) அமைச்சர்... (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** உட்காருங்கள், தயவுசெய்து. நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் நின்றாலும், நான் பேச வேண்டியதைப் பேசுகிறேன், கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, அமைச்சர் அவர்கள் எழுந்து கருத்து சொல்லும்போது எந்த உறுப்பினராக இருந்தாலும் உட்கார்ந்து விடவேண்டும். அதுதான் மரபு. (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) அதைத்தான் சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் பேசி முடிக்கட்டும், அதற்குப்பிறகு சொல்லுங்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நான் பேசவில்லை, அவர்கள் கேட்கிற கேள்விக்குத்தான் பதில். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், விவரங்களோடு பல கேள்விகளைக் கேட்கிற காரணத்தால், அவர்கள் சொல்கிற விவரங்கள் தவறு என்று சொல்ல வேண்டிய ஒரு கட்டாயமான கடமை எனக்கிருக்கிறது. இல்லையானால், பேசுகிற அனைத்திற்கும் மொத்தமாக நான் இறுதியாக பதில் சொல்லலாம். 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அன்றைய நிதி அமைச்சர் அவர்கள் படித்த அந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள செய்தி, 'கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெற்று, திருப்பிச் செலுத்தாமல் உள்ள தவணை கடந்த நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும்வகையில், அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையான—முதல் அல்ல; வட்டி, அபராத வட்டித் தொகையான—ரூ.310.5 கோடியைத் தள்ளுபடி செய்வதென இவ்வரசு முடிவு செய்ததை, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்' என்று அவர் பேசியிருக்கிறார். அப்படித்தான் தள்ளப்பட்டது. அந்தத் தொகையை வங்கியிலே இப்போது சேர்த்துக் கணக்கிட முடியாது; கணக்கிடப்படவில்லை.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். (குறுக்கீடு) எனக்கு ஒரு சந்தேகம். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், ஏதோ அவர், கோபாலபுரத்திற்கு அந்தச் சொத்தையெல்லாம், அரசாங்கத்தினுடைய சொத்தை, எடுத்துக் கொண்டு போய்விட்டதைப் போலவும், இவர், போயஸ் தோட்டத்திலிருந்து கொண்டுவந்து போட்டு, இதை நிரப்புவதைப் போலவும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். இது நியாயமா? அடுத்த கட்டத்திற்குப் போகத் தேவையில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவர் பொதுவாகத்தான் பேசியிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் பொதுவாகத்தான் பேசியிருக்கிறார்.

அவ்வளவு பேரும் உட்காருங்கள். பொதுவாகத்தான் பேசியிருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக எல்லோரும் உட்காருங்கள். நடவடிக்கை எடுப்பேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், முதலில் அமைதியாக எல்லோரும் உட்காருங்கள், நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சொல்கின்ற பதில்களும், அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துகளும், அவர்களுடைய இயலாமையைத்தான் காட்டுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. கோ.க. மணி (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒட்டுமொத்த கடன் மற்றும் வட்டித் தொகையான– (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். சரி, பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இவ்வளவு நேரம் பேசினீர்கள். அப்புறம் என்ன, என் நேரத்தை எடுத்துக்கொள்கிறீர்கள்? I am not yielding. ஒட்டுமொத்த கடன் மற்றும் வட்டித் தொகையான 6,866 கோடி ரூபாயும் தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, கூட்டுறவு வங்கிகளுக்கு ஈடாகச் செலுத்த, வெறும் 1,435 கோடி ரூபாய் மட்டுமே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி நெருக்கடி ஏற்படும். கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மறுப்புச் சொல்வதையோ, ஓர் அமைச்சர் சொல்வதையோ, தயவுசெய்து நீங்கள் அதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்களே பேசுகிறபோது, குறுக்கிடுகிறார்களே என்று தாங்கள் தயவுசெய்து எண்ணக் கூடாது. யார் பேசினாலும், யாரும் மறுக்கலாம். அதிலும் அமைச்சர்களுக்கு அந்தக் கடமை இருக்கிறது. குற்றச்சாட்டு வருகிறபோது, எங்களை நோக்கி வருகிறது. அந்தக் குற்றச்சாட்டுக்கு நாங்கள் விளக்கம்



சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. குறிப்பாக, இப்பொழுது நீங்கள், 6 ஆயிரத்துச் சொச்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்காக, அந்தத் தள்ளுபடி தொகையை, உடனே கூட்டுறவு வங்கிகளுக்குத் தரப்படவில்லை என்று சொல்கிறீர்கள். Fiscal management, நிதியை நிருவாகம் செய்கின்ற முறை; அந்த நிதியை நிருவாகம் செய்கிற முறையும், பொறுப்பும் இநத அரசுக்கு இருக்கிறது. அந்த நிதி நிருவாக முறையிலே, 450 கோடி ரூபாய் அளவிற்கு நபார்டு வங்கிக்கு, இந்த ஆண்டுக்கு நிதி கட்டப்பட்டிருக்கிறது. ஆயிரம் கோடி ரூபாய், முதல் தவணையாகக் கூட்டுறவு வங்கிகளுக்கு வரவு செலவுக்கு வசதியாக, உடனடியாகக் கடன் வழங்குவதற்குத் தரப்பட்டிருக்கிறது. கூட்டுறவு வங்கிகளிடத்திலே ஏற்கெனவே முதலீடுகள் இருக்கின்றன. Depositors கொடுத்த பணம் இருக்கிறது. அவர்களுக்கு வங்கித் தொழில் முறையிலே சேர்ந்த பணம் இருக்கிறது. அவர்கள் அதை வைத்து நிருவகிப்பார்கள். ஆண்டுதோறும் அவர்களுக்குத் தரவேண்டிய நிதியைவிட, அதிக நிதியும் கொடுத்து, அதுவும் முன்னர் எப்படி அதிமுக. ஆட்சிக் காலத்திலே கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டதோ, அந்த முறைப்படியே, அதைவிட அதிகமாகவே, விவசாயிகளுடைய தேவைக்கேற்ப, அதிக நிதியும் கொடுத்து, அந்த விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள். கூட்டுறவு வங்கிகள் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** கூட்டுறவு வங்கிகளுக்கு ஈடாகச் செலுத்த, வெறும் 1,435 கோடி ரூபாய் மட்டுமே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி நெருக்கடி ஏற்படும். கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படும். முதலமைச்சர், அங்கிருந்து நான் எழுதிக் கொண்டு வந்திருப்பதாக கூறிக் கொண்டிருக்கிறார். இப்படிச் சொல்வார்கள் என்று தெரியும். அதனால்தான் என் கைப்படவே எழுதிய குறிப்புகளைக் கையோடு கொண்டு வந்திருக்கிறேன். இந்த உரை, யாரோ எழுதிக் கொடுத்தது அல்ல. நானே, எனது சிந்தனையில் உதித்த கருத்துகளை எழுதிக் கொண்டு வந்தது; இப்படிக் குறுக்கீடுகள் இருக்கும் என்பதால்தான்–

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே. அம்மையார் பேசுகிறபொழுதே, இந்த முறை யாரோ எழுதிக் கொடுத்தது அல்ல என்று சொல்லியிருக்கிறார். இதுவரையிலே யாரோ எழுதிக் கொடுத்ததைப் படித்ததை ஒப்புக்கொண்டதற்கு நன்றி. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது குறிப்புகளை எழுதிக் கொண்டுவராமல் நான் பேசினேன். ஆனால், ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து திரும்பத் திரும்ப குறுக்கீடுகள் இருந்ததால், என்னைப் பேசவிடாமல், எனது சிந்தனை ஓட்டம் கலைக்கப்பட்டது. யாருக்குமே அப்படித்தான் இருக்கும். ஆகவே, பேசவேண்டிய பல கருத்துகளை அன்றையதினம் பேச முடியாமல் போய்விட்டது. அதனால்தான், என்னுடைய சிந்தனைகளையே நான் எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். அன்றையதினம் குறிப்புகளில்லாமல் என்னால் பேசமுடியும் என்பதைக் காட்டினேன். அன்றையதினம், பதில் சொல்ல முடியாமல் முதலமைச்சர் திணரியதையும் இந்த நாடே பார்த்தது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அம்மையாரிடத்திலே திணரவேண்டிய அவசியம் எனக்கு எதுவுமே இல்லை. *(சிரிப்பு)* எனக்கு இயல்பான வலிவு, மொழியிலும் உண்டு, உடலிலும் உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-55*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அம்மையாரிடம் திணர வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் அறிவித்த அபத்தமான, நிறைவேற்றமுடியாத தேர்தல் வாக்குறுதிகள் அவரைத் திக்குமுக்காடச் செய்து, திணர வைத்துக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படும். இறுதியில் இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,600 கோடி ரூபாய் தள்ளுபடி செய்தோம் என்று சொன்னீர்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது 1,300 கோடி ரூபாய் அல்ல, அபாரத வட்டித் தொகை 300 கோடிதான் தள்ளுபடி செய்யப்பட்டது என்று முன்னாள் நிதியமைச்சர் பொன்னையன் அவர்கள் இதே அவையிலே படித்ததைக் குறிப்பிட்டார்கள். அதை நீங்கள் அப்படியே நழுவ விட்டுவிட்டு, வேறு பிரச்சினைக்குச் சென்றுவிட்டீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதையும் நழுவ விடவில்லை. இந்தத் தள்ளுபடி என்பது ஒரு கட்டத்தில் செய்யப்பட்டது அல்ல. மூன்று, நான்கு கட்டங்களில் செய்யப்பட்டது. அந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்ல வேண்டுமானால், அதிக நேரம் பிடிக்கும். வட்டி, அபராத வட்டி, திரண்ட வட்டி அனைத்தையும் சேர்த்துத்தான் நான் அந்தத் தொகையைச் சொன்னேன். கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படும். இறுதியில் இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு மூடுவிழா நடத்த வேண்டிய சூழ்நிலைதான் உருவாகும். கூட்டுறவு அமைப்புகளின் அழிவில்தான் இது போய் முடியும். இந்தத் திட்டத்தினால் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இருக்காது.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய ஆட்சிக் காலத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் deposit-ஏ சேகரிக்கக் கூடாது என்று தடையாணை பிறப்பித்தது, கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காகவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். *(குறுக்கீடு)* மற்ற உறுப்பினர்கள் யாரும் பேச உரிமை இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்தத் திட்டத்தினால் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இருக்காது. கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று ஒரு சான்றிதழ் விவசாயிகளுக்கு அனுப்பப்படுகிறது. அதில் இன்றைய முதல்வரின் படம் பதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காகிதத்தை வைத்துக்கொண்டு, விவசாயிகள் என்ன செய்யமுடியும்? தகுதியுள்ள பெரும்பாலான விவசாயிகளுக்குப் புதிய கடன் வழங்கப்படவில்லை. விவசாயிகளின் தற்போதைய முக்கிய அடிப்படைத் தேவை, புதிய பயிர்க் கடன்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தங்கள்மூலம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வங்கிகளில் பணியாற்றுகிறவர்கள் பெரும் பகுதி, அவர்களுடைய ஆட்கள். அவர்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தவறுகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். நேற்றையதினம்கூட, ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும், surprise–ஆகச் சென்று, ஒரு சங்கத்தைப் பார்வையிட்டு, தவறு செய்தவரை அங்கேயே suspend செய்திருக்கிறோம். இப்படிப் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே அவர்களுடைய ஆட்களால், எங்கள் ஆட்சிக்குக் கெட்ட பெயர் வரவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு இது நடந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் இன்றைக்கு அவையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்பதை ஆணித்தரமாக நான் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் சொல்கிறேன். இந்த ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட, கூட்டுறவு ஸ்தாபனத்தை அழிக்காமல் அதைவிட வளர்ச்சி செய்து காப்பாற்றிக் கொடுக்கிற உறுதியை, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிறார். அதை நான் நிறைவேற்றுவேன் என்று இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** விவசாயிகளின் தற்போதைய இன்றியமையாத அடிப்படைத் தேவை புதிய பயிர்க் கடன்தான். ஆனால் அந்தப் புதிய பயிர்க் கடன் பெறமுடியாத அளவிற்கு மிகவும் கடுமையான வழிகாட்டு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளதாக அறிகின்றேன். புதிய பயிர்க் கடன் வழங்க...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இரண்டு வரிகூட பேச விடமாட்டேன் என்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எதையும் சொல்லலாம் என்று சொன்னால் எப்படிக் கேட்டுக்கொள்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். இருங்கள், சம்பந்தப்பட்ட துறையைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர்



சம்பந்தப்பட்ட துறையைப்பற்றிப் பேசும்போது, அவர் பதில் சொல்வதற்கு அவருக்கு உரிமை இருக்கின்றது. உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** புதியதாக ஒரு உத்தரவே போட்டிருக்கிறோம். எந்தவிதமான பழைய கட்டுப்பாடுள்ள உத்தரவையும் இரத்து செய்துவிட்டு, V.A.O. certificate மட்டும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தால், உடனடியாகக் கடன் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். அதன்படி கடன் வழங்கப்பட்டு வருகின்றது. ஆங்காங்கு குற்றம் குறைகள் இருந்தால், தெரிவித்தால், நிச்சயமாக அவர்களுக்கும் கடன் வழங்குகிற நடவடிக்கையை இந்த அரசு நிச்சயம் மேற்கொள்ளும். (குறுக்கீடு)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சராக இருக்கிற காரணத்தால், ஒரு புள்ளிவிவரத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு 2005–2006–ல், அந்த அரசால் இப்படிப்பட்ட கூட்டுறவு வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 1,132 கோடி ரூபாய். இப்போது அதைவிட அதிகமாக 1,235 கோடி ரூபாய் அளவுக்குப் பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகையை வழங்க அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் தெரிவிக்கிறார். இதையேதான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், யதார்த்த உண்மை என்னவென்றால் விவசாயிகளுக்கு, பெரும்பாலான விவசாயிகளுக்குப் புதிய கடன் கிடைக்கவில்லை. புதிய பயிர்க் கடன் வழங்கப்படவில்லையென்றால், விவசாயிகள் எந்தப் பயிரையும் சாகுபடி செய்ய முடியாது. கூட்டுறவு வங்கிகளுக்கு அதிகமான தொகையை அரசு செலுத்தவில்லையென்றால் வங்கிகளில் வைப்பு நிதி போட்டு வைத்தவர்களுக்குப் பணத்தைத் திருப்பித் தர முடியாமல் வங்கிகளும் திவாலாகிவிடும்.

குறுவை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் கடைமடைப் பகுதிகளுக்குப் போதுமான காவிரி நீர் போய்ச் சேரவில்லை என்று பரவலாகக் கூறப்படுகிறது. பத்திரிகைச் செய்திகளும் அவ்வாறே கூறுகின்றன. இந்த ஆண்டு காவிரி நீர்வரத்தைப் பொறுத்தவரை, நிறைவான ஆண்டாகவே இருந்திருக்கிறது. தொடர்ந்து 300 நாட்களுக்கு மேலாக, மேட்டூர் அணையில் 100 அடி உயரத்திற்குமேல், காவிரி நீர் இருப்பு இருந்துள்ளது. இவ்வாறு இருந்தும், இவ்வளவு இருந்தும் இந்த ** தி.மு.க. அரசின் மோசமான, திறமையற்ற நிர்வாகத்தினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ** என்று சொல்வதெல்லாம் தேவையில்லை. (குறுக்கீடு) ஏனென்றால் ஏற்கெனவே அவர் விளக்கம் சொல்லிவிட்டதால் அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** என்பது நீக்கப்படுகிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறீர்களா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே விளக்கம் கொடுத்தாகிவிட்டது. விளக்கம் கொடுத்ததற்குப் பிறகும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தால், அதற்கு என்ன அர்த்தம்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, She is insulting the Constitution itself. முதலில் அந்த வார்த்தையை எடுக்க வேண்டும். ** ஒரு Government-ஐ நடத்தவே முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** Members majority இருந்தால்தான் ஒரு அரசாங்கத்தை நடத்த முடியும். முதலில் அதை அவைக்குறிப்பிலிருந்து எடுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடைக்குத் தண்ணீர் செல்லாததைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ஒழுங்காக வாய்க்கால்களைத் தூர் வாராததுதான். அதுமட்டுமல்ல; தூர் வாரியதாக கடைசி நான்கு மாதங்களிலே, அதிக தொகையை எடுத்துக்கொண்டு, அவற்றைத் தூர் வாராமல் இருந்ததையெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது புள்ளிவிவரங்களோடு சுட்டிக்காட்ட இருக்கிறோம். அதையும் சுட்டிக்காட்டுகிறோம். அதுதான் காரணம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். யாரும் குறுக்கிட்டுப் பேசக் கூடாது. உறுப்பினர் திரு. விசுவநாதன் குறுக்கிடக் கூடாது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தொடர்ந்து 300 நாட்களுக்கு மேலாக மேட்டூர் அணையில் 100 அடி உயரத்திற்கு மேல் காவிரி நீர் இருப்பு இருந்துள்ளது. இவ்வளவு இருந்தும் இந்த தி.மு.க. அரசின் மோசமான, திறமையற்ற நிர்வாகத்தினால் அப்பகுதிகளில் உள்ள விவசாயிகளால் குறுவை சாகுபடி செய்ய முடியவில்லை.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த விவசாயிகளில் 20 விழுக்காடு பேர்தான் கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த 20 விழுக்காடு பேர்தான் கூட்டுறவு வங்கிகளிடம் கடன் பெற்றுள்ளனர். மற்றவர்கள் எல்லாம் அதாவது, நமது விவசாயிகளில் 80 விழுக்காடு பேர், வணிக வங்கிகளிடம்தான் கடன் பெற்றுள்ளனர். வணிக வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய மொத்த கடன் 15,354 கோடி ரூபாயாகும். இந்த விவசாயிகள் என்ன பாவம் செய்தார்கள்? வறட்சியும், சுனாமியும், கன மழையும், வெள்ளமும் இவர்களையும்தானே பாதித்துள்ளது? இவர்களின் கடனையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் 6,866 கோடி ரூபாய். வணிக வங்கிகளுக்கு விவசாயிகள்

செலுத்த வேண்டிய மொத்தக் கடன் 15,354 கோடி ரூபாய். இரண்டையும் கூட்டினால் விவசாயிகள் பட்ட மொத்தக் கடன் 6,866 கோடி ரூபாய் plus 15,354 கோடி ரூபாய்; ஆக மொத்தம் 22,220 கோடி ரூபாய். எனவே, ஒட்டுமொத்தமாக...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை, நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை வேண்டுமென்றே குறுக்கிட்டு நாங்கள் கேள்வி கேட்க விரும்பவில்லை. அவரே தவறான விவரங்களை இந்த அவைக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். அவர் சொன்னார்; தி.மு.க ஆட்சியிலே 6,866 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்கள்தான் இரத்து செய்யப்பட்டு இருக்கின்றன; ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே 15 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் கடன் பெற்று இருக்கிறார்கள் என்ற கருத்தை இங்கே பதிவு செய்தார். நான் கேட்க விரும்புவது, அ.தி.மு.க. ஆட்சியிலே இருக்கும்போது, நீங்கள் வட்டியும், அபராத வட்டியும் இரத்து செய்தீர்களே, அப்போது கூட்டுறவு வங்கிகளிலே இருந்த அந்தக் கடன்களுக்கு மட்டும் இரத்து செய்தீர்களா, அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே வாங்கிய அந்தக் கடன்களுக்கும் இரத்து செய்தீர்களா என்றுதான் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள், அவர்களுக்கு எல்லாம் நாங்கள்தான் வழிகாட்டி என்று ஒப்புக் கொள்கிறாரா? நாங்கள் என்னென்ன செய்தோமோ, அதைத்தான் நீங்களும் பின்பற்றுவீர்களா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு மாநில அரசும் விவசாயிகளுக்குத்



தங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளிலேயிருந்துதான் கடன்களையோ, வட்டியையோ இரத்து செய்ய முடியுமே தவிர, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே வாங்கிய கடன்களை இந்தியாவிலே எந்த அரசும் இதுவரை இரத்து செய்ததில்லை. நாங்கள் அதைத்தான் செய்திருக்கிறோம். கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சியிலே எவ்வளவு தள்ளுபடி செய்து இருந்தாலும் அபராத வட்டி தள்ளுபடி செய்து இருந்தாலும், 31–3–2006 வரையில், கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயிகள் எவ்வளவு கடன் செலுத்த வேண்டுமோ, அவை அத்தனையையும் கணக்கிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6,866 கோடி ரூபாய் என்ற புள்ளிவிவரங்களைப் பெற்று, அதை இரத்து செய்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் தெளிவான விவரம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) அமைச்சர் சொன்னதற்குப் பிறகு... (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. point of order, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of order, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசுக்கு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசுதான் குரு, வழிகாட்டி, ஆசான் என்று ஒப்புகொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசுக்கு, எங்களுடைய அரசு நடந்த முறைதான் வழிகாட்டியா?' என்று கேட்கிறார். ஒருவேளை அது வழிகாட்டியாக இருந்தாலும்கூட, அதைத்தான் கண்டித்து நீங்கள் பேசுகிறீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய கலைஞர் ஆட்சியிலேயும் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. கடனேகூட 10,000 கோடி ரூபாய், வி.பி. சிங் அவர்கள் சொல்லி, தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். ஆகவே எல்லா அரசுகளும், நாங்கள் செய்ததைத்தான் நீங்கள் செய்து இருக்கிறீர்கள். நீங்கள் செய்தற்குப் பிறகு, ஒரு புதிய திட்டமாக, கடனை ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்திருக்கிற அரசு, கலைஞருடைய அரசு. அதுமட்டுமல்ல; தேர்தல் அறிக்கையிலேயே நாங்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என்றுதான் தேர்தல் அறிக்கையிலே சொல்லி இருக்கிறோமேதவிர, ஒட்டுமொத்த கடன்களையும், கல்யாணத்திற்கு வாங்கியது, மற்றதற்கு வாங்கியது எல்லாம் தள்ளுபடி செய்வோம் என்று சொல்லவில்லை. அதைத்தான் கலைஞர் அவர்கள் செய்து இருக்கிறார்கள். சொன்னதைச் செய்கிற தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை நிரூபித்து இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது இந்த அரசிடம் கேட்க விரும்புகிற கேள்வி இதுதான். தமிழ் நாட்டு உழவர் பெருமக்கள், ஒட்டுமொத்தமாக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய, மொத்த விவசாயக் கடன் தொகையான. 22,220 கோடி ரூபாய் முழுவதையும், தமிழக அரசு தள்ளுபடி செய்து, கூட்டுறவு வங்கிகளுக்கும், வணிக வங்கிகளுக்கும் இந்த அரசே, முழு தொகையையும் செலுத்த வேண்டும். செய்வீர்களா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

பத்தி 87–ல் Metro Rail திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாக அறிவித்து இருக்கிறீர்கள். எனது ஆட்சியில் Mono Rail திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. வேண்டும் என்றே, வீம்புக்காக, நல்ல



திட்டமான Mono Rail திட்டத்தை நிராகரித்து, சென்னை மாநகருக்கு எந்தவகையிலும் ஒத்து வராத, பொருந்தாத Metro Rail திட்டத்தைக் கொண்டுவரப் போவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

மக்கள் பணத்தை ஏன் இப்படி வீணடிக்கிறீர்கள்? Metro Rail திட்டத்தைச் செயல்படுத்த, ஒரு கிலோ மீட்டருக்கு 250 கோடி ரூபாய் செலவாகும். ஆனால் Mono Rail திட்டத்தைச் செயல்படுத்த ஒரு கிலோ மீட்டருக்கு 50 கோடி ரூபாய்தான் செலவாகும். Metro Rail திட்டத்தை முடிக்க, 15 ஆண்டுக் காலம் ஆகும். ஆனால், Mono Rail திட்டத்தை, 1½ ஆண்டுகளில் முடித்துவிடலாம். முதல் கட்டப் பணிகளை 1½ ஆண்டுகளிலும், முழுமையான திட்டத்தை 5 ஆண்டுகளிலும் முடித்துவிடலாம்.

பிற்பகல் 12–10

நில நடுக்கம் ஏற்படக்கூடிய பகுதியில், Seismic Belt எனப்படும் பகுதியில், சென்னை உள்ளதாக விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டு உள்ளது. எனவே, பூமியைத் தோண்டி பூமிக்கு அடியில் Metro Rail-குத் தேவையான சுரங்கப் பாதையை அமைப்பது என்பது அபாயம் நிறைந்ததாகும்; அதன் வழியே பயணம் செய்யும் மக்களின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும்; பயணிகளின் பாதுகாப்பிற்கு உறுதியளிக்க முடியாது என்று கருதப்படுகிறது. கடல் அருகே இருப்பதால் சுரங்கப் பாதைக்குள் நீர்க் கசிவு—seepage—இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. ஆனால் Mono Rail திட்டத்தில் பூமியைத் தோண்டி பூமிக்கு அடியில் செல்லவேண்டிய அவசியமே இல்லை. பயணிகளின் பாதுகாப்பிற்கு முழு உத்தரவாதம் அளிக்க முடியும். Metro Rail திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமானால், மிகவும் அகலமான சாலை, இன்றியமையாததாகும். அத்தகைய அகலமான சாலைகள், சென்னை மாநகரில் மிக மிகக் குறைவு. போக்குவரத்து அதிகமுள்ள முக்கிய சாலைகள், குறுகிய சாலைகளாகவே உள்ளன. சாலைகள் ஏற்கெனவே குறுகலாக உள்ள நிலையில், Metro Rail திட்டத்திற்காக அந்தச் சாலைகளையும தோண்டும்போது, பல ஆண்டுக் கணக்கில் பணி நடைபெற்று முடியும்வரை போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க முடியாது. ஆனால், Mono Rail திட்டத்தைப் பொறுத்தவரை, அகலமான சாலைகள் தேவையே இல்லை. போக்குவரத்து நின்றுபோகும்வகையில் சாலையைத் தோண்ட வேண்டிய அவசியமும் இல்லை. பூமிக்கு மேலே உயரத்தில் rail பாதை அமைப்பதால், பணிமுடியும்வரை போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் எந்தவிதமான இடையூறும் இருக்காது. Metro Rail திட்டம், சுற்றுப்புறச் சூழலைக்

கடுமையாக மாசுபடுத்தும். இதனால் மாநகர மக்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டு, பல நோய்கள் ஏற்படும். Mono Rail திட்டத்தினால், சுற்றுப்புறச் சூழல் எந்தவகையிலும் மாசுபடாது. இதனால் மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. Metro Rail திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான மொத்த நிதியையும் அரசே வழங்கி செலவழிக்க வேண்டியிருக்கும். ஆனால், Mono Rail திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதி முழுவதையும் தனியார் நிறுவனமே செலவு செய்யும். அரசுக்கு எந்தச் செலவும் வைக்காமல், தனியார் நிறுவனமே 100 விழுக்காடு நிதியையும் முதலீடு செய்து B.O.T. அடிப்படையில் இரண்டாண்டுக் காலத்திற்குள் திட்டத்தை நிறைவேற்றி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும். Metro Rail திட்டம் ஏன் சென்னைக்கு ஒத்து வராது; அதைவிட Mono Rail எவ்வாறு சிறந்தது என்பதற்கு இன்னும் ஏராளமான காரணங்களை அடுக்கிக் கொண்டே போக முடியும். நேரத்தைக் கருதி, இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். வெறும் வீம்புக்காக, வீணான வறட்டுக் கௌரவத்திற்காக, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக Mono Rail போன்ற சிறந்த திட்டத்தைக் கைவிட வேண்டாம் என்றும், Metro Rail போன்ற உருப்படாத திட்டத்தைச் செயல்படுத்த வேண்டாமென்றும் இந்தத் தி.மு.க. அரசுக்கு வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஒரு வார காலமாக, இந்தச் சட்டமன்றப் பேரவையில், தரிசு நிலங்களில் ஏழைகளுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் வழங்கப்படுவதைப் பற்றி, கிட்டத்தட்ட அவை கூடிய ஒவ்வொரு நாளும் காரசாரமாக விவாதம் நடைபெற்றது. அதிலும், கடந்த 28 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இதுகுறித்து நடைபெற்ற விவாதங்கள் பற்றிய செய்திகளை நாளேடுகளில் படித்தபோது சிரிப்பதா, வருத்தப்படுவதா என்றே புரியவில்லை. எனது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தி, செயல்படுத்திய தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி இங்கே முதலமைச்சர், பல அமைச்சர்கள், கம்யூனிஸ்டு கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் தங்கள் மனம்போன போக்கில் எதையெதையோ பேசி ** கருத்துகளைத் தெரிவித்து அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி ** நினைக்கும்போது வேடிக்கையாகவும் உள்ளது. அதேசமயம் வருத்தமாகவும் உள்ளது. முதலமைச்சரும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் பேசுகிறபோது, அமைச்சர்கள், எதிர்க்கட்சி வரிசையில் எங்களுடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இருக்கக்கூடிய கட்சியினுடைய தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் ** என்று, ** என்ற வார்த்தைகளை எல்லாம் பேசலாமா? அதை அவர் திரும்பப் பெறவேண்டும். இல்லாவிட்டால் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஒரு மரபே இல்லாமல் அவையில் பேசுவது என்பது, அது எதிர் விளைவை ஏற்படுத்தும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்)

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை, இல்லை, அது எப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அவையில் குறிப்பிட்டிருந்த, நீக்கிய subject-ஐப் பற்றி இப்போது பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட subject-ஐப் பற்றிப் பேசக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** முடியாது. அதெப்படி இப்படி பொறுப்பான முதலமைச்சராக இருந்தவர், இப்படிப் பொறுப்பில்லாமல் பேசினால்— என்ன ** என்று பேசுவது? (குறுக்கீடு)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர், பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. தி. வேல்முருகன்:** வாபஸ் வாங்கவேண்டும். எல்லாக் கட்சிகளையும் அவமதித்ததை வாபஸ் வாங்கவேண்டும் முதலிலே. (குறுக்கீடுகள்) அதை வாபஸ் வாங்குங்க. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார் இல்லையா? பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த அவை, 6½ கோடி மக்களுடைய பிரதிநிதிகளை உள்ளடக்கிய அவை. இந்த நாட்டின் அரசியல் சாசன சட்டத்தினுடைய அங்கீகாரத்தைப் பெற்று இந்த நாட்டு மக்களுடைய ஆதரவை, அங்கீகாரத்தைப் பெற்று, இந்த அவைக்கு வந்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையை விமர்சனம் செய்வதைப்பற்றி எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இந்த அவையில் பங்கேற்றிருக்கின்ற நாங்களும், அவர்கள் தயாரித்ததைப் போலவே நாங்களும் படித்து, உட்கார்ந்து சிந்தித்து, எங்கள் தொகுதி மக்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, நாங்கள் ஒருவருக்கொருவர் வாதித்துதான், இந்த மன்றத்திலே சில கருத்துகளை வைக்கிறோம். அந்தக் கருத்துகளைச் சொல்கின்றபோது எங்கள் ** நாங்கள் வெளிப்படுத்துகிறோம் என்று சொல்வது இந்த அவையினுடைய மாண்புக்கு உகந்ததல்ல; இந்த அவையினுடைய மரபுகளுக்குச் சரியானதல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நான் மிகப் பணிவோடு நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வேன்; ஒரு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்தித் தாருங்கள். நீங்களே அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டால், இந்த அவைக்கு நல்ல முன்னுதாரணமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுப்பான முதலமைச்சராக இருந்து பொறுப்பு வகித்து, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய ஒரு தலைவர், இப்படி மற்றக் கட்சி உறுப்பினர்களைப் பற்றி, பொறுப்பில்லாத வார்த்தைகளைப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பயன்படுத்துவதை வாபஸ் பெற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னாள் முதலமைச்சராக இரண்டு முறை பொறுப்பிலே இருந்தவர்கள். இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு, கட்சிகளிலே அங்கம் வகிக்கிற உறுப்பினர்களுக்கு உறுப்பினர்கள் உரிமைகளைப் பெற்றுத் தருவதை விட்டுவிட்டு, பேசக்கூடிய உறுப்பினர்கள் ** தன்மையோடு ** பேசுகிறார்கள் என்று சொல்வது; அல்லது ** பேசுகிறார்கள் என்று சொல்வது, ஒரு முதலமைச்சராக இருந்தவருக்கு, எதிர்க்கட்சித் தலைவருக்குப் பொருத்தமல்ல, இது அழகல்ல; இந்த மாமன்றத்தில் நடைமுறைப்படுத்துவது முன்னுதாரணத்தை இந்த உகந்ததாக இருக்காது. தயவுசெய்து உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், இந்த முன்னுதாரணத்தை ஏற்படுத்தாதீர்கள். இது எல்லோருக்கும் இழுக்காக அமையும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தரிசு நில மேம்பாடு குறித்த கருத்தை, எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் எல்லாம் இப்படிப் பேசினோம் என்று குறிப்பிட்டு, நாங்கள் என்ன செய்தியை விவாதித்தோம் என்பதைச் சொல்லி, அதிலே என்ன கருத்துகள் தவறாக இருக்கின்றன என்று சொல்லியிருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அதிலும்கூட, ** என்று சொல்கிறார். நாங்கள் என்ன சொன்னோம் என்பதை அறிந்துகொள்ளாமலேயே சொல்வதைப் பற்றி, நான் எப்படி எடுத்துக்கொள்வது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற கேள்வி. ஆகவே இந்தப் பொறுப்பான செய்திகளைச் சொல்ல வேண்டிய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலே இருந்து செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள், இந்த அவையிலே இந்த வார்த்தைகளைச் சொன்னது என்பது ஏற்புடையதல்ல. ஆகவே, இதை அவர்கள் வாபஸ் பெற வேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே, 2001 செப்டம்பர் 3 ஆம் நாள், அப்போது நிதி அமைச்சராக இருந்தவர் பேசிய வார்த்தைகள். ஏனென்றால், முதலமைச்சருடைய வழிகாட்டுதலின்படி அன்று நடந்து கொண்டிருந்தவர். "உணர்வுகளைத் தூண்டுகிறவகையில் பேசக்கூடாது என்றுதான் தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். பொன்முடி அவர்கள் மற்றவர்கள் உணர்வுகளைத் தூண்டாதவகையில், சீண்டாதவகையில் பேசுகிறபோது அவையினுடைய அமைதி பேணப்படும் என்பதை அனைவரும் உணர வேண்டும் என்றுதான் நான் கூறினேன்" என்று அன்று நிதி அமைச்சர் சொன்னார். அந்த விதியை தயவுசெய்து, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற அவர்களும் இன்று கடைப்பிடிக்க வேண்டும்; அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அந்தக் காலத்தில் ஆளுங்கட்சியிலே இருக்கிறபோது சொன்ன விதிமுறைகளைக் கொஞ்சமாவது கடைப்பிடித்தால்—பொதுக் கூட்டத்தில் பேசுவதுபோல சட்டமன்றத்தில் பேசியே பழக்கப்பட்டுவிட்டவர்கள், அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் ஏகவரிசையிலே பேசி விமர்சனம் செய்தவர்கள், அந்த நடைமுறைகளை மாற்றி ஒரு நாடாளுமன்ற, சட்டமன்ற மரபுக்கு ஏற்பப் பேசினால்—நிச்சயமாக இதுபோன்ற பிரச்சினைகள் வராது. அதைப் பயில வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ** என்று சொன்ன வார்த்தைகளெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

பிற்பகல் 12–20

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன சில வார்த்தைகளை நீங்கள் ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக அறிவித்துவிட்டீர்கள். அதன்பின்னர், ஒவ்வொரு கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரையும் நீங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இதன்மீது பொது விவாதம் நடத்த அனுமதித்திருப்பது, புதிய முன்னுதாரணமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த ஒரு வார காலமாக– (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களையும் சேர்த்துத்தான் நீங்கள் கருத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதனால் அவர்கள் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) அனைத்து எதிர்க்கட்சிகளையும், ஒட்டுமொத்தமாகத்தான் பேசியிருக்கிறீர்கள் நீங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வார்த்தைகளைப் பேரவைத் தலைவர் அவர்கள், அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பிறகு, மற்ற கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை, அதைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்க அனுமதிப்பது என்பது, இதுவரை இல்லாத புதிய முன்னுதாரணம் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஒரு வார காலமாக, எங்கள் கழக ஆட்சியில் கொண்டுவந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி, முதலமைச்சர் அவர்களும், இதர அமைச்சர்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், இவர்களை உள்ளிட்ட பலபேரும் தெரிவித்த கருத்துகளைப் பார்க்கின்றபோது, அதைப்பற்றிய செய்திகளைப் பார்க்கின்றபோது, இந்தத் திட்டத்தைப்பற்றி அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையே என்று எண்ணிப் பார்க்கின்றபோது, வேடிக்கையாகவும் உள்ளது; அதேசமயம், வருத்தமாகவும் உள்ளது. முதலமைச்சரும், அவரது அமைச்சரவை சகாக்களும், ** பேசியபோது, இப்படியெல்லாம் ** ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ** என்பது unparliamentary word-ஆ? அது எப்படிங்க? தமிழ் மொழியையே unparliamentary என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது Assembly-யிலே பேசிய பேச்சை ** என்று பேசுவது முறையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ** என்பதும் ** என்பதும் நிச்சயமாக ந்காத சொற்கள் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மரபல்ல. Assembly-யிலே பேசுகிற பேச்சை ** என்று பேசுவது முறையில்லை. (குறுக்கீடு) அந்த வார்த்தையை நீக்குகிறேன். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பது நேரடியாக மன்ற உறுப்பினர்களையோ, தலைவர்களையோ குறிப்பிடுவதாக இருக்கக் கூடாது. அர்த்தமற்ற என்ற வார்த்தையைப் பேசலாம். அறியாமை என்ற வார்த்தை இடம் பெறலாம். ஒருவேளை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களையோ அல்லது ஆதரிக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களையோ ** என்று சொல்வாரேயானால், இவற்றை நாங்கள் திருப்பிச் சொல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? நாங்களும் சொல்லலாம் என்று சொன்னால், சட்டமன்றத்தினுடைய மரபைக் காப்பாற்றுவது ஆகாது. நான் முன்னவர் என்கிற முறையிலே, சட்டமன்ற மரபையும் காப்பாற்றும் ஒரு கடமை எனக்கு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் கண்டித்துகூட சொல்லவில்லை; பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்; இப்படிப்பட்ட வார்த்தைகளை நீங்கள் விலக்கிக்கொண்டால், உங்களுடைய பேச்சிலே உள்ள சாராம்சம் ஏதாவது இருக்குமானால், அதை நாங்கள் எண்ணிப்பார்க்க ஏதுவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலமாக, அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், எவ்வளவு இலட்சணமாக இந்த அவையின் மரபுகளைக் காத்தார்கள் என்பதை அனைவரும் பார்த்தோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இலட்சணம், உங்கள் ஆட்சியின் அவலட்சணத்தினுடைய விளைவு. (மேசையைத் தட்டும் ஒலி)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** முதலமைச்சரும் அவரது அமைச்சரவை சகாக்களும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி இப்படியெல்லாம் விவரமே புரியாமல் பேசுகிறார்களே என்று சிரிப்பும் வந்தது. அதே நேரத்தில், விவரமே புரியாத இப்படிப்பட்டவர்கள், இன்று தமிழ்நாட்டை ஆளும் பொறுப்பில் அமர்ந்திருக்கிறார்களே என்று நினைக்கும்போது, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாநிலத்தின் எதிர்காலம் என்ன ஆகுமோ; எப்படி இருக்குமோ என்று எண்ணி மனதில் கவலையும் வந்தது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம், ஆளுங்கட்சி ஆனதைப் பற்றி மிகுந்த வேதனையோடு, அவலத்தோடு தமிழ்நாட்டினுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்று அவர்கள் கவலைப்பட்டுப் பேசுகிறார்கள். அவர்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. தமிழ்நாட்டு மக்கள் எதனால் கவலைப்பட்டார்களோ, அந்த ஆட்சியை அகற்றிவிட்டுதான் இந்த ஆட்சியை அமர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக அரசை அகற்றிவிட்டு, இந்தத் தி.மு.க. அரசைக் கொண்டு வரவில்லை. இது மக்களுடைய விருப்பம் அல்ல. (குறுக்கீடுகள்) மக்கள் செய்த முடிவும் அல்ல. நீங்கள் எப்படி ஆட்சிக்கு வந்தீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. எப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சட்டமன்றம் என்பதற்காக, நான் பல ஆண்டுக் காலம் உறுப்பினர் என்ற முறையில், ஒரு சின்ன விளக்கம். பேரவைத் தலைவருக்கு ஒருவேளை புரியாவிட்டால் என்ன செய்வது என்பதற்காக

நான் தெரிவிக்க விரும்புகிறேன். மக்கள் இந்த ஆட்சியை ஏற்படுத்தவில்லை என்று சொல்கிறார்கள். ஜனநாயக மரபை ஏற்றுக் கொண்ட யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், எவ்வளவு பெரியவராக இருந்தாலும், ஒரு தேர்தல் முடிவு என்று வருமானால், அந்த முடிவை மதிப்பார்கள். அப்படியானால், மக்கள் முடிவு இல்லாமல் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என்று சொன்னால், நீதிமன்றத்திலே வழக்குப் போட்டால், உடனே நாங்கள் வெளியேற்றப்படலாம். பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், உடனே வெளியேற்றப்படலாம். அப்படி மக்கள் விருப்பம் இல்லாமல் நாங்கள் ஆட்சிக்கு வந்து விட்டோம் என்று யாராவது கருதுவார்களேயானால், அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர, அதை எங்களிடத்திலேயே சொல்லிக் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தி.மு.க. அரசை அகற்றுகின்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட வேண்டிய அவசியமே இல்லை. மக்களே விரைவில் அதைச் செய்து முடிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தில் மக்களின் விருப்பத்தை மதிக்க வேண்டும் என்றார் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். அதை நாங்களும் அறிவோம். இந்தத் தேர்தல் முடிவுகள், உண்மையில் மக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாக இருந்தால், நாங்களும் அதை மதிப்போம். ஆனால், மக்களுடைய விருப்பத்தை இந்தத் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கவில்லை. எப்படி தி.மு.க. ஆட்சிக்கு வந்தது என்பதைச் சொன்னால், உங்களால் தாங்கிக் கொள்ள முடியாது. கூச்சல் போடுவீர்கள். ரகளையில் ஈடுபடுவீர்கள். நான் முதலமைச்சராக இருந்தபோது, கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், தமிழகத்தின் நிதிநிலை மிகவும் சீரழிந்துபோன நிலையில் இருந்ததால், தாய் ஸ்தானத்தில், அரசு ஊழியர்களுக்குக் கசப்பான மருந்து கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருந்தேன். எப்போதுமே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். அமைதியாக இருங்கள். எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) பொள்ளாச்சி ஜெயராமன், அனுமதியில்லாமல் எழுந்திருந்து பேசக்கூடாது. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் பேசிக் கொண்டிருக்கிறேன் இல்லீங்க?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது இடையிலே குறுக்கிட்டு நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்? அமைதிகாக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். அமைதியாக இருங்கள். யாரும் குறுக்கே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) சிவபுண்ணியம், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்றால், அந்தக் குழந்தைக்குக் கசப்பு மருந்து கொடுக்க வேண்டியது தாயின் கடமையாகிறது. தாய் அந்தக் குழந்தைக்குக் கசப்பான மருந்து கொடுக்கின்றபோது, அந்தக் குழந்தைக்கு, தாயின்மீதுதான் கோபம் ஏற்படும். அப்படிதான், அரசு ஊழியர்களுக்கு இந்தத் தாயின்மீது கோபம் ஏற்பட்டது. அதனால், தேர்தல் வந்தபோது அவர்கள் ஒவ்வொரு booth-இலும் 30 முதல் 60 வாக்குகளைக் கூடுதலாக அழுத்திவிட்டார்கள், electronic voting machine-இல். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஏறத்தாழ 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், அதைப்போல ஆசிரியர்கள் அவர்களுக்கு எல்லாம் அம்மையார் அவர்கள் தாயாக இருந்து கசப்பான மருந்தைக் கொடுத்தார்களாம். தாய் தருகின்ற கசப்பான மருந்து பிடிக்காத காரணத்தினால், அந்தக் குழந்தைகள் எல்லாம் இப்பொழுது தேர்தலிலே ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் 30 வாக்குகள், 40 வாக்குகள் தங்களுக்கு எதிராக அவர்கள் பதிவு செய்துவிட்டார்கள், அந்த அரசு ஊழியர்கள் என்று அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். இதைவிட அரசு ஊழியர்களை அவமானப்படுத்துவதற்கு வேறு எந்தவிதமான வார்த்தையும் தேவையில்லை என்பதால், அந்த அரசு ஊழியர்கள் நிச்சயமாக இந்த வார்த்தையைக் கண்டனம் செய்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைக்குத் தாயின்மீது கோபம் ஏற்படும்போது தாயிடம் பேச மாட்டேன் என்று வேறு எங்கேயாவது சென்று விடும். அந்த நேரத்தில் வித்தை காட்டுகின்ற ஒரு கெட்ட மாமா அங்கே வந்தால்,

அவருக்குப் பின்னால் அந்தக் குழந்தை ஓடிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் வித்தை காட்டுகின்ற கெட்ட மாமாவை நம்பி, அரசு ஊழியர்கள் என்ற அந்தக் குழந்தைகள் ஓடிவிட்டன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து தன்னுடைய வாதத் திறமையைக் காட்டுகிறார்கள். கிலுகிலுப்பைக்காரன் பின்னாலே போகின்ற குழந்தையைப்போல, குழந்தைப் போய்விட்டது என்கிறார்கள். அது தாய் மடி அல்ல, பேய் மடி என்று தெரிந்த காரணத்தினால், அந்தக் குழந்தைகள் கிலுகிலுப்பைக்காரன் பின்னாலே போனார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வேறு subject–க்குப் போங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு subject–குப் போங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேய் என்பது parliamentary வார்த்தைதானா? அது அவைக்குறிப்பில் இருக்கலாமா? ** என்ற சொற்கள் இருக்கக்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள் முதலில் எல்லோரும். (கூச்சல்–குழப்பம்) முதலில் உட்காருங்கள் எல்லோரும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நான் சொன்ன வார்த்தையைத் தயவுசெய்து தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. (கூச்சல்–குழப்பம்) யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உதாரணம் என்ற முறையில் N.G.O.–களோ அல்லது ஆசிரியர்களோ தங்களுக்குத் தரப்படுவது மருந்து அல்ல, தங்களுக்குத் தரப்படுவது நஞ்சு; தங்களுக்கு ஊட்டப்படுவது விஷம், ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேரை வேலையை விட்டு நீக்கக்கூடிய ஒரு ஆணையைப் பிறப்பித்து, அந்த ஆணை நல்ல மருந்து என்று சொன்னால், அதை நம்புவதற்கு நாட்டில் எந்த N.G.O.–வும், எந்த ஆசிரியரும் அவ்வளவு பைத்தியக்காரர்களாக இல்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நான் பேய் என்று யாரையும் சொல்லவில்லை. (கூச்சல்–குழப்பம்) தாயாகக் கருதவேண்டிய அவர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (கூச்சல்–குழப்பம்) யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. கலைராஜன் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வித்தை காட்டி, கிலுகிலுப்பை காட்டி, குழந்தையை மோசம் செய்கின்ற கெட்ட மாமா, தாயைப் பேய் என்றுதான் வர்ணிப்பார். ஆனால், அந்தக் குழந்தை ஒரு காலகட்டத்தில் உண்மையை உணர்ந்து, அந்தக் கிலுகிலுப்பையைக் காட்டுகின்ற கெட்ட மாமா, தன்னை மோசம் செய்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு, பேய் என்று அழைத்தாலும், தாய்தான் தனக்கு உண்மையிலேயே நன்மை செய்பவர் என்பதைப் புரிந்து கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தாய்தான் நம்பிக்கைக்குரியவர் என்பதைப் புரிந்துகொண்டு, அந்தக் குழந்தை தானாக மீண்டும் தாயிடம் வந்து சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்த நாள்முதல், கடந்த ஐந்தாண்டுக் காலமாக எங்கள் ஆட்சியில் நடைபெற்ற ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும், இந்தப் பேரவையில் அத்திட்டத்தைப்பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டபோது, ஒவ்வொரு முறையும் பொறுமையாகவும், விரிவாகவும் பதிலளித்திருக்கிறேன். அப்போதெல்லாம் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், சட்டமன்ற உறுப்பினராக இருந்தும்கூட, இந்தச் சட்டப் பேரவைக்கு வரவில்லை. இங்கே நடைபெற்ற விவாதங்களில் கலந்துகொள்ளவும் இல்லை. தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி, நான் பலமுறை அளித்த விளக்கங்கள், பத்திரிகைகளிலும் செய்திகளாக வந்தன; தொலைக்காட்சிகளிலும் காண்பிக்கப்பட்டன. ஆனால், அவற்றையெல்லாம்கூட, தி.மு.க. தலைவர் சரியாகப் படிக்கவில்லையோ, தெரிந்துகொள்ளவில்லையோ அல்லது புரிந்துகொள்ளவில்லையோ என்பது எனக்குத் தெரியவில்லை. சரியாகப் புரிந்துகொள்ளாததால்தான், தி.மு.க. தலைவர், தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில், தமிழகத்தில் மொத்தமுள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் நிலமற்ற ஏழையெளிய குடும்பங்களுக்குத் தலா 2 ஏக்கர்வீதம் வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி அளித்துவிட்டார். கவனியுங்கள். நிலமற்ற ஏழையெளிய விவசாயக் குடும்பங்களுக்கு என்றுகூட குறிப்பிடவில்லை. நிலமற்ற ஏழையெளிய குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் வழங்கப்படும் என்றுதான் திரு. கருணாநிதி அவர்கள் அறிவித்திருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சொல்லுகிற கூற்று, இதிலே இல்லை. முழுமையாக இதிலே என்ன இருக்கிறது—தேர்தல் அறிக்கையிலே—என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் (கூச்சல்-குழப்பம்) அ.தி.மு.க. ஆட்சியில்... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஏற்கெனவே, இது சம்பந்தமாகப் பேசியாகிவிட்டது. (கூச்சல்-குழப்பம்) முதலிலே எல்லோரும் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) முதலிலே எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, உட்காருங்கள், என்ன? (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே. (கூச்சல்-குழப்பம்) அ.தி.மு.க. ஆட்சியில் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை—அதையும் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம்—நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதாக அறிவித்தும், அப்படி வழங்காமல் பல இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துள்ளதை மீட்டு—ஆக சொன்னது, அதிமுக. ஆட்சியிலே அரசுக்குச் சொந்தமான நிலங்களை பல்வேறு வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு 500 ஏக்கர், 800 ஏக்கர், 1,000 ஏக்கர் என்று தாரை வார்க்கப்பட்டிருந்ததை மீட்டு—தெளிவாகப் படிக்க வேண்டும். பின்னாலே இருக்கிற, உங்களுக்கு வேண்டியதை மட்டும் படிக்கக்கூடாது; தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிற—தேர்தல் அறிக்கையில், அதை மீட்டு—தமிழகத்தில் மொத்த—(கூச்சல்-குழப்பம்) இருங்கள், சொல்கிறேன். படியுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதி, அமைதி. (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** தமிழகத்தில் மொத்தமுள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஒவ்வொரு ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலம்வீதம் வழங்குவோம் என்று சொல்லியிருக்கிறார். இதுதான் சொல்லியிருப்பது. இதையும் தெளிவாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். அரசுக்குச் சொந்தமான நிலங்கள், நிச்சயமாக, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். அதுபோலத்தான்—ஏன்? இதே முதலமைச்சர்; நான் இதே சட்டமன்றத்திலே கேள்வி கேட்டேன்: 'நீங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு கட்டிக்கொடுப்போம் என்று சொன்னீர்களே, என்ன ஆயிற்று?' என்று கேட்டவுடன், நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்? வீடு கட்டிக்கொடுப்பது என்ன ஆயிற்று என்று நான் கேட்டவுடனே, தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கட்டிக்கொடுக்கிற வீடுகளின் list-ஐப் பூராவையும் எடுத்துச் சொன்ன முதலமைச்சர்தான் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்; மறந்துவிடக் கூடாது. இதே அவையிலே,

குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தைச் சொல்லி, எவ்வளவு கட்டியிருக்கிறீர்கள் என்று நான் கேள்வி கேட்டபோது, இதையெல்லாம் சொன்னீர்கள். அவ்வாறெல்லாம் சொல்லாமல், நிதிநிலை அறிக்கையிலேயே நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார்; அரசுக்குச் சொந்தமான நிலங்கள் ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும்; மற்ற நிலங்கள், விரும்புகிற அந்த மக்களுக்கு அந்த நிலங்கள் பண்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் இங்கே சொல்லப்பட்டிருக்கிற, தேர்தல் அறிக்கையிலே சொன்ன கூற்றும்கூட. நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு, உங்களுக்கேற்ப, எப்படியாவது— 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்கிற மாதிரி, எதையாவது—சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, இதில் நீங்கள் செய்ததை, பணக்காரர்களுக்கும், முதலாளி வர்க்கத்திற்கும் தாரை வார்த்ததை, ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு சிந்தனையோடு, சமதர்மக் கருத்தோடு சொல்லப்பட்ட கருத்து இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடு) இந்த subject சம்பந்தமாக ஏற்கெனவே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விரிவாகப் பேசிவிட்டார்கள். அதற்கு அமைச்சர்கள் பகுதியிலேயிருந்தும் முறையான பதில் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) திரும்பவும், அதற்குப் பிறகும் அதே subject–ஐ நீங்கள் open செய்தீர்கள் என்றால்—அதற்கு அவசியம் இல்லை.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட பேசிய அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் பல தவறான குற்றச்சாட்டுகளை எங்கள்மீது சுமத்தியிருக்கிறார். அதற்கெல்லாம் பதில் சொல்ல எனக்கு அவசியம் வாய்ப்புத் தரப்பட வேண்டும். முதலில், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அப்படி கூறப்படவில்லை என்கிறார். தி.மு.க. தேர்தல் அறிக்கையை கையிலேயே வைத்திருக்கிறேன். நான் சொன்னபடிதான் இதில் இருக்கிறது. நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

தரிசு நிலங்கள் ஏழைகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்படும் என்று, ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் என்று எங்கள் அரசு எப்போதும் அறிவிக்கவில்லை. பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலங்களையெல்லாம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலும், எனது ஆட்சிக் காலத்திலும் ஏற்கெனவே கொடுத்து



விட்டோம். பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கெல்லாம் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டோம் என்று குற்றச்சாட்டு கூறப்பட்டது. அதற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அரசுப் புறம்போக்கு தரிசு நிலங்கள் குறித்து பேசினார். திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்த நிலங்களைப் பண்படுத்தி, ஏழையெளிய மக்களுக்கு, 2 ஏக்கர் நிலம் வீதம் பிரித்துக் கொடுப்போம்; எவ்வளவு அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அந்த தரிசு நிலத்தைப் பிரித்துக்கொடுப்போம்; அதுபோக, சிறு, குறு விவசாயிகள் வைத்திருக்கின்ற நிலங்களையும் பண்படுத்திக் கொடுப்போம் என்று நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். எங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம். ஆனால் கடந்த கால அ.தி.மு.க. அரசு, அரசின் தரிசு புறம்போக்கு நிலங்களை, பெரிய தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது—அ.தி.மு.க. ஆட்சி என்பதை—இந்த அவையிலே இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இங்கே ஒரு விவரம் இருக்கின்றது. யார், யாருக்கு வழங்க வேண்டுமென்று அந்த அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக அவர்கள் பெற்றிருக்கின்ற பட்டியலை நான் இங்கே படிக்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டத்திலே ஈஐடி. பாரி கம்பெனிக்கு 96.92.5 எக்டேர் நிலம், பரிந்துரை வாங்கியிருக்கிறது அந்த அரசு, அவர்களுக்கு வழங்குவதற்காக. (குறுக்கீடு) ஏழைகளுக்கு வழங்க அல்ல. பெரிய, பெரிய நிறுவனங்களுக்கு. (குறுக்கீடுகள்) அதேபோல, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பேசிக் கொண்டிருக்கிறேன் இல்லையா? மோகன் Breweries– (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். அதற்குப் பிறகு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** காஞ்சிபுரம் மாவட்டத்திலே மோகன் Breweries–கு 655.18.5 எக்டேர் நிலத்தை வழங்குவதற்குப் பரிந்துரை, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்திருக்கிறது. நீங்கள்தான் கேட்டு வாங்கி இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இன்னும் இந்தப் பட்டியலைப்

படித்துக் காண்பிக்கிறேன், என்னென்ன கம்பெனிகள் என்று. (குறுக்கீடுகள்) நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள், எதிர்க்கட்சித் தலைவர். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்தவரையில், மிகத் தெளிவாக இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தளவில், தலைவர் கலைஞர் அவர்களின் அரசு, சொன்னதை நிறைவேற்றுகின்ற அரசு. எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு ஏழையெளிய மக்களுக்கு – அவருக்கு ஒரு வரலாறே இருக்கின்றது. 1971 ஆம் ஆண்டு இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றபோது, இந்திய வரலாற்றிலே இல்லாத அளவிற்கு—ஏழையெளிய மக்களுக்காக 1,73,000 ஏக்கர் நிலங்களை 15 standard ஏக்கராகக் குறைத்து சாதாரண ஏழையெளிய மக்களுக்கு வழங்கியவர் தலைவர் கலைஞர். அதிலும் குறிப்பாக, 63 ஆயிரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்களை இலவசமாக வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள், உங்களுடைய ஆட்சியினுடைய கொள்கை பெரிய பணக்காரர்களுக்கு அரசுப் புறம்போக்கு தரிசு நிலங்களைத் தாரை வார்ப்பது. ஆனால் கலைஞர் அரசினுடைய கொள்கை, ஏழை எளிய மக்களுக்குத் தரிசு நிலங்களைப் பிரித்துக் கொடுப்பது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள், திரு. பொன்முடி அவர்களும், திரு. பெரியசாமி அவர்களும் தொடர்ந்து உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளைக் கூறி வருகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்களுக்கும், பெரிய தொழிலதிபர் களுக்கும் எந்தத் தரிசு நிலங்களையும் எங்கள் அரசு தாரை வார்த்துக் கொடுக்கவில்லை. அவை எல்லாம் சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்கள். அவர்களோடு Contract farming–கான ஒப்பந்தம் செய்துகொண்டு, அந்த நிலங்கள் எல்லாம் குத்தகைக்கு விடப்பட்டன. அந்த விளக்கத்திற்கு நான் பின்னால் வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றிச் சரியாகப்



புரிந்துகொள்ளாமல், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், அவசரப்பட்டு, இந்தத் தேர்தல் வாக்குறுதியை அளித்துவிட்டார். இப்போது அந்த வாக்குறுதியே தப்பானது, அதைச் செயல்படுத்தவே முடியாது என்று தெரிந்துகொண்ட பின்னர், எங்கள்மீது ஆத்திரப்படுகிறார்; கோபத்தில் புலம்புகிறார். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றிப் பேசுகின்றபோது, எங்களுடைய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். கடந்த ஆட்சிக் காலத்திலே இதுபற்றி ஒரு விவாதம் வந்தபோது, அதிலே கலந்துகொண்டு நான் பேசினேன். நான் பேசுகின்ற நேரத்திலே சொன்னேன். அன்றைய முதலமைச்சரைப் பாராட்டியே பேசினேன். கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த ஒரு திட்டத்தைக் கிடப்பில் போடக் கூடாது; அதைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே, இப்போது தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏற்கெனவே எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, 2,000 ஏக்கரா நிலம் கையகப்படுத்தப்பட்டு, வேம்பு, மா, பலா போன்ற மூலிகைப் பொருட்கள் எல்லாம் அங்கே வளர்க்கப்பட்டு வருகின்றன என்று சொன்னபோது, இதே எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நின்று சொன்னார்: “மாண்புமிகு உறுப்பினர் பரிதி அவர்கள், ஏதோ அவருடைய கட்சித் தலைவர் கொண்டுவந்ததுபோலச் சொல்கிறார்; இது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலிருந்தே இருக்கிறது” என்று சொன்னார். அப்படிச் சொல்லிவிட்டு, மீண்டும் மீண்டும், “நான் கொண்டு வந்தேன், நான் கொண்டு வந்தேன், நான் கொண்டு வந்தேன்” என்று சொன்னால், யாரை ஏமாற்றுவது? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். நீங்கள் கிட்டத்தட்ட....

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணி 35 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எங்கேங்க? பெரும்பாலும் ஆளும் கட்சியினர்தான் பேசினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எப்படி முடிக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாருங்கள், கடைசிப் பக்கத்தை எடுத்துப் படியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போது திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டும். என்னைப் பேச அனுமதித்தால்தான் நான் பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வைத்திருக்கிற ஆவணத்திலே கடைசிப் பக்கத்தை எடுத்துப் படித்து சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அப்படியெல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) முறையல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தி.மு.க. தலைவர் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி, தி.மு.க. தலைவர் சரியாகப் புரிந்துகொள்ளாமல் நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதியை அளித்தால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இன்றைய முதலமைச்சர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்து, நீங்கள் தவறான புள்ளிவிவரத்தைத் தந்துவிட்டீர்கள், நீங்கள் தவறான புள்ளிவிவரத்தைத் தருவீர்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை என்று எங்கள்மீது எரிந்து விழுந்தால், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) 2001–2002 ஆம் ஆண்டிற்கான எங்கள் கழக அரசு நிதிநிலை அறிக்கையில் என்ன சொன்னோம்? "பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை வரும் ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் மேம்படுத்திட, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்னும் மிகப் பெரிய அளவிலான



தொலைநோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே அறிவித்துள்ளார்" என்றுதான் சொல்லியிருக்கிறோம். 20 இலட்சம் ஹெக்டேர் என்றால் 50 இலட்சம் ஏக்கர். ஆனால், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் அரசிடம் உள்ளது; அல்லது அரசுக்குச் சொந்தமாக உள்ளது என்று எங்கே சொன்னோம்? நாங்கள் எங்கேயும் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் அதைச் சரியாகப் படிக்காமல், சரியாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 50 இலட்சம் ஏக்கர் என்று நாங்கள் எங்கே சொன்னோம் என்று கேட்கிறார். (குறுக்கீடுகள்) இந்தப் பேரவையில் பதிய வைக்கப்பட்டபடி, அந்த (குறுக்கீடு) நிலம், தரிசு நிலம் 50 இலட்சம் ஏக்கர். அது பல முறை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அவையில் அன்றைய ஆளுங்கட்சி பதிவு செய்த 50 இலட்சம் ஏக்கரைத்தான், இன்றைய முதலமைச்சர் அவர்கள் அறிக்கையிலே தெரிவித்தார்கள்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** என்னங்க இது? பேச விடுங்கள் (குறுக்கீடு) பேச விடுங்கள். நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தாராளமாகப் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, (குறுக்கீடு) இல்லை, எங்கே சொல்லியிருக்கிறோம் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசும்போது யாரும் குறுக்கிடக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசுங்கள். அதுதான் மரபு.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, நாங்கள் எங்கே சொல்லியிருக்கிறோம்; அரசு நிலம் எங்கேயிருக்கிறது என்று எங்கே சொன்னோம் என்று ஒரு கேள்வி கேட்கிறார்கள். அவர் நாங்கள் எங்கே சொன்னோம் என்று படித்துக் காட்டினார். அதே 2001 ஆம் ஆண்டு நிதிநிலை ஒரு பகுதியைப் படித்துக் காட்டினார். அதே 2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை பொன்னையன் வைத்ததில், ஒரு பகுதியை விட்டுவிட்டார். அவர் என்ன சொல்கிறார் என்றால், பத்தி 18–இல், "இம்மாநிலத்தின்

பல்வேறு பகுதிகளில் நிலவுகின்ற தட்பவெட்ப மண்டலங்களுக்கு ஏற்ப, வேளாண் நிலம் பயன்பாட்டு உத்தியை மாற்றியமைத்து, வேளாண் தொழிலை மேம்படுத்தவேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது; இம்மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பில் 43 சதவிகிதப் பகுதி தற்போது சாகுபடியில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது" என்று. அப்படி யென்றால், மீதி 57 சதவிகிதப் பகுதி, சாகுபடியிலே இல்லையென்று அர்த்தம்; அது ஒன்று. மற்றும் ஒன்று, 'நாங்கள் சிறு விவசாயிகளுக்குத்தான் கொடுத்தோம்' என்று சொல்கிறார். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இதே அவையிலே சொன்ன பதில் என்னிடத்தில் இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது குறுக்கிட்டுச் சொல்கிறார்: "இந்த நிலங்கள் ஏன் தரிசு நிலங்களாக விடப்பட்டுள்ளன? அவற்றிற்குத் தேவையான முதலீடுகளைப் போடும் சக்தி, அந்த நிலத்தின் உரிமையாளர்களுக்கு இல்லாததால்தான், பெரும்பாலும் தரிசு நிலங்களாக விடப்பட்டுள்ளன. ஆகவே, பெரிய Corporate house-களுக்குக் கொடுக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் பெரிய Corporate house என்றால், இரண்டு ஏக்கர் நிலம், மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களா? *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மீண்டும் பொன்முடியா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இல்லை, அவர்கள் புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். அதற்கு மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நான் இப்போது வேறொன்றும் சொல்லவில்லை.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் விளக்கம் சொல்லிவிடுகிறேங்க. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர். *(குறுக்கீடு)* அமைச்சர், சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே. *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் ஒரு சின்ன விளக்கம் சொல்லிவிட்டு உட்காரப் போகிறார். *(குறுக்கீடு)* நீங்கள் அந்த நேரத்தை, எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிற நேரத்தை waste பண்ணுகிறீர்கள். உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள், உட்காருங்கள். அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ என்னிடத்தில் உள்ளது. நிதிநிலை அறிக்கையிலே அவர்களே சொன்னதுதான். முன்னாள் நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார், கடைசியிலே 2006–லே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள், *(குறுக்கீடு)* உட்காருங்கள் முதலிலே நீங்கள். *(குறுக்கீடு)* திரு. சாமிதானே அவர்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இப்போதுதான் முதன்முதலில் புதிதாக வந்திருக்கிறார். போன தடவை, இங்கே இருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களையெல்லாம் கேட்டுப் பாருங்கள். நாங்கள் எல்லாம் எப்படி எப்படி அனுபவித்தோம் என்று. அப்போது இருந்திருந்தால் உங்களுக்குத் தெரிந்திருக்கும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி உட்காருங்கள். அமைச்சர் பேசும்போது நீங்கள் குறுக்கீடு செய்துகொண்டே இருக்கிறீர்கள். நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள் முதலில்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஜனவரி நிதிநிலை அறிக்கையிலே, முன்னாள் நிதி அமைச்சர் சொல்லியிருப்பது, அவர்கள் காலத்திலே செப்பனிடப்பட்ட தரிசு நிலம், 383 இலட்சம் என்று சொன்னார். அதையே நான் கேள்வியாகக் கேட்கிறபோது, இதே முன்னாள் முதலமைச்சர் அதே நாளில் சொன்ன பதில், 8.5 இலட்சம் ஹெக்டேர்—இங்கே முன்னாள் விவசாய அமைச்சர் பாண்டுரங்கன் இருக்கிறார்—நாங்கள் பண்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டதெல்லாம், 8.5 இலட்சம் ஹெக்டேர் என்றால், 20 இலட்சம் ஏக்கர் என்று. அதற்கும் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இதை எங்கேயிருந்து வாங்கிப் பண்படுத்தினீர்கள்?

தனியாரிடமிருந்து வாங்கிப் பண்படுத்தினீர்களா? அரசு நிலத்தைப் பண்படுத்தினீர்களா? அதை எங்கே பண்படுத்தி எங்கே கொடுத்தீர்கள்? அதற்குப் பதில் சொல்லுங்கள் முதலிலே. (குறுக்கீடு) நீங்கள் சொன்ன புள்ளிவிவரம், புள்ளிவிவரங்களை நீங்கள்மாத்திரம் சொல்லிவிட்டு — நான் ஆதாரங்களோடு புள்ளி விவரங்களைச் சொல்கிறேன் Sir. நீங்கள் சொல்லுகிற புள்ளிவிவரங்கள்...(குறுக்கீடு) நீங்கள் அப்போது சட்டமன்றத்திலே சொன்னது தவறா? நாங்கள் கேட்ட கேள்விக்காக, இப்போது இதோ சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அதுகூட— (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கிற கேள்விக்குப் பதில் இல்லையென்றால், கும்பலாகச் சேர்ந்து கத்தினார்கள் என்றால் பதிலாகிவிடாது. (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** கும்பலாகச் சேர்ந்து கத்தினார்கள் என்றால் பதிலாகிவிடாது. பதில் இருந்தால் எழுந்து சொல்லட்டும். அதற்கு நாங்கள் பதில் சொல்லுகிறோம். பதிலுக்குப் பதில் சொல்லத் திறமையிருந்தால் பேசுங்கள். கும்பலாகக் கத்திவிட்டுப் போவதற்காக வரவில்லை. நான் கேட்கிறேன்; புள்ளிவிவரத்தோடு சொல்கிறேன். உங்கள் நிதியமைச்சர் சொன்னது 3.83 இலட்சம் ஹெக்டேர். நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா இல்லையா? 8.5 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை நாங்கள் இங்கே சரிசெய்து இருக்கிறோம் என்று முன்னாள் விவசாய அமைச்சரோ, இதே முன்னாள் முதலமைச்சராக இருந்த அவர்களோ அன்று சொன்னார்களா? இல்லையா? சொல்லியிருந்தால், அந்த 8.5 இலட்சம் ஹெக்டேர் தனியாரிடமிருந்து கைப்பற்றி வேறு யாருக்காவது கொடுத்தீர்களா? கூட்டுறவு முறையிலே எங்கேயாவது பண்ணை நடத்தி இருக்கிறீர்களா? இல்லை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறீர்களா? எங்கே போனது அந்த 8.5 இலட்சம் ஹெக்டேர் என்பதற்கு மட்டும் அந்தப் புள்ளிவிவரத்தைச் சொல்லுங்கள்; நாங்கள் சொல்லுகிறோம். நாங்கள் தயாரிக்கிறபோது, தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஏழைகளுக்குக் கொடுப்போம்; மீதியிருக்கிற நிலங்களை, நாங்கள் சிறு குறு விவசாயிகளுக்குப் பண்படுத்திக் கொடுப்போம் என்று. இதுதான் அதிலே இருக்கிற பொருளே தவிர,



வேறு எதுவும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் இஷ்டத்திற்கு நீங்களே include செய்தால், நாங்கள் என்ன செய்யமுடியும்?

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எப்படி? இப்போதுதானே பேசவே விடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவாக முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** என்னைப் பேசவே விடமாட்டேன் என்கிறீர்கள். பிறகு எப்படி முடிப்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய நேரம் (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். உங்களுடைய நேரம் 1 மணி 41 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதிலே எவ்வளவு நேரம் நான் பேசியிருக்கிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் உங்களுடைய கணக்கிலேதான் வைக்கமுடியும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அது எப்படி? இது நியாயம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை உங்களுடைய கணக்கிலேதான் வைக்கமுடியும். (குறுக்கீடு) பேசுங்கள், சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சீக்கிரம் முடியுங்கள் என்று சொல்லிவிட்டு, ஒவ்வொரு அமைச்சராக எழுந்து பேசவிட்டால் எப்படி நான் முடிக்கமுடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், தான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்று கருதுகிறார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருந்தபோதும், குறிப்பிட்ட நேரத்தைவிட சற்று அதிக நேரம் கொடுப்பார்கள். 1 மணி நேரம் ஒதுக்கினால், 1¼ மணி நேரத்தில், 1½ மணி நேரத்தில் பேசி முடிக்கப்படும். ஒருவேளை, அம்மையார் அவர்கள் தொடர்ந்து பேசவேண்டுமென்று விரும்பினால், அவர் இன்றைக்கு முழுவதும் பேசட்டும். நாளைக்கு முழுவதும் நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இதோ பாருங்கள், மறுபடியும் இவர் எழுந்திருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நாங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது, பல நேரங்களிலே தொகுதிப் பிரச்சினையை, நாட்டுப் பிரச்சினையைப் பேசுவதற்காக எழுகிறபோதெல்லாம், இப்படிக் குறுக்கீடு இருக்கும். இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர், அப்போது முதலமைச்சராக இருக்கிறபோது, அன்றைக்கு என்ன சொன்னார் என்று சொன்னால், 'எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ குறுக்கீடு செய்யாத அளவிற்கு நீங்கள் எல்லாம் பேசக் கற்றுக் கொள்ளவேண்டும்; அப்படிப் பேசுவதன்மூலமாகத்தான் உங்களுடைய தொகுதி சம்பந்தமான கருத்துகளைச் சொல்லவேண்டும்' என்று இவர்களே சொல்லியிருக்கிறார்கள், இதே மாமன்றத்திலே. எனவே, அவர்கள், நாங்கள் எல்லாம் குறுக்கீடு செய்யாத அளவிற்குப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்; பேச வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.



**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண் அரசு அதிகாரியின் அழகை வர்ணித்துப் பேசிய இந்த அமைச்சர் வேலுவின் advice–ஐக் கேட்டு, அவரிடம் பேச நான் கற்றுக்கொண்டால், இந்த நாடு தாங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்தி அது. மாண்புமிகு அமைச்சர் சொன்ன செய்தி. அரிசியினுடைய நிறம் சிகப்பு, கறுப்பு என்பதற்கு, "அவரைப் போல சிகப்பு; என்னைப் போல கறுப்பு" என்று சொன்னார். அது ஒரு பெண்ணினுடைய அழகை வர்ணிப்பதா? சிகப்பெல்லாம் அழகா? ஆகவே, வர்ணித்தது அல்ல. அரிசியைப்பற்றி அவர் விளக்கம் சொல்கிறபோது, ஒரு மாநிலத்திலேயிருந்து வருகிற அரிசி, அந்த செந்நிறத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. இன்னொரு மாநிலத்து அரிசி, கறுப்பு நிறச் சாயலுடையதாக இருக்கிறது என்று ஒரு விளக்கத்திற்காகப் பேசியது; அது எந்தப் பெண் அதிகாரியையும் வர்ணித்ததும் அல்ல; வர்ணிக்கிற வயதிலேயும் அவர் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்கான எங்கள் கழக அரசின் நிதிநிலை அறிக்கையில், தமிழகத்தில் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் உள்ளன என்றுதான் குறிப்பிட்டோம். ஆனால், அந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம், அரசுக்குச் சொந்தமாக உள்ளது என்றோ, available–ஆக உள்ளது என்றோ, நாங்கள் எங்கேயும் சொல்லவில்லை. ஆனால், இதைச் சரியாகப் படிக்காமல், சரியாகப் புரிந்துகொள்ளாமல், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் அரசிடம் உள்ளதாக தி.மு.க. தலைவர் அவர்கள் தவறாக எண்ணிக்கொண்டால், அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும்? அதற்கு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்படிப் பொறுப்பாக முடியும்? எங்களைப் பார்த்து, 'நீங்கள் தவறான புள்ளிவிவரத்தைத் தந்துவிட்டீர்கள்' என்று கடிந்து

கொள்வது, ** குற்றச்சாட்டு அல்லவா? நாங்கள் எந்தத் தவறான புள்ளி விவரத்தையும் தரவில்லை.

'தரிசு நிலங்கள் ஏழைகளுக்கு இலவசமாக தலா 2 ஏக்கர்வீதம் வழங்கப்படும்' என்று தி.மு.க. தலைவர் அவர்கள், தேர்தல் வாக்குறுதியாக அறிவித்த நாள் முதலே, 'அரசிடம் உள்ளது 3.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம்தான்' என்றும், 'தமிழக அரசிடம் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இல்லை' என்றும், நான் தொடர்ந்து கூறி வந்திருக்கிறேன். தேர்தல் பிரச்சாரத்தின்போதும் இதைத் தெளிவுபடுத்தினேன். அதன்பின்னரும் இந்த விளக்கத்தை அளித்தேன். தேர்தலுக்குப் பிறகு, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும்கூட, இந்தச் சட்டப் பேரவையில், ஆளுநர் உரையுடன் தொடங்கிய முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் இதை விளக்கமாகக் கூறினேன். ஆனால், தி.மு.க.-வினர் தேர்தல் பிரச்சாரத்தின்போதும், அரசு அமைத்த பின்பும், இந்தச் சட்டப் பேரவையிலேயே, நான் மீண்டும் உண்மை நிலையை விளக்கிக் கூறிய பின்னரும்கூட, அதே நிறைவேற்ற முடியாத வாக்குறுதியை, மீண்டும் மீண்டும் கூறி வருகின்றனர். நிலமற்ற ஏழை எளிய குடும்பங்களுக்கு எப்படிப் பார்த்தாலும், தலா 2 ஏக்கர்வீதம், தரிசு நிலம் வழங்க முடியாது. ஏனென்றால், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் அரசிடம் இல்லை. அரசுக்குச் சொந்தமான சுமார் 3.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் போக, மீதம் உள்ள சுமார் 46.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள், தனியார் பட்டா நிலங்களாக, சிறு குறு விவசாயிகளுக்குச் சொந்தமாக உள்ளன.

பிற்பகல் 12-55

கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, இந்த உண்மையை இந்தப் பேரவையில் நான் போட்டு உடைத்த பின்னர், தி.மு.க. அரசு திடீரென்று தனது கொள்கையை மாற்றிக்கொண்டு, ஏழை விவசாயிகள் அரசைக் கேட்டுக்கொண்டால், அவர்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை மேம்படுத்தி, அரசு அவர்களிடமே திரும்பவும் ஒப்படைக்கும் என்று கூறத் தொடங்கியது. முதலில் அளித்த தேர்தல் வாக்குறுதி என்ன? நிலமற்ற ஏழைகளுக்குத் தலா 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்படும் என்றது தி.மு.க. ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான நிலத்தை அரசு மேம்படுத்தி, அவர்களிடமே திருப்பித் தந்தால், நிலமற்ற ஏழைகளுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் வழங்கியதாக ஆகிவிடுமா? இதில் இன்னும் பல கேள்விகளும், சந்தேகங்களும் எழுந்துள்ளன. சில விவசாயிகளிடம், 4 ஏக்கர் தரிசு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நிலம் உள்ளது. சிலரிடம் 5 ஏக்கர் உள்ளது. அரசு இப்படி அறிவித்திருப்பதால், இவர்கள் எல்லாம் பயந்துபோய் பீதியில் இருக்கிறார்கள். 4 ஏக்கர் தரிசு நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயியிடமிருந்து இந்த தி.மு.க. அரசு, அந்த 4 ஏக்கர் நிலத்தையும் எடுத்துக்கொண்டு மேம்படுத்தி, பின்னர் அந்த விவசாயிக்கு 2 ஏக்கர் நிலத்தைமட்டும் திருப்பித் தருமா? மீதம் உள்ள 2 ஏக்கர் நிலத்தை வேறு யாருக்காவது அரசு தாரை வார்த்துவிடுமா? இந்த விஷயத்தில் இந்த தி.மு.க. அரசுக்கு, ஒரு தெளிவான கொள்கையோ, செயல் திட்டமோ இல்லாததால் சொந்தமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிற கேள்வி, முன்னரே கேட்கப்பட்டு அதற்கு விடையும் அளிக்கப்பட்டுவிட்டது. யார் யாருடைய தரிசு நிலத்தை அரசு பக்குவப்படுத்தித் தர வேண்டும், பண்படுத்தித் தர வேண்டும் என்று கேட்கிறார்களோ, அவர்களுடைய தரிசு நிலத்தைப் பண்படுத்தி, அவர்களுக்கே தரப்படும். அந்த நிலம் வேறு யாருக்கும் மாற்றித் தரப்பட மாட்டாது; அரசும் எடுத்துக்கொள்ளாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது அரசாங்க நிலம் அல்ல என்ற காரணத்தால், தனிப்பட்டோர் நிலம் என்ற காரணத்தால், அவர்களுடைய விருப்ப அடிப்படையில், 'விரும்பிக் கேட்டால் பண்படுத்தித் தருவோம்; விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று அறிவித்திருக்கிறது இந்த அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனக்குள்ள சந்தேகத்தைப் பற்றி இங்கே கேட்கவில்லை. சிறு, குறு விவசாயிகளின் மனதில் எழுந்துள்ள சந்தேகத்தைப் பற்றித்தான் இங்கே குறிப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) என்னைப் பேசவிடுங்கள். என்னைப் பேசவிடுங்கள். அப்புறம் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இங்கே நான் குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். அம்மையார் தமக்குள்ள சந்தேகத்தைக் கேட்டேன் என்கிறார்கள். இப்போது அம்மையாருக்குள்ள சந்தேகமும் தெளிவாக நீங்கியிருக்கும் என்று நம்புகிறேன். விவசாயிகளுடைய சந்தேகம் ஏற்கெனவே நீங்கிப்போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சொந்தமாக சிறிய அளவில், நிலம் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகள் எல்லோரும் பயந்துபோய் இருக்கிறார்கள். எங்கே அவர்களிடம் இருந்து, அவர்களுக்குச் சொந்தமான நிலங்களை இந்த அரசு எங்கே பறித்துவிடுமோ என்று அந்த விவசாயிகள் அச்சத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் பலர் தங்களிடம் உள்ள நிலங்கள் மற்றும் கணக்கு வழக்குகளையே மாற்றி எழுதி மறைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, ஏழைகளுக்கு வழங்க 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் எங்கே இருக்கிறது என்று நான் கேட்டதற்கு, மிகவும் சாமர்த்தியமாகப் பதில் சொல்லுவதாக எண்ணிக்கொண்டு, இன்றைய முதல்வர், ஏழை விவசாயிகளிடம் இருக்கின்ற சொந்த தரிசு நிலங்களை அரசே எடுத்துக்கொண்டு மேம்படுத்தி, அவர்களுக்கே திருப்பி வழங்கும் என்று அறிவித்தார். முதல்வரின் இந்த அறிவிப்புபற்றிய செய்திகள் பத்திரிகைககளில் வந்ததும், சொந்தமாக நிலம் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகள் எங்கே தங்களுக்குச் சொந்தமான நிலங்கள் பறிபோய்விடுமோ என்று பீதி அடைந்துவிட்டனர். இதனால், பல இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்—Collector-கள்—விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட பயத்தைப் போக்கவும், பீதியைத் தணிக்கவும், அரும்பாடுபட்டு, விவசாயிகளைச் சமாதானப்படுத்தி விளக்கம் கூறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொல்வதை விவசாயிகள் நம்பத் தயாராக இல்லை. தொடர்ந்து இந்தச் சட்டப் பேரவையில், கடந்த வாரம் முழுவதும் முதல்வரும், பல்வேறு அமைச்சர்களும் திரும்பத் திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

"நிலமற்ற ஏழை எளியோருக்குத் தலா 2 ஏக்கர் நிலம், திட்டமிட்டபடி வழங்குவதில் அரசு உறுதி"—இது முரசொலியில் வந்த தலைப்புச் செய்தி, "சட்டப் பேரவையில் முதல்வர் கருணாநிதி அறிவிப்பு"– என்று திரும்பத் திரும்ப பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் செய்திகள் வந்தபடியே இருக்கின்றன. இந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒவ்வொரு நாளும், இதே அறிவிப்புச் செய்யப்படுவதால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள். என்னதான் தைரியம் சொன்னாலும், விவசாயிகள் அதை நம்ப மறுக்கின்றனர்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்ட நிலம், 4 இலட்சத்து 5 ஆயிரத்து 953 ஏக்கர். இதனால் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை, 1 இலட்சத்து 11 ஆயிரத்து 322 பேர். இதற்காக அரசு மேற்கொண்ட மொத்த செலவு 69 கோடி ரூபாய்.

பிற்பகல் 1-00

தரிசு நிலங்களை மேம்படுத்தி, விளைநிலங்களாக மாற்றுவது என்பது, instant coffee–ஐப் போல, உடனே செய்ய இயலாது. அது ஒரு நீண்டகாலத் தொடர் நடவடிக்கையாகும். ஆனால் இந்த தி.மு.க. அரசு, அதனுடைய நிதிநிலை அறிக்கையில், ஏதோ அலாவுதீனும் அற்புத விளக்கும் என்னும் கதையில் வருவதுபோல, ஏதோ மாயாஜாலம் செய்து காட்டுவதைப்போல, தரிசு நிலங்களை நொடிப்பொழுதில் மேம்படுத்தி, விளைநிலங்களாக மாற்றிவிடலாம் என்று, நம்மை நம்ப வைக்கப் பார்க்கின்றனர்.

தரிசு நிலங்களை மேம்படுத்த, நீர்வரத்துப் பகுதிகளை மேம்படுத்த வேண்டும். இதுதான் வழக்கமான நடைமுறை. அதோடு, தேவையான இடுபொருட்களையும், தொழில்நுட்பரீதியில் தேவையான உதவிகளையும் வழங்க வேண்டும். இந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக, பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களின்கீழ், தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு வந்தாலும், அவையெல்லாம் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

மிகப் பெரிய அளவில், தமிழ்நாட்டில் உள்ள 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களையும் மேம்படுத்தி, விளைநிலங்களாக மாற்ற வேண்டும் என்னும் நோக்கத்துடன்தான், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை எனது அரசு தொடங்கி மேற்கொண்டது. இன்னும் அதிகமாகச் சாதித்திருப்போம். ஆனால், இயற்கை கை கொடுக்கவில்லை. 2001–ல் இந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கிய பிறகு, 3 ஆண்டுக் காலம், வரலாறு காணாத கடுமையான வறட்சியால், தமிழ்நாடு தவித்தது. நல்ல விளைநிலங்கள்கூட, மழையின்றி, பாசன நீரின்றி வறண்டு போய்விட்டன. கிணறுகள் எல்லாம் வற்றிப் போய்விட்டன. குடிநீருக்கே மக்கள் அவதிப்பட்டார்கள். இத்தகைய வறட்சியால், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்காக, பல இலட்சக் கணக்கில், பல்வேறு பழமதரும மரக் கன்றுகளை வளர்த்து, தயாராக வைத்திருந்தும், தரிசு நிலங்களில் அவற்றை ஊன்ற முடியவில்லை. அதன்பிறகு, நான்காவது ஆண்டில்

சுனாமி தாக்கியது. ஐந்தாவது ஆண்டில் வரலாறு காணாத கனமழை வெள்ளத்தால், பெருமளவில் சேதம் ஏற்பட்டது. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதல்ல, அதல்ல. இதுவேறு. அதுவேறு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லை மீறிய பயங்கரவாதம் என்பதுபோல, இன்றைக்குச் சட்டமன்றத்திலே எல்லை மீறிய ஜனநாயகம் பூத்துக் குலுங்குகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசத்தொடங்கி, ஏறத்தாழ 2 மணி நேரத்திற்கு மேலாகிறது. அவையின் அலுவல் நேரம் ஒன்பதரை மணியிலிருந்து ஒன்றரை மணி வரைக்கும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, எஞ்சியிருக்கின்ற 28 நிமிடங்களுக்கும் அவரையே பேச அனுமதித்துவிட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நாளை அனுமதிக்கப் போகிறீர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் பேச ஆரம்பித்து கிட்டத்தட்ட 2 மணி நேரமாகிறது. You have taken two hours.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு இல்லாமல் என்னைப் பேசவிட்டால், 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகளுக்குக் காரணம் நீங்கள்தான். நீங்கள்தான் காரணம்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இல்லை, இல்லை. அப்படிச் சொன்னால் எப்படி? நீங்கள்தான் control பண்ண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணி நேரமாகப் பேசிக் கொண்டிருந்தால், என்ன அர்த்தம்? முடியுங்கள், சீக்கிரம்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இத்தனை இயற்கை இடர்பாடுகளையும் மீறி, தரிசு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவது என்றால், அதன் சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும். அரசிடமிருந்த, விளைச்சலுக்கு ஏற்ற, நல்ல புறம்போக்கு தரிசு நிலங்களையெல்லாம்,



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும், எனது ஆட்சிக் காலத்திலும், ஏற்கெனவே நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கிவிட்டோம். அரசிடம் எஞ்சியுள்ள சுமார் 3.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள், மாநிலம் முழுவதும் சமச்சீராக அனைத்து மாவட்டங்களிலும் இடம்பெறவில்லை. சில மாவட்டங்களில் மட்டுமே இந்தத் தரிசு நிலங்கள் இருக்கின்றன. இந்த 3.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பங்குபோட்டு, தலா 2 ஏக்கர் வீதம், நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க முற்பட்டால், அந்த நிலங்களைப் பெற்றுக்கொள்ளும் ஏழை விவசாயிகள், தாங்கள் குடியிருக்கும் ஊரைவிட்டு, பல நூறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்ல வேண்டியிருக்குமே? இதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமாகுமா? இதைப்பற்றியெல்லாம் யோசிக்காமல், நடைமுறைச் சிக்கல்களைப் பற்றியே சிந்திக்காமல், தி.மு.க. தலைவர், இன்றைய முதல்வர், நிலமற்ற ஏழைகளுக்குத் தலா இரண்டு ஏக்கர் நில வழங்கியே தீருவேன் என்கிறார். எப்படி வழங்குவீர்கள்? 46.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் ஏழை, சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமாக உள்ளன. அவர்கள் பரம ஏழைகளாக இருப்பதால்தான், அந்தத் தரிசு நிலங்களை மேம்படுத்தி, விளை நிலங்களாக மாற்ற, தேவையான செலவு செய்ய முடியவில்லை. அதனால்தான் contract farming என்ற புதிய திட்டத்தை, எனது அரசு அறிவித்து செயல்படுத்தத் தொடங்கியது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு, அந்த நிலங்களை எடுத்து தாரை வார்த்து, எங்கள் அரசு கொடுத்துவிடவில்லை. அந்தத் தரிசு நிலங்கள், அன்றும் இன்றும் சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமாகவே உள்ளன.

பிற்பகல் 1-05

TNPL போன்ற, இந்நாட்டு நிறுவனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும், அந்த நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டன. விவசாயிகளுடன், அந்த நிறுவனங்களே, தனித் தனியே ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி, அந்தத் தரிசு நிலங்களை மேம்படுத்தி, விளைநிலங்களாக மாற்ற, தேவையான தொழில்நுட்பரீதியிலான பணிகள், இடுபொருட்கள் வழங்குதல், ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை, அந்த நிறுவனங்கள் மேற்கொண்டன. அவர்கள் தந்த இடுபொருட்களைப் பெற்றுக்கொண்டு, நிலங்களுக்கு உரிமையாளர்களான விவசாயிகளே, அவரவர் நிலங்களில் பயிரைச் சாகுபடி செய்தனர். பின்னர் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட நிறுவனங்களே, விளைந்த பயிர்களுக்கு நல்ல விலை கொடுத்து, அந்த விவசாயிகளிடம் இருந்தே, பயிர்களைக் கொள்முதல் செய்தனர். இதனால் சம்பந்தப்பட்ட


V 21,3 / P06
P06. 5. 4
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2273823
சென்னை ... 600 008

எல்லோருக்கும் இலாபம், நன்மை. இதுதான் எனது அரசு கொண்டுவந்த விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இதில் என்ன தவறு இருக்கிறது? இதில் என்ன குற்றம் கண்டீர்கள்?

கடந்த 5 ஆண்டுகளில், எங்கள் ஆட்சிக் காலத்தில், பலமுறை இந்தச் சட்டமன்றப் பேரவையிலேயே இதே விளக்கத்தைத் திரும்பத் திரும்பக் கூறியுள்ளேன். ஆனால், அதைப்பற்றிப் புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்துகொள்ள விருப்பமில்லாமல், கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் ஆரம்பத்தில் என்ன குற்றச்சாட்டைக் கூறினார்களோ, இன்றுவரை அதே குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களோடு இப்போது-(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** முடிக்கப் போகிறேன். முடிக்கிறேனுங்க. (குறுக்கீடு) அவரை உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவாக முடியுங்கள். திரு. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. மணி உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** முடிக்கிறேன், முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி உட்காருங்கள். நீங்கள், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், நீங்க, you have taken more than two hours. It is not proper on your part.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் தவறான கருத்தை நம்பித்தான், தி.மு.க. தலைவர் ஏமாந்துவிட்டார். அதனால்தான், சரியாக ஆராய்ந்து பார்க்காமல், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள், அரசிடம் இருக்கிறதா, இல்லையா? இதை நிறைவேற்ற- (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களோ, பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்களோ அல்லது முற்போக்கு எண்ணம் படைத்த காங்கிரஸ் கட்சி நண்பர்களோ ஏமாற்றுகின்றவர்களும் அல்லர். அப்படி ஏமாற்ற யார்



முற்பட்டாலும், ஏமாறுகின்ற, ஏமாளியும் நானல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றை மாத்திரம் அம்மையார் அவர்களுக்கு மெத்த அன்போடு சொல்லிக்கொள்கின்றேன். இந்தத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரமல்ல; உங்களோடு அணி சேர்ந்திருக்கின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், இதே திட்டத்தை அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டிருக்கின்றார்கள். பக்கத்திலே இருக்கின்ற அண்ணனிடத்திலே கேட்கவேண்டிய கேள்வியை என்னிடத்திலே கேட்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்கலும், நையாண்டியும் கலந்த பேச்சைப் பேசக்கூடாது என்று தாங்களே தெரிவித்திருக்கிறீர்கள். இப்பொழுது நான் கேட்க விரும்புவது இதைத்தான். தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்தமாக 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இல்லை. ஆனால் ஏழைகளுக்கு இலவசமாக, தலா 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். என்ன செய்யப் போகிறீர்கள்? இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எவ்வளவு இருந்தாலும், தரிசு நிலம். அது 50 இலட்சம்தான் இருக்கவேண்டும், 10 இலட்சம்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. 2 ஏக்கர், ஒரு உள்ளங்கை அகலம் தரிசு நிலம் இருந்தாலும் அதை நான் பணக்காரனுக்குத் தரமாட்டேன். ஏழைக்குத்தான் தருவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, முதல்வரிடம் நான் கேட்க விரும்புவது இதைத்தான், தமிழகத்தில் அந்த அளவுக்குத் தரிசு நிலங்கள் இல்லை. ஆனால் ஏழைகளுக்குத் தலா 2 ஏக்கர் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். உங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவீர்களா அல்லது தோல்வியை ஒப்புக்கொண்டு, அமெரிக்காவிற்கு ஓடப்போகிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I think you have come to the last page. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கடைசி பக்கத்தைப் படிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) இரண்டு மூன்று பக்கம் வைத்திருக்கிறீர்கள். It will take so much time. எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் பேசி முடித்துக்கொள்கிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள்..

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முன்னாள் முதலமைச்சர், முதலமைச்சரைப் பார்த்து, இதை நிறைவேற்றப் போகிறீர்களா, அமெரிக்காவிற்கு ஓடப்போகிறீர்களா என்று கேட்கிறார். அமெரிக்காவிற்கு ஓடத் திட்டமிட்டவர்கள் யார் என்பது இந்த நாட்டிற்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் உரையாற்றுகிறார். நீங்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அமெரிக்காவிலே, சொத்து வாங்கியவர்களும், இலண்டனிலே சொத்து வாங்கியவர்களும் யார் என்பது நீதிமன்றத்திலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) எங்களுடைய தலைவரைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டைத் தவிர பக்கத்திலே இருக்கக்கூடிய எந்த மாநிலத்திலும் அவர் பெயரால், ஒரு inch நிலம்கூட இல்லை. எந்த நாட்டிற்கும் ஓட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். நீங்கள். I think you are having still 3 more pages or so.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** Not three. It is only one and a half pages. நான் முடிக்கிறேனுங்க. முடிவில் நான் கூற விரும்புவது இதுதான். இந்த நிதிநிலை அறிக்கை சேறு நிறைந்த புதைகுழியைப் போன்றது. புதைகுழியைப் பார்த்தால், அதில் சேறுதானே இருக்கிறது; அதில் இறங்கினால் ஆபத்து இல்லை என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால், அந்தச் சேற்றில் காலைவிட்டு இறங்கினால், quicksand எனப்படும் சகதி,



ஆளை அப்படியே உள்ளே இழுத்து விழுங்கிவிடும். அந்தப் புதைகுழி, அதாவது quagmire-குள் ஒருமுறை இறங்கினால், அதன் பின்னர் மீண்டு வெளியே வரவே முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எங்களுடைய முதல்வரைப் பார்த்து, அமெரிக்காவிற்கு ஓடிவிடுவார்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் எழுந்திருக்கிறார். எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கருத்தை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள், சீக்கிரம்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இறந்தவுடனே, ஐதராபாத்திற்குப் போகவேண்டும் என்று ஓடியவர் அவரேயொழிய, எங்களுடைய தலைவர் போக வேண்டுமென்று நினைக்கவில்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள். முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அந்தப் புதைகுழி, அதாவது quagmire-குள் (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அந்தப் புதைகுழி, அதாவது quagmire-குள் ஒருமுறை இறங்கினால், அதன் பின்னர், மீண்டு வெளியே வரவே முடியாது. தி.மு.க. அரசு சமர்ப்பித்துள்ள 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை அத்தகைய quagmire தான்; புதைகுழிதான். மாநிலத்தின் நிதிநிலை இந்தப் புதைகுழியில் தள்ளப்பட்டால், இனி மீண்டு வருவது கஷ்டம். திமுக-வின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டு, அதன் பின்னர், தி.மு.க. ஆட்சி அமைத்தபோது அந்தத் தேர்தல் அறிக்கைதான் உண்மையான கதாநாயகன்; Hero என்று அவர்களால் வர்ணிக்கப்பட்டது. ஆனால், அந்தத் தேர்தல் அறிக்கையே தற்போது நிதிநிலை அறிக்கையாக உருமாறியுள்ள நிலையில், நாம் காண்பது Hero-வையல்ல; கதாநாயகனை அல்ல; அதுவே இப்போது, வில்லனாக மாறிவிட்டது. தி.மு.க. அரசு சமர்ப்பித்துள்ள இந்த பட்ஜெட் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை அடியோடு நாசப்படுத்திவிடும் என்பதுமட்டுமல்ல; அதோடு தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையே பல ஆண்டுகளுக்குப் பின்னுக்குத் தள்ளிவிடும். இனி இந்த மாநிலத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு எனது உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே– (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்.

பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டு திருத்த



வாவு-செலவுத் திட்டத்தினை நான் இந்த அவைக்கு வழங்கி, கடந்த 5 நாட்களாகப் பேசி, இன்று 6–ஆவது நாள் பேசும் நிலையில், இதிலே 50 பேர் கலந்துகொண்டு இன்றைக்கு மூன்று பேர் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கலந்துகொண்டு ஏறத்தாழ 22 மணி நேரம் இந்த விவாதம் நடைபெற்றிருக்கின்றது. அதற்குமேல் இப்பொழுது நான் விடையளிப்பதற்காகப் பேசத் தலைப்பட்டு இருக்கிறேன். மணி 1-15. சாதாரணமாக ஒரு மணி நேரமாவது குறைந்தபட்சம் பதிலளிக்க வேண்டிய ஒரு கடமை எனக்கு இருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர், கடைசியாக அவர்கள் சொல்கிறபோது, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு புதைகுழி, சேறு போல தெரியும், இறங்கினால் உள்ளே இழுத்துவிடும். Quicksand என்று சொல்லி நாட்டு மக்களுக்கு அவர் எச்சரிக்கை கொடுப்பதுபோல தெரிவித்தார்கள். நாட்டு மக்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற அந்த செய்திகளையெல்லாம் தேர்தல் அறிக்கையிலே பார்த்து—

(எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதி, அமைதி. உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையிலே மதிக்கப்பட்டு ஏறத்தாழ 2 மணி நேரத்திற்கு மேல் உரையாற்றிவிட்டு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, அமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடு) (குறுக்கீடு) திரு. சாமி, இடையிலே குறுக்கிட்டுப் பேசக்கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள், (குறுக்கீடு) (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள் முதலிலே, உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இரண்டு மணி நேரம் உரையாற்றி இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், நான் பதில் சொல்ல எழுந்து, ஒரு நிமிடம் ஆவதற்குள்ளாக இந்த அவையைவிட்டு அவர் வெளியேறி இருக்கிறார். ஜனநாயக மரபு தெரிந்த யாராக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சார்ந்த எந்தத் தலைவராக இருந்தாலும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர், அதிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கு வழங்கிய நான், பதில் சொல்கிறபோது என்னுடைய

பதில் பொருத்தமாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காகவாவது, இந்த அவையிலே இருந்திருக்க வேண்டும். இந்த அவையிலே இல்லாமல்... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சண்முகம், சண்முகம், உட்காருங்கள். அக்ரி கிருஷ்ணமூர்த்தி, சாமி, சண்முகம், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைத்தியலிங்கம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள் முதலிலே. (குறுக்கீடு) சண்முகம், (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) சண்முகம், சண்முகம், கை நீட்டிப் பேசாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். நடவடிக்கை எடுப்பேன். சண்முகம், சண்முகம், கை நீட்டிப் பேசினீர்கள் என்றால் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோருமே உட்காருங்கள். (குறுக்கீடு) வைத்தியலிங்கம், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் ஒரு புதைகுழியைப் பற்றிச் சொன்னார். அந்தப் புதைகுழி, அதிலே கால் வைத்து இறங்குகிறவர்களை, சேறு என்று கருதிக்கொண்டு இறங்குகிறவர்களை உள்ளே இழுத்துவிடும். அதைப்போன்ற நிதிநிலை அறிக்கை இது என்றார். உள்ளபடி இந்த நிதிநிலை அறிக்கைதான் ஏற்கெனவே தேர்தல் அறிக்கையாக வெளியிடப்பட்டு, ஏறத்தாழ இந்தக் கருத்துகள் எல்லாம் வெளியிடப்பட்டு, பொதுமக்கள் அவற்றையெல்லாம் பார்த்து, பார்த்ததற்குப் பின்னர்தான் தி.மு.க.-விற்கு ஆதரவாக வாக்களித்து, இந்தக் கூட்டணிக்கு ஆதரவாக வாக்களித்து, இந்த அணி வெற்றிபெற்று வந்திருக்கிறது என்று சொன்னால், அது புதைகுழி அல்ல என்பதை மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று புதைகுழி என்று சொல்கிறவர்கள், அன்றைக்கு அப்படிப்பட்ட பிரசாரத்திலே ஈடுபட்டபோது, மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை, இது புதைகுழியாக இருந்தால், கனமாக உள்ளவர்களுக்குத்தான் அதிக ஆபத்தே தவிர, என்னைப் போன்றவர்களுக்கு ஆபத்து இல்லை என்பதை நான் அதிலிருந்து



வெளியிலே வந்து விடுவேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

இன்னும் ஒன்று; கடைசி நேரத்திலே அவர் பேசுகிறபோது, நாட்டிலே உள்ள பண்படுத்தப்படாத நிலம், அந்த நிலத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசினார்கள். தான் எழுதி வந்த அந்தக் கருத்துகளையே திரும்பத் திரும்பக்கூட படித்தார்கள். ஒரு முறை படித்தால்கூட குற்றம் இல்லை. ஆனால் திரும்பத் திரும்ப அந்தப் பக்கத்தைப் புரட்டிப் படித்து, தொடர்ந்து படித்தார்கள். அது அவருடைய வசதியைப் பொறுத்தது. ஆனால் எனக்கு நேரத்தைப் பற்றித்தான் கவலை. இருந்தாலும்கூட, நான் ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தரிசு நிலத்தைப் பற்றிய கருத்து, எவ்வளவு ஏக்கரா என்பதற்காக ஏற்பட்டதல்ல; எத்தனை பேருக்கு என்பதற்காக ஏற்பட்டதல்ல; முதலாளிகளுக்குக் கொடுப்பதா, பெரிய தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதா, சாதாரண ஏழைகளுக்குக் கொடுப்பதா என்ற கொள்கை அடிப்படையிலேதான் அது தொடங்கியது. அது எவ்வளவு ஏக்காராக இருந்தாலும், கிடைத்தாலும், அது ஏழைகளுக்குத் தலா 2 ஏக்கர் மட்டும் தரப்படும். ஏனென்றால் எல்லா ஏழைகளுக்கும் தரமுடியாது. எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறதோ, 2 ஏக்கர் நிலமாகப் பிரித்து, அது அந்தந்தப் பகுதியிலே உள்ள ஏழைகளுக்கு அந்த நிலத்திற்குத் தொடர்புடையவர்களுக்கு, பக்கத்திலே வாழ்கிற பரம ஏழைகளுக்குத் தரப்படும் என்பதுதான் கருத்து. இது ஒருவேளை தோற்றுப் போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; நாட்டிலேயே நிலம் இல்லாவிட்டால், நாங்கள் தோற்றுப் போனால் என்ன நஷ்டம்? நாட்டிலேயே அந்த நிலம் இல்லை என்று சொன்னால், நாங்கள் தோற்றுப் போவதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் நம்முடைய கொள்கை... (குறுக்கீடு) ஓடிப் போனதற்கப்புறம் நீங்கள் வேறேயா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். பேசிக் கொண்டிருக்கையில் எதற்கு நீங்கள் நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) நான் அனுமதித்தால்தான் point of order எல்லாம். உட்காருங்கள். நிதி அமைச்சர் அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடு) I am not permitting you. Please sit down. (குறுக்கீடு) நீங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, point of order இல்லை. (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அமைச்சர்... (குறுக்கீடுகள்) எழுப்புவதற்கு இடம் இல்லை என்று பேரவைத் தலைவர் அவர்கள் தாராளமாகத் தெரிவிக்கலாம். (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் இந்த விவாதத்திலே பேசவில்லை. ஆகவே, யார் வேண்டுமானாலும் எழுந்திருப்பதற்கு, குறுக்கிட அவையிலே இடம் கிடையாது. எழுந்து நிற்க வேண்டியவர் ஓடிப்போய்விட்டார். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) ஓடிப்போனால் சொல்லக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதலிலே நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** உங்களுடைய கட்சித் தலைவர் இருந்து குறுக்கிட்டுப் பேசினால் நியாயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பேசின உறுப்பினர் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தாராளமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிய உறுப்பினர் அவையிலே இல்லை என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள் எல்லோரும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எப்படிப் போகலாம்? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நான் சொல்லியதில் ஒன்றும் தப்பு இல்லையே?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே இல்லை. வெளியே போய் விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே மாற்றுக் கருத்து ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) right. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அனைத்து அண்ணா தி.மு.க. உறுப்பினர்களையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கிற அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள், சீக்கிரம். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எங்களுக்கு advice பண்ணவேண்டாம், போங்கள். (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்ற வரை அமைதியாக இருந்துவிட்டு, அவர்கள் போனவுடன், வெளியே போவதற்காக வேண்டி, இந்தமாதிரி பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். போங்கள், அவ்வளவு பேரையும் சீக்கிரம் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்த

பிறகு வெளியே போகும்போது, அவ்வளவு பேரையும் ரகளை பண்ணச் சொல்லிவிட்டுப் போனார்களா? போங்கள், அவ்வளவு பேரையும் சீக்கிரம் வெளியே அனுப்புங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் ஆணையிட்ட பிறகு, வெளியேற வேண்டிய நேரத்தில், சிலர் உள்ளே இருப்பது முறையல்ல. அவையினுடைய நேரத்தைக் கெடுப்பதாக அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவலர்கள், சீக்கிரம் வெளியேற்றுங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷம் போட்டபடி வெளியேறினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வராண்டாவில் இருக்கிற அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். லாபியிலே கோஷம் போடுபவர்களைச் சீக்கிரம் வெளியேற்றுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*(விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை நான் தொடருகின்றேன். நான், 'ஓடிவிட்டார்' என்று சொன்ன அந்தச் சொல்லுக்காக, எதிர்ப்புத் தெரிவித்து, அவையை நடத்தவிடாமல் செய்து, தங்களால் இப்போது வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். நான் அந்தச் சொல்லைப் புதிதாகச் சொல்லவில்லை. நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களை, எதிர்க்கட்சித் தலைவர், 'எப்போது அமெரிக்காவுக்கு ஓடப் போகிறீர்கள்?' என்று கேட்டார். 'அமெரிக்காவுக்கு ஓடப் போகிறீர்களா?' என்று கேட்கலாம் என்றால், அவையை விட்டு வெளியேறியவரை 'ஓடிவிட்டார்'



என்று நான் சொல்லக்கூடாது என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவேதான், நான் சொன்னேன். மற்றொன்று, இந்த அவையிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய கட்சித் தலைவர் நினைத்தபடி பேசுவதற்காக இந்த அவையிலே இருந்து, அவருக்குத் தேவையான முறையில் குரல் எழுப்பிவிட்டு, அவர் பேசி முடித்தவுடன், நான் பேசுவதற்கு இடையூறு செய்ய வேண்டுமென்று கருதி, பேசுகிறபோது குறுக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஜனநாயக மரபைக் காப்பாற்றாத ஒரு கட்சிதான், இன்றைய எதிர்க்கட்சி என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தரிசு நிலம் என்று அவர்கள் சொன்னதைப் பற்றி, ஒரு குறிப்பை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். *2001-2002* ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் *20* இலட்சம் ஹெக்டேர், அதாவது, 50 இலட்சம் ஏக்கர் என்று தெரிவித்து, அதை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவோம், அந்த நிலத்தை என்று திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தது. அவ்வாறே தற்போது நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அவர்கள் குறைவுபடுத்திப் பேசுகிறார்கள். நீங்கள் இதிலே இறுதியிலே தோல்வியடையப் போகிறீர்கள் என்கிறார்கள். ஏழைகளுக்கு நிலம் கொடுப்பது என்றால், அது எப்படியாவது தோல்வியடையவேண்டும் என்ற ஓர் ஆர்வத்தோடு எதிர்க்கட்சியினுடைய தலைவர் இங்கே பேசியிருக்கிறார்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** உள்ளபடியே.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"

என்றார் வள்ளுவர். நினைப்பதுதான் உயர்ந்த நோக்கத்தோடு இருக்க வேண்டுமே தவிர, அது நிறைவேற்றப்பட முடியாவிட்டால், அது நம்முடைய குற்றம் அல்ல. நல்லதை எண்ண வேண்டும்; நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்; தோற்றுப் போனால், அதற்காக அந்த உயர்ந்த நோக்கத்தைக் கைவிட்டுவிடக் கூடாது. எனவே, இதை நான் அடிப்படையிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அவையிலே 53 பேர் பேசியதில், 52 பேர் பேசுகின்றபோது பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. கருத்துகளைச் சொன்னார்கள். கருத்துகளை நாமும் தெரிவித்தோம். 52 பேர் பேசியதில் பிரச்சினை இல்லை. 53–ஆவதாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், தான் எழுதிக் கொண்டுவந்த அந்த உரையிலேயே ஆளுங்கட்சித் தலைவரைத் தாக்குவதற்கு, இழிவாகப் பேசுவதற்குப் பல சொற்களை எழுதிக் கொண்டுவந்து, அவற்றைத் திரும்பத் திரும்ப வேறு படித்தார்கள். இந்த அவையிலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் குறைவுபடுத்திப் பேசினார். ஏற்கெனவே அவர் முதலமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த என்னை, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களை, மணி அவர்களை, இன்னும் சொல்லப் போனால், ஒவ்வொரு கட்சித் தலைவரையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உள்பட அத்தனை பேரையும் அன்றைக்கு இருந்தவர்களை எல்லாம், அவர் குறைவுபடுத்தியே ஏளனம் செய்து பேசினார். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே வந்து அமர்ந்தும், இன்னும்கூட தாம் கையாண்ட முறை தவறு என்பதை உணராமல் இப்பொழுதும்கூட எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம், 'படித்துப் புரிந்துகொள்ளாமல்' ** என்று சொல்லக்கூடிய ஒரு மனப்பான்மை ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு இருக்கிறது என்று சொன்னால், நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன்; வேதனைப்படுகின்றேன். மறுப்பு எழுப்பலாம். மாறுபாடு இயற்கை. கருத்து ஒன்றுபடுவது முடியாத காரியம். ஆனால் அதற்காக கண்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது, மிகவும் வருந்தத்தக்கது என்பதை நான் இந்த அவையிலே முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அவையிலே பேசிய மற்ற தலைவர்கள் எல்லாம், குறிப்பாக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள், யசோதா அம்மையார் அவர்கள், அதற்கு முன்னாலே பேசிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அதேபோல பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள், அதேபோல இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள், ஆகியோர் எல்லாம் உரையாற்றுகின்றபோது உளமார இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி இருக்கின்றார்கள்.

வெளியிலே உள்ள தலைவர்களும்கூட இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பாராட்டு தெரிவித்திருக்கின்றார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தலைவர் திரு. எம். கிருஷ்ணசாமி அவர்கள், இந்த அறிக்கையைக் குறித்து, முதலமைச்சர் கலைஞர், ஏழையெளிய, நடுத்தர மக்கள்மீது வைத்துள்ள அக்கறையும், அவரது அரசியல் நுண்ணறிவும், தொலைநோக்குச் சிந்தனையும் இந்த பட்ஜெட்டில் பிரதிபலித்துள்ளது என்று பாராட்டினார். நான் இங்கே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுகின்றபோது, இந்த அவையிலே இடம்பெற்றிருக்கின்ற மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கண்ணப்பன் அவர்களையும், அதேபோல மற்றொரு கட்சித் தலைவராக இங்கே வீற்றிருக்கின்ற விஜயகாந்த் அவர்களையும் பெயர் குறிப்பிடத் தவறி இருக்கின்றேன். அதற்குக் காரணம் அவர்கள் முழுவதுமாக பாராட்டவில்லை என்பதால், அவர்கள் சில கருத்து மாற்றங்களை, தங்களுடைய கருத்து மாறுபாடுகளைத் தெரிவித்தார்கள் என்பதால், அந்தக் கருத்து மாறுபாடுகள் குறித்து நான் பேசக்கூடிய இடத்திலே அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு வைத்துள்ளேன். அதேபோல, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலேயும் இங்கே அதனுடைய கட்சித் தலைவர் பாதி பாராட்டினாலும், சில கருத்து வேறுபாடுகளையும் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் பேசியதையும் நான் மதிக்கின்றேன். பேசிய ஒவ்வொரு உறுப்பினருடைய கருத்தையும் நான் வரவேற்கின்றேன். அவர்கள் சொன்ன கருத்துகளைப்பற்றி, நிச்சயமாக அரசின் சார்பில் முழு அளவில் ஆய்வு செய்து, யார் யாருடைய கருத்துகளை ஏற்றுச் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் நிச்சயமாக ஏற்றுச் செயல்படுத்துவோம் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–35*

இறுதியாக பேசிய எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்துக்கு மாறாக, மாநில காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள், பொதுவாக தமிழகத்திலுள்ள விவசாயிகள் மற்றும் அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், மாணவர்கள், மீனவர்கள் போன்ற எல்லாத் தரப்பு மக்களும் ஏற்றம் பெறத்தக்கவகையில் அமைந்த, வரியில்லா பட்ஜெட் இது; பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர், இந்த நாட்டிலே தமிழ்நாட்டு மக்களால் பாராட்டப்படுகிற, வரவேற்கப்படுகிற ஒரு தலைவர்தான்.

அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் பேசுகிறபோது, தன்னுடைய அரசின் நிதிநிலை அறிக்கையாக, இந்தத் தேர்தல் அறிக்கை வெளிவரும் என்று தேர்தலின்போது சொன்னதை மெய்ப்பித்துக் காட்டி, சாதனையில் புரட்சி செய்திருக்கிறார் தமிழக முதல்வர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்று குறிப்பிட்டார்கள். மொத்தத்தில் வரிகள் இல்லை; வசதிகள் நிறைய இருக்கின்றன; குறையே சொல்ல முடியாத ஒரு நிதிநிலை அறிக்கை இது; இதிலேயும் குறை கண்டு சொல்வார்கள் என்றால், அவர்களது மனதில் குறை இருக்கிறது என்றுதான் தமிழக மக்கள் கருதுவார்கள் என்றும் பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள், விவசாயிகள் பயிர்க் கடன் இரத்து, வட்டி விகிதம் குறைப்பு, இளைஞர்களுக்கு நிவாரணம், அரசு ஊழியர், ஆசிரியர்கட்குச் சலுகைகள், அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கான அமைப்பு, பொது விநியோக முறையில் நடவடிக்கை போன்ற பல ஆக்கபூர்வமான அம்சங்களைக் கொண்டதால், இதனை C.P.M. மாநிலச் செயற்குழு வரவேற்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, அறிக்கை தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அவர்கள், சகல துறைகளின் வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தியிருப்பதும், நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் தமிழக அரசு நாட்டம் காட்டுவதை உறுதிப்படுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது; இது பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியதாகும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தமிழ் மாநிலத் தலைவர் காதர் மொய்தீன் அவர்கள், இந்த பட்ஜெட் புழுக்கம் நிறைந்த தமிழகத்திற்குப் பூங்காற்றாய் வந்திருக்கிறது; எல்லோருடைய இதயங்களிலும் நிறைவையும், மகிழ்வையும் தந்திருக்கிறது; இந்த நல்ல அரசு வாழ்க என்று வாழ்த்தியிருக்கிறார்.

இந்தச் சட்டமன்றத்திலே ஒரு கட்சியாக இடம்பெறாவிட்டாலும், வெளியிலே சமுதாய சீர்திருத்தப் பணியிலே தன்னை முழு அளவிலே ஒப்படைத்துக்கொண்டிருக்கிற திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையைப் பல கோணங்களிலே எண்ணிப் பார்த்து, மிகவும் மகிழ்ந்து, "கருத்தினிக்கும் திட்டங்களின் பட்டியலினைப் பார்த்து மலைத்தேன், இது ஒரு சுவைத் தேன் என்று பூரித்து, புளகாங்கிதம் கொள்ளச் செய்கிறது; இது போன்ற துணிவும், தெளிவும் மிக்க அறிவிப்புகளைச் செய்ய, கலைஞர் ஆட்சியைவிட்டால் திராவிட இனத்திற்கு, தமிழர்களுக்கு வேறு நாதி ஏது? நன்றி, நன்றி" என்று அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



இன்னும் பலர் தெரிவித்த கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், ஏடுகள் பாராட்டி எழுதிய கருத்துக்கள் இருந்தாலும், நேரம் கருதி அந்தப் பாராட்டை முழு அளவில் நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லாவிட்டாலும், எதிர்க்கட்சியைத் தவிர, எதிர்க்கட்சிக்குத் துணை போன இரண்டொரு கட்சிகளைத் தவிர, இந்த அறிக்கையை, இந்த நிதிநிலை அறிக்கையிலே வெளியிடப்பட்டுள்ள செய்திகளை மறுப்பவர்கள், கண்டிப்பவர்கள் யாரும் இல்லை என்பதையும், வரவேற்பவர்கள்தான் தமிழ்நாட்டினுடைய பெரும்பான்மை மக்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு–செலவுத் திட்டம், பொது மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதை நடுநிலையாளர்கள் பலரும் ஏடுகளிலே தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1–40

இந்த விவாதத்தில் நான் தெரிவிக்க விரும்பும் பதில் இது. தமிழ்நாட்டிலே மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வறட்சி நிலை. சுனாமிப் பேரலை அழிவு மற்றும் மழை வெள்ளப் பெருக்கு என இயற்கையின் கோரப் பிடியில் தமிழக விவசாயிகள் சிக்கித் தவிக்கையில், முந்தைய அரசால் கடந்த 5 ஆண்டுகளில், விவசாயிகள் அதனுடைய கோரப் பிடியிலே சிக்கி, அன்றாட உணவுக்குக்கூட தவித்துக்கொண்டு இருந்த காலகட்டத்தில், முந்தைய அரசு கடந்த 5 ஆண்டுகளில் மொத்தமாக, வட்டி தள்ளுபடி மற்றும் கடன் ஒத்திவைப்பு ஆகிய வகைகளில் ரூ.403.65 கோடி மட்டுமே நிவாரண கடமைகளுக்காகச் செலவிட்டுள்ளது. 5 ஆண்டுகளில் செலவிட்டது, செலவிடுவதாக அறிவித்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக செய்த செலவு ரூ.403 கோடிதான். ஆனால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுடைய கடன் சுமையை அறவே அகற்றவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ரூ.6,866 கோடி அளவிலான கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டது இந்த அரசுதான், கலைஞர் அரசுதான்.

தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயப் பெருமக்களும் வரவேற்றுள்ள இந்த நடவடிக்கையின் செயலாக்கத்தைப் பற்றிய சில ஐயப்பாடுகளை, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தனர். கூட்டுறவு அமைப்புகளிடமிருந்து தமிழக விவசாயிகள் பெற்றுள்ள மொத்த கூட்டுறவுக் கடன்களின் அளவு ரூ.5,416 கோடி ஆகும். இக்கடன்கள் முழுவதும் இரத்து செய்யப்பட்டு உள்ளதால்—in total—இக்கடன்கள் முழுவதும் இரத்து செய்யப்பட்டு உள்ளதால், கூட்டுறவு வங்கிகளுக்கு வரவேண்டிய கடன் நிலுவைத் தொகை எதுவும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவு வங்கிகளில் வைப்பீடு—Deposit செய்துள்ள வைப்பீடுதாரர்களுக்கு வைப்பீடுகள் முதிர்வு அடையும்போது, அந்தக் காலக்கட்டத்தில் உரிய வட்டியுடன் திருப்பி அளிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இந்த அரசு உரிய நேரத்தில், மேலும் நிதி உதவி செய்து, அந்த வைப்பீடுகளை அவர்கள் திரும்பப் பெறுவதற்கு உதவி செய்யும்.

நபார்டு வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள், உரிய காலத்தில் அரசால் திருப்பிச் செலுத்தப்படும். அது அவர்களோடு—நபார்டு வங்கியினுடைய நிர்வாகிகளோடு—தமிழக அரசினுடைய நிதித் துறைச் செயலாளர் ஒப்பந்தம் செய்துகொண்டு ஏற்கெனவே தள்ளுபடி செய்த கடனை, 4 ஆண்டுகளில் ஒப்படைப்பதாகவும், தொடர்ந்து அவர்கள் கடன்களை வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். முதற்கண் நபார்டு வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூ.1,668 கோடி அளவிலான கடன்களை, அரசே முழுவதும் ஏற்று, இந்த ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையான ரூ.435 கோடியைச் செலுத்தவும் நிதி ஒதுக்கி உள்ளது.

மேலும், நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வேளாண் கடன்கள் வழங்கப்படுவதைச் சந்தேகப்பட்டார்கள். அந்தக் கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யும்வகையிலும், தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களுக்கான இழப்பீடாகவும், ரூபாய் ஆயிரம் கோடி கூட்டுறவு வங்கி அமைப்புகளுக்கு உதவித் தொகையாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதுவரை சுமார் ரூபாய் 200 கோடி நிதி உதவி விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 1,435 கோடி போக, எஞ்சியுள்ள ரூபாய் 5,431 கோடிக்குத் தேவையான ஒதுக்கீடுகளும் வரும் ஆண்டுகளில் வட்டியுடன் செலுத்தப்படும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



எனவே, இந்த நடவடிக்கைகளினால், கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து செயல்படுவதும், கூட்டுறவு வங்கிகளின் வைப்பீடுதாரர்கள் நலனும், அங்கு பணிபுரிவோர் நலனும் காக்கப்படுவதுடன், விவசாயிகளுக்குத் தொடர்ந்து வேளாண் கடன்கள் வழங்கப்படுவதும் உறுதி செய்யப்படும். விவசாயம் தழைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த விவசாயத்திலே தொய்வு விழாமல் தொடர்ந்து விவசாயம் நடக்க வேண்டும் என்பதற்கு, தொடர்ந்து கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். கூட்டுறவுக் கடன் தள்ளுபடிக்கான அரசாணையைத் தொடர்ந்து, 75 நாட்களிலே 22,19,000 விவசாயிகளுக்கு ரூ.5,416 கோடி அளவிலான தொகைக்குக் கடன் தள்ளுபடிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இது ஒரு பெரும் சாதனை ஆகும். இதுவரையில், தமிழகத்திலே இந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இவ்வளவு பேருக்கு, இவ்வளவு பெரிய தொகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட அந்தக் கடனுக்கு, அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இந்தச் சான்றிதழ்கள் இருக்கின்ற காரணத்தால் மேலும் கடன் வாங்குவதற்கு, வேறு வங்கிகளிலே கடன் வாங்குவதாக இருந்தாலும், எனக்குக் கடன் பாக்கி இல்லை. ஆகவே, கடன் கொடுங்கள் என்று கேட்டு வாங்குவதற்கு இந்தச் சான்றிதழ்கள் நிச்சயமாக அவர்களுக்குப் பயன்படும். இது ஒரு பெரும் சாதனை. மேலும், நடப்பு சாகுபடி காலத்தில் இதுவரை மாநிலமெங்கும் கூட்டுறவு வங்கிகள்மூலமாக ரூ.195 கோடி அளவிற்கு விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சில நாட்களில் வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.195 கோடி. கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்பட்ட உயர் அளவுத் தொகை, 2005–2006–ல் ரூ.1,132 கோடி என்பது அந்தத் தொகையாக இருக்கிறபோது, இந்த நடப்பு ஆண்டில் அதைவிட அதிகமாக 1,235 கோடி ரூபாய் அளவு பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–45

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பைச் சிறப்பாக மேற்கொண்டுவரும் காவல் துறை மற்றும் அத்துறையின் நவீனமயமாக்கல் திட்டம் ஆகியவற்றிற்கு, இந்த அரசால் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சேகர்பாபு குறிப்பிட்டார். காவல் துறைக்கு, கலைஞர் அரசு எப்பொழுதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மட்டுமே காவலர் நலம் பேணும்வண்ணம்

போலீஸ் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. மேலும், இந்த முதல் வரவு–செலவுத் திட்டத்தில், காவல் துறைக்கான ஒதுக்கீடுகளை இந்த அரசு எந்த அளவிற்கு உயர்த்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தின்போது, 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1,339.33 கோடி ஆகும். இந்த ஒதுக்கீட்டை 22.9 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தி, ஏறத்தாழ 23 சதவிகிதம் உயர்த்தி, 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1,645.6 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதிலேயே இந்த அரசு, காவல் துறைக்கு எந்த அளவிற்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்வர். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை, கடந்த அரசின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட்த்தில், அந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 1,575.98; ரூ. 1,576 கோடியைவிட அதிகமே என்பதையும் இந்தத் தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விழைகின்றேன். மேலும், வேலை நியமனத் தடை காவல் துறைக்குப் பொருந்தாது என, ஏற்கெனவே அவர்களாலே அறிவிக்கப்பட்டும், கடந்த ஆட்சிக் காலத்தில், இத்துறையில், காலி இடங்கள் விடப்பட்டு இருப்பதையும், அந்த இடங்களை நிரப்ப இந்த அரசு ஆவன செய்துள்ளதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமன்றி, அரசின் பல்வேறு முக்கிய துறைகளுக்கான ஒதுக்கீடுகள், 2005–2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளைவிட எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். 2005–2006 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, ரூ. 1,652.24 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக, இந்த ஆண்டு ரூ.1,951.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1,652 கோடி ரூபாய் அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள்; இப்போது நாம் ரூ. 1,951 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். சென்ற ஆண்டு, நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ. 2,991 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ரூ. 3,583 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 2,991 கோடியிலிருந்து சுமார் 600 கோடி ரூபாய் அதிகமாக்கி, ரூ. 3,583 கோடி ரூபாயாக இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டில், ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ. 2,416 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு, இந்தத் துறைக்காக ரூ. 3,212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆட்சி போய், இந்த ஆட்சி வந்த காரணத்தால் 800 கோடி ரூபாய் அதிகம் ஊரக வளர்ச்சித் துறைக்கு. அதேபோல் 2005–2006 ஆம் ஆண்டில், சமூக நலத் துறைக்காக



ஒதுக்கப்பட்ட ரூ.558.18 கோடி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு, இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.967.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.558 கோடி, 967 கோடி ரூபாயாக் உயர்த்தப்பட்டது. கடந்த ஆண்டில், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு, ரூபாய் 1,490 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில், ரூபாய் 2,381 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 1,400 கோடி என்பது—1,500 கோடி என்பது—2,400 கோடி ரூபாயாக, 1½ மடங்குக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 2005–2006 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில், போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 269 கோடி என்ற அந்தத் தொகை, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 484 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–50

2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தை மிகக் குறைந்த சதவிகிதமே பற்றாக்குறை உள்ள வரவு–செலவுத் திட்டமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும், அரசின் நிதிப் பற்றாக்குறை உயர வாய்ப்புள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர் மறுமலர்ச்சி தி.மு.க.வைச் சார்ந்த கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். மக்கள் நலன் கருதி, இந்த அரசு அறிவித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதன் விளைவாக, 2005–2006 ஆம் ஆண்டில் ஏற்பட்டதைவிட இந்த ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறை சிறிது உயர்ந்துள்ளது.

ஏழை மக்களின் பசிப் பிணியைப் போக்கிட, ரூபாய் இரண்டுக்கு ஒரு கிலோ அரிசி வழங்குதல். ரூபாய் இரண்டுக்கு—ஒரு கிலோ அரிசி; 3–1/2 ரூபாய்க்கு ஏறத்தாழ 15 ஆண்டுக் காலமாக, 12 ஆண்டுகட்கு மேலாக வழங்கிவந்த அந்த அரிசி, இடைக்காலத்திலே, செல்வி ஜெயலலிதாவினுடைய ஆட்சிக் காலத்திலே 6 ரூபாய் வரையிலே உயர்த்துவதற்கு முயற்சிக்கப்பட்டு, பின்னர் எதிர்ப்பால் கைவிடப்பட்ட அந்த அரிசி, இந்த ஆண்டு மக்களுடைய நிலை கருதி, குறைந்த விலையில் அரிசி வழங்குவதுதான் ஏழைகளுடைய பசிப் பிணியைப் போக்கும் மருந்து என்று கருதி இரண்டு ரூபாய்க்கு—ஒரு கிலோ அரிசி வழங்குவதால், இதற்காக இந்தப் பற்றாக்குறையை, நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளலாம். இரண்டு ரூபாய்க்கு வழங்குகிற வகையிலே எவ்வளவு இழப்பு என்றால், ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 650, 700 கோடி ரூபாய், இதற்காக அதிக செலவு. மொத்தத்திலே அரிசி விலை காரணமாக 1,900 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசு இழப்பை ஏற்றுக்கொள்கிறது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி, நலிந்தோருக்கான உதவித் தொகைகளை அதிகப்படுத்தி வழங்குதல், மகப்பேறு உதவி எனச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும்வகையில், பல்வேறு நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்குச் சமூகப் பாதுகாப்புக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நல்ல அரசு என்பது, இன்னும் சொல்லப்போனால் Social Welfare என்பது, சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட நிறைவை ஏற்படுத்துகிறதோ, எந்தவகையிலே அந்த அடித்தட்டு மக்களுடைய குறைகளை மெல்ல மெல்ல போக்குகிறதோ அதுதான் சிறந்த சமுதாய நல அரசு, சமுதாய நல வளர்ச்சியிலே அக்கறை உள்ள அரசு. அந்த அடிப்படையில்தான் இவை எல்லாம் ஏற்றுச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நலிந்த பிரிவினரின் சமூகப் பாதுகாப்புக்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தது ரூபாய் 8,118 கோடி. அது இப்போது 39 சதவிகிதம் உயர்த்தப்பட்டு 2006-2007 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டத்தில், ரூபாய் 11,292 கோடியாக உயர்த்தி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு நலத் திட்டங்களுக்குக் கூடுதலாக ரூபாய் 3,175 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களால் வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கையைவிட நம்முடைய இந்த அறிக்கையின்மூலமாக, சமூக நலத்தின் அடிப்படையில் அதிகப்படுத்தப்பட்ட தொகை மட்டும் 3,175 கோடி ரூபாய். அப்படி ஒதுக்கப்பட்ட போதிலும், எந்தப் புதிய வரிகளும் விதிக்கப்படாமலேயே, அனைத்து நிதி ஆதாரங்களையும் திரட்டி, வருவாய்ப் பற்றாக்குறை, ரூபாய் 1,129 கோடி அளவிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை இவ்வளவு செலவுக்குப் பின்னரும் 1,129 கோடி ரூபாய். நிதிக் குழு தெரிவித்திருக்கிற ஒரு கட்டுப்பாடு, நிதிப் பற்றாக்குறை 3 விழுக்காட்டுக்கு மேல் அமையக்கூடாது என்பது. இப்போது 1,129 கோடி ரூபாய் என்பது 1,200 கோடியானால்தான் 3 விழுக்காடு ஆகும். அதைவிடக் குறைவாகத்தான் நமக்கு வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த வருவாய்ப் பற்றாக்குறையும் 12-வது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள 2006-2007 ஆம் ஆண்டிற்கான இலக்கைவிட, அவர்கள் குறித்த வரம்பைவிட குறைவானதே என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2008-2009 ஆம் ஆண்டில் எய்தப்பட வேண்டிய இலக்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 3 சதவிகிதத்திற்கு மேற்படாமல் நிதிப் பற்றாக்குறை இருக்கலாம் என்ற வரம்பினை மீறாத நிலையிலேயே, நிதிப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

இந்த வரவு-செலவுத் திட்டத்தில், திட்டச் செலவுகள் குறைந்துள்ளதாகவும், திட்டப் பணிகள் இல்லாத இனங்களுக்கான செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். 2006-2007 ஆம் ஆண்டிற்கான, ஆண்டு திட்ட மதிப்பீடு, இதுவரை முன் எப்போதும் இல்லாத உயர்ந்த அளவான ரூபாய் 12,500 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது; திட்டக் குழுவிடமிருந்து அந்த இசைவைப் பெற்றிருக்கிறோம். இது, 2005-2006 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டைவிட 37 சதவிகிதம் அதிகமாகும். மூன்றிலே ஒரு பங்கு அதிகமாகும் என்பதை நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இத்திட்டப் பணிகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஒதுக்கீடுகள், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முழுமையாகச் செய்யப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் — வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பெரும்பான்மையாக இருப்பார்கள் — வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது — மற்ற ஏழைகளுக்கும் — அவர்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. இதுகுறித்து ஏற்கெனவே வரவு-செலவுத் திட்ட உரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில், அங்கே வாழ்கின்ற குடும்பங்களுக்கு வழங்கப்படவேண்டிய 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்காக, ரூபாய் 9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்பின்னர், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் மேற்பார்வையில் open tender — திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையின்மூலம் மேலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கத் தீர்மானித்து, அதற்காக ரூபாய் 750 கோடி, இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டுகளில், மேலும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எஞ்சியுள்ள வண்ணத் தொலைக்காட்சிப்

பெட்டியில்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஏழை விவசாயிகள் ஆகியோருக்கான நலத் திட்டங்களுக்கு முந்தைய தி.மு.க. அரசால், 2001 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. பின்னர் வந்த அரசால், இந்த நல வாரியம் செயற்படாது முடக்கப்பட்டு, நாலரை ஆண்டுகளாக நலத் திட்ட உதவிகள் எதுவும் வழங்கப்படாத நிலையில், நடக்கவிருந்த தேர்தலை முன்னிட்டு, 2005 ஆவது ஆண்டில், அன்றைய முதலமைச்சரால், உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம், அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்கும் ஒரே நோக்கத்துடன் அப்போது அமைக்கப்பட்ட, விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை இப்பொழுது மீண்டும் சட்டப்பூர்வமாக இந்த அரசு அமைத்து, அவர்களின் நலனைக் காக்க உறுதிபூண்டிருக்கிறது. தற்போது சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, சட்டமுன்வடிவின் இணைப்பைப் படித்தாலே, கடந்தகால அரசால் .அறிவிக்கப்பட்ட சலுகைகளைவிட, அதிக சலுகைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் இந்த வாரியத்தின்மூலம் வழங்கப்பட உள்ளதைப் புரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள், இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, தொலைநோக்கு கொண்ட ஒரு விரிவான திட்டம் தேவை என்பதை வலியுறுத்திப் பேசினார். வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உதாரணமாக, 15–6–2006 அன்று, தமிழக முதலமைச்சர் அவர்கள், பெங்களூரில் உள்ள Wipro மற்றும் Infosys நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆலோசனை நடத்தியதன் அடிப்படையில், Infosys நிறுவனம், ரூபாய் 1,250 கோடி முதலீட்டில் 50 இலட்சம் சதுர அடிகள் கொண்ட மென்பொருள் நிறுவனத்தினை, தமிழகத்தில் தொடங்கி, அதற்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டி, 25,000 மென்பொருள் பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் அந்தத் திட்டம் குறித்த நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மென்பொருள் தொழிலில் பல்லாயிரக்கணக்கான பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைப் பணிகளில்



இலட்சக்கணக்கான பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பைத் தரவல்லதாக அது விளங்கும்.

பிற்பகல் 2-00

தகவல் தொழில்நுட்பத் துறைக்கு முன்னுரிமை அளிக்கும், ஒரு புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுக்கப்படும். A new policy — ஒரு புதிய தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கை— வகுக்கப்படும் என்று இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் இரண்டாவது 'டைடல்' பூங்காவும்—முதல் 'டைடல்' பூங்கா நம்முடைய ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டு, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அதைத் துவங்கி வைத்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்; அதைத் தொடர்ந்து, இப்பொழுது இரண்டாவது 'டைடல்' பூங்காவும் — கோவையிலும் 'டைடல்' போன்ற ஒரு அமைப்பை உருவாக்குவது குறித்தும், இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவ, தொழில் முனைவோர்களை ஈர்க்கும்வகையில், ஒரு பெரும் விற்பனை வரி விலக்குத் திட்டம், விற்பனை வரியை அந்தவகையிலே விலக்குவதுமூலமாக, ஒரு புதிய ஊக்கத்தை ஏற்படுத்துகிற திட்டம், இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல புதிய கணினி தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்படுவதுடன், இந்தப் புதிய தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போதுள்ள அரசின் அணுகுமுறை, தொழில்களை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும்வகையில் அமைந்துள்ளதால், மோட்டோரோலா போன்ற பெரும் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன. தொழில் முதலீட்டை ஈர்க்கவும், தொழில் துறையில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், ஒரு புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்பட உள்ளது. தொழில் கொள்கை புதியதாக உருவாக்கப்படவுள்ளது.

தமிழகத்தில் தொழில் பெருகுவதற்கு ஏதுவாகுமாறு, சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை ஒன்றினை, தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாகும்

பெருவழிச் சாலை ஒன்றினை உருவாக்கக் கருதப்பட்டுள்ளது. Highway --புதிய தொழில்கள் அமைவதற்கு ஏதுவான முறையில் அந்த Highway அமைக்கப்படும். இச்சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை, உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும் என்பதால், பெருமளவில் புதிய தொழிற்சாலைகள் அமையவும், அதன் காரணமாக வேலைவாய்ப்புகள் பெருகவும் நல்ல வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டில், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்வகையில், இப்பகுதிகளில் நிறுவப்படும் சிறு மற்றும் குறுந் தொழில்களுக்கான முதலீட்டு மானியச் சலுகை திட்டத்தை, முதலீட்டிலே மானியம் வழங்குவது. அந்த மானியச் சலுகை திட்டத்தை மீண்டும் செயல்படுத்த இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. இதனால் தொழில் துறையில் பின்தங்கியுள்ள பகுதிகளில் புதிய குறுந் தொழில்கள்மூலம், சிறு தொழில்கள் மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

படித்த இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்கும்வகையில், இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியார் துறை மட்டுமின்றி, அரசுத் துறைகளிலும், இளைஞர்களுக்குப் பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு உருவாகும்வகையில், இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகளாக அரசுப் பணிகளில் நேரடி நியமனம் தடை செய்யப்பட்டிருந்ததைக் கருத்தில்கொண்டு, அதனால் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள், மறுபடியும் வாய்ப்புப் பெறுமாறு அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அந்த வாய்ப்பைப் பெறுமாறு, அதிகபட்ச வயது வரம்பைத் தளர்த்தி, தற்போதுள்ள வயதை 5 ஆண்டுகள் வரை நீட்டிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், வேலை நியமனத் தடை ஆணை நீக்கப்பட்டு, பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக இருக்கும் பல்லாயிரக்கணக்கான பணியிடங்களை நிரப்ப, துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த அரசு, தனியார் துறைகளிலும், அரசுத் துறைகளிலும், வேலைவாய்ப்புகளைப் பெருமளவில் உருவாக்க, அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்பாக எடுத்து வருகிறது என்பதை நான் அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பிற்பகல் 2-05

நாடு முழுவதும் மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் அந்த வரி அறிமுகப்படுத்தப்படாத நிலை இருந்ததால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது என அரசு கூட்டிய கலந்தாய்வுக் கூட்டத்தில், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகச் சங்க அமைப்பின் பிரதிநிதிகளால், அவர்கள் சார்பில் முறையிடப்பட்டது. மேலும், இவ்வரி, மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்படாததால், புதிய தொழில் முனைவோர் தமிழ்நாட்டிற்கு வர விரும்பாமலும், ஏற்கெனவே இருக்கக்கூடிய பெருந் தொழில்கள், புதிய உற்பத்தி அலகுகளை ஏற்படுத்துகிறபோது, new productior unit ஏற்படுத்துகிறபோது, வேறு மாநிலங்களில் அமைக்கக்கூடிய நிலையும் இருந்து வந்தது. இதைக் கருத்தில்கொண்டு, வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் தொழில்கள், தமிழ்நாட்டில் அமையப்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்கப்பட்டு, இந்த மாநிலத்திலே வரும் ஜனவரி முதல் தேதி முதலாக அறிமுகப்படுத்தப் படவுள்ளது. இதனால் புதிய தொழில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதுடன், மூலப்பொருள்கள் மீதான செலுத்தப்பட்ட வரியை உற்பத்திப் பொருள்களின்மீது செலுத்தவேண்டிய வரியிலிருந்து கழித்துக்கொள்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், சந்தையில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறும் என்பதையும் இதனால் சந்தையில் போட்டியிடுவதற்கு ஏற்ப விலை குறையும் என்பதனையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சிறு வணிகர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு பத்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இந்த மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு, மதிப்புக் கூட்டு வரியின்கீழ் பதிவு செய்துகொண்டு, கணக்கு வைப்பதிலிருந்தும், வரிக் கணக்கு வைப்பதிலிருந்தும், வரி செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும். மதிப்புக் கூட்டு வரி இங்கே கொண்டு வருகிறபோது பெரிய தொழிலதிபர்கள், வணிகர்கள் மட்டும்தான் பயன்பெறுவார்கள் என்ற கருத்து, சிறு வணிகர்களுக்கு இருக்கிற காரணத்தால், அந்தச் சிறு வணிகர்களைக் கண்டறிய ஒரு வரம்பாக ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் வரையிலே, அதற்கு மிகாமல் வியாபாரம்—வணிகம்—செய்கிறவர்களுள் இந்த மாநிலத்திற்குள்ளேயே பொருள்களைக் கொடுத்து வாங்குபவர்களுக்கு, இந்த மதிப்புக் கூட்டு வரியிலேயிருந்து விலக்கு

அளிக்கப்படும் என்று அரசு சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிதிநிலை அறிக்கையில் சில விற்பனை வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன; நீக்கப்பட்டிருக்கின்றன. அது உள்ளபடியே தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். முழு விவரமும் தெரிவிக்க ஆரம்பித்தால், ஒருவேளை நீங்கள் உங்களைப் பட்டினிப் போட்டதாகக் கருதுவீர்கள். விற்பனை வரியைக் குறைத்து, உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க வழி செய்துவிட்டு, உங்களைப் பகல் உணவு இல்லாமல் நிறுத்தி வைப்பது முறையல்ல. ஆகவே நான் கூறக்கூடிய முழு விவரம், எல்லோருக்கும் தெரிந்த உண்மையே. தெரிந்த உண்மைகளை நான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய ஓர் அவசியம் இல்லை என்றும் நான் கருதுகிறேன். குறிப்பாக மட்டும் சொல்கிறேன், நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பருப்பு, பயறு வகைகள் மற்றும் எண்ணெய்மீதான விற்பனை வரி நீக்கத்தின் விளைவாக இந்தப் பொருட்களின் சந்தை விலை உடனடியாகக் குறையத் தொடங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக, உளுந்து, பச்சைப் பயறு, துவரம் பருப்பு போன்றவற்றின் விலை 4.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதம் வரை குறைந்துள்ளது. துவரம் பருப்பு கிலோ ஒன்று ரூபாய் 34 என்று இருந்தது, ரூபாய் 32 ஆகக் குறைந்துள்ளது. உளுந்து கிலோ ஒன்று ரூபாய் 50 என்று இருந்தது, ரூபாய் 48 ஆகக் குறைந்துள்ளது. மேலும், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், வனஸ்பதி போன்றவற்றின் விலைகள், இரண்டு சதவீதம் முதல் நான்கு சதவீதம் வரை குறைந்துள்ளது. கடலை எண்ணெய் லிட்டர் ஒன்று ரூபாய் 53–லிருந்து 52 ஆகக் குறைந்துள்ளது. தேங்காய் எண்ணெய் லிட்டர் ஒன்று, ரூபாய் 73–லிருந்து 70 ஆகக் குறைந்துள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. சேகர்பாபு, கடந்தகால ஆட்சியில் அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு, குறைவான எண்ணிக்கையிலே மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்க அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். கடந்த ஆட்சியில் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான ஆண்டு இலக்கு, கடந்த முதல் மூன்று ஆண்டுகளில் 25,000 ஆக மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடைபெறவிருந்த தேர்தலை உள்ளத்தில் கொண்டு, மனதில் கொண்டு 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் இரண்டு இலட்சம் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆண்டுக்கு, 25,000 வழக்கமாக உருவாக்குவது எங்கே?



அமைக்கப்படுவது எப்படி? ஒரே ஆண்டிலே இரண்டு இலட்சம் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதன்படி, ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 608 குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் உறுப்பினர் சேர்க்கையின்போது செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்தும், ஏற்கெனவே இந்த அவையிலேயே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார். ஒரு அமைப்பிலே இருப்பவர்கள் பலர் இன்னொரு அமைப்பிலும் இடம்பெற்று, பெயர்ப் பட்டியலை மாற்றி மாற்றி அமைத்து, குழுக்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கியிருக்கிறார்கள் என்று விவரமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அவர்கள் தெரிவித்ததுபோல, தவறான காரியங்கள் நடைபெற்று, முறைகேடுகள் நடைபெற்று, 1,16,000 குழுக்கள் என்று ஒரு புள்ளிவிவரம் காட்டப்படுகிறது. இந்த அரசு, மகளிர் சுய உதவிக் குழுக்களை, மகளிர் மேம்பாட்டை உயர்த்துவதற்கான ஒரே நோக்கத்துடன் அமைக்கும் என்பதையும், மகளிருடைய முன்னேற்றத்திற்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்படும் என்பதையும், சுய உதவிக் குழுக்கள் செம்மையாகச் செயல்பட அனைத்து அரசு உதவிகளையும் நல்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், சிமென்ட், ஜல்லி போன்ற கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும், எதிர்க்கட்சி உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். மணல் விலையைக் கட்டுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) பொதுப் பணித் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, புதிய மணல் குவாரிகளைக் கண்டறிவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(2) குவாரிகளில் மூன்று shift-களில் மணல் எடுக்கவும், அதிக இயந்திரங்களை ஈடுபடுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(3) கள்ளத்தனமாக மணல் எடுப்பதைத் தடுப்பதற்காக இரவு நேரங்களில் காவலருடைய ரோந்துப் பணிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

(4) 5–7–2006 அன்று அவசரச் சட்டத்தின்மூலம் கள்ளத்தனமாக மணல் அள்ளுவோரை, அதை விற்றுப் பணம் சம்பாதிப்பவர்களைக் குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்ய உரிய சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கருங்கல் ஜல்லி, செங்கல் ஆகியவற்றின் விலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தொழில் துறை செயலர் அவர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையருடன் முதற்கட்டமாக திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் மற்றும் ஜல்லி உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி, இவற்றின் விலையை உடனடியாகக் குறைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதன்படி, 17-7-2006 முதல் கட்டுக்கல் 20 m.m. மற்றும் 40 m.m. ஜல்லி ஆகியவற்றின் விலையைக் குறைத்து விற்க ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால், இவற்றின் விலை குறைந்துள்ளது. இதுபோலவே மாவட்ட ஆட்சியர்கள்மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கோவை, சேலம், நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும் இவற்றினுடைய விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

சிமென்டைப் பொறுத்தவரையில், இந்தப் பொருள், விலைக் கட்டுப்பாடு வரையறைக்கு உட்பட்டது அல்ல என்பதால், மாநில அரசு சிமென்டின் விற்பனை விலையை நிர்ணயம் செய்வதில்லை. மாநில அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. உற்பத்தி மற்றும் தேவையைப்பொறுத்து, வெளிச் சந்தை நிலவரப்படி, சிமென்டின் விலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது ஏறத்தாழ இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களிலே உள்ள தேவைகள் காரணமாக விலை ஏற்றம், விலை குறைவு, இவை அவ்வப்போது அமைகின்றன. நமது நாட்டின் கட்டுமானத் துறையில், சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள உயர் வளர்ச்சியின் காரணமாக, இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள உயர் வளர்ச்சியின் காரணமாக, சிமென்டிற்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் நாடெங்கிலும் சிமென்ட் விலை உயர்ந்துள்ளது. உதாரணமாக, சராசரி விலையாக, டெல்லியில் ரூபாய் 205-க்கும், மும்பையில் ரூபாய் 240-க்கும் பெங்களூரில் ரூபாய் 225-க்கும் திருவனந்தபுரத்தில் ரூபாய் 220-க்கும் என்ற அந்த அளவில், அந்த விலையில், சிமென்ட் விற்கப்படுகிறது. சென்னையில் சிமென்ட் விலை சராசரியாக ரூபாய் 200 என்ற அளவில் உள்ளது. எனவே, மற்ற நகரங்களை ஒப்பிடும்போது சென்னையில் சிமென்டின் விலை அதிகமாக இல்லை என்பதை எல்லோரும் ஏற்பார்கள்.

இந்தியக் கடல் எல்லைப் பகுதியில், இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்தும், கச்சத் தீவு பகுதியில் அவர்கள் மீன்பிடிக்க வசதியான மீன்பிடி உரிமைகள் குறித்தும், இவ்வரசு உரிய நடவடிக்கை எடுக்கும். கச்சத் தீவு பகுதியில் இந்திய மீனவர்கள்



மீன்பிடித்தல், வலைகளைக் காய வைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள இலங்கை அரசிடம் தொடர்பு கொண்டு, கொள்கை முடிவு எடுக்க மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்ளும்; வலியுறுத்தும். இந்திய மீனவர்கள், கடல் எல்லையைத் தாண்டிச் செனறால், நம்முடைய இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றால், அவர்களைக் கைது செய்தாலும்கூட, உடனடியாக விடுவித்து, எந்தவிதமான கொடுமைக்கும் ஆளாக்காமல், சுட்டுத் தள்ளுவது போன்ற கொடுமைக்கு ஆளாக்காமல் இருக்க, இருதரப்பு ஒப்பந்தம் ஏற்பட, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஒப்பந்தம் ஏற்பட வழிவகை செய்ய இந்த அரசு மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தும்.

பிற்பகல் 2-15

நலிந்த பிரிவினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி இங்கு சில உறுப்பினர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நலிந்த, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு நிலம் கையகப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான திட்டம், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இடையில், கடந்த ஆட்சியில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்த அந்த நிலையை இப்போது மாற்றி, மீண்டும் செயல்படுத்த, தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக அரசாங்கம் ஆர்ஜிதம் செய்வதற்காக போதிய நிதி ஒதுக்கீடுகள் இந்த வரவு—செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளன.

தென்னை மற்றும் பனை மரங்கள் சார்ந்த மரம் ஏறும் தொழிலாளர்கள் சந்தித்து வரும் இன்னல்களைக் குறிப்பிட்டு, கள் இறக்கி விற்க அனுமதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன் அவர்கள் இங்கே கோரிக்கை விடுத்தார்கள். அத்தகைய அனுமதியை வழங்க இயலாது என்றாலும், தென்னை மற்றும் பனைத் தொழிலாளர்கள் நலனைக் காப்பாற்றுவதற்காக பனைத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல உதவிகள் அவர்களுக்கு வழங்குவது மேலும் செம்மையாக்கப்பட்டு, இந்தத் தொழிலாளர்களுடைய நலன்—அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய நலன்—காக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்பதை இந்த அவைக்கு நான் அரசு சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் வேறு பல செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிக்கலாம், தெரிவிக்கும் ஆர்வத்தோடுதான் வந்தேன். தெரிவிக்கிற வாய்ப்பு

குறைந்திருக்கிறது, நேரம் இல்லாத காரணத்தால். என்னுடைய உரையைச் சுருக்கமாக நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். உள்ளபடியே இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றிய அத்தனை பேரும் கருத்துகளோடு பேசினார்கள். ஏறத்தாழ 52 மணி நேரம், பஜனை இல்லாமல், இந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக பல்வேறு பிரச்சினைகள் இந்த அவையில் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

ஜனநாயகம் தழைக்கும் வழி என்று சொன்னாலே அது கருத்துப் பரிமாற்றம்தான். அந்தக் கருத்துப் பரிமாற்றம் முழு அளவில் நடைபெற வேண்டும் என்பது கலைஞருடைய நீண்ட நாள் விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே வந்த நாங்கள், அதை என்றும் வரவேற்போம். எல்லோரும் பேசுங்கள், என்றும் உங்களுடைய பேச்சு தடைப்படாமல் தொடரட்டும் நமது எண்ணங்கள் கலந்து பரிமாறப்படட்டும். அதன் விளைவாக நாடு தழைக்கட்டும் என்று எண்ணுகிறவர்கள் நாங்கள். அந்தவகையிலே இந்த முறை நம்முடைய சட்டமன்றத்திலே 52 மணி நேரம் விவாதம் நடைபெற்றது என்றால் — கடந்தகால நடைமுறையில் அது சாதாரணமானது அல்ல — அது ஒரு பெரிய வெற்றி, பேரவைத் தலைவருடைய வெற்றி என்று நான் அவரைப் பாராட்டிக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய (குறுக்கீடு) — அதை முதலிலேயே சொல்லிவிட்டேன் — வழிகாட்டுதலின்கீழ் தயாரிக்கப்பட்ட இந்த வரவு—செலவுத் திட்டம், ‘சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்’ என்னும் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதையும் செய்வோம், சொன்னதற்கு மேலும் செய்வோம் என்பது இன்றைய நிலை. இருந்தாலும் சொன்னதைச் செய்வோம், செய்வதைத் சொல்வோம் என்ற இந்த ஆட்சியின் சூளுரையை மெய்ப்பித்துள்ளது என்பதை நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்வதுடன், நடைபெற்ற பொது விவாதத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய பல்வேறு அரிய கருத்துகள், வேண்டுகோள்கள் குறித்து இந்த அரசு ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுத்து அதைச் செயலாற்றும் என்று நான் இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இந்த வரவு—செலவுத் திட்டத்தை இம்மாமன்றத்தின்முன் வைக்க எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, பேரவைத் தலைவர் அவர்கள் நான் உரையாற்றுவதற்கு அனுமதித்து காலத்தையும் நீட்டித்துத் தருவதற்கு முன்வந்ததற்காக அவருக்கும் நன்றி தெரிவித்து உங்களை எல்லாம் இப்போது நான் விடுதலை செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இரண்டே இரண்டு விளக்கங்களை நான் நிதியமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். ஒன்று மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் கல் குவாரிகள் உருவாக்கப்பட்டு பல காலங்களாக நடந்து வந்து, தற்போது தடைபட்டிருப்பதற்கு விடிவுகாலம் கிடைக்குமா? இரண்டாவது, கூட்டுறவுத் துறையின்மூலமாக 7,000 கோடி ரூபாய் வரையிலும் இரத்து செய்யப்பட்டிருந்தும்கூட, இதுவரையிலும் கொடுக்கப்படாமல் இருக்கிற அந்த நிலை குறித்து நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே கருத்து தெரிவிக்காதது குறித்து அதனுடைய விவரத்தை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அம்மையார் அவர்கள் நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். அவர் சொன்ன முதல் பிரச்சினை, அரசு நிச்சயமாக ஆராய்ந்து தகுந்த நடவடிக்கையை, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை எடுக்கும். எவ்வளவு நிலத்தை மக்கள் பயன்படுத்துவதற்குக் கொண்டுவர முடியுமோ, அந்த முறையிலே கொண்டுவருவதற்கு, குடியிருப்பதற்கான நிலமாக இருந்தாலும், அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் இங்கே படித்த அறிக்கையின்படி, நகர்ப் பகுதியிலேயெல்லாம் ஏற்கெனவே குடியிருப்புகள் உள்ள இடங்களைக்கூட அவர்களுக்குச் சொந்தமில்லாமல் இருக்கும் மனைகளை அவர்களுக்குச் சொந்தமாக்குவதற்கு, பட்டா வழங்குவதற்கு, எப்படிப்பட்ட முறையைக்

கையாளுவோம் என்று இங்கே அறிவித்திருக்கிறார். அதேபோன்று கிராமப் பகுதியிலேயும் விவரமறிந்து செய்யப்படும்.

இன்னொன்று. கொடுக்கப்பட்ட அந்தக் கடன் தொகை இன்னும் போய்ச்சேரவில்லை என்று கூறினார். இதற்குக் கடன் தொகையை அனுப்புவதில்லை. கொடுத்தக் கடனை இல்லையென்று இரத்து செய்து இரசீது கொடுப்பது. ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய்க்குமேல் அதற்கான இரசீதுகள் கொடுக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ளவர்களுக்கும், மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் செயல்படுத்துவார். மாண்புமிகு யசோதா அம்மையார், 'எங்களுக்குச் சான்றிதழ்கள் கிடைக்கவில்லை' என்கிறார். அவர் கடன் வாங்கவில்லையென்று கருதுகிறேன். ஒருவேளை கடன் வாங்கியிருந்தால் கிடைத்திருக்கும். அவர் குறிப்பிட்ட பகுதியிலேயும் விரைவிலே சான்றிதழ்கள் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த முறையில் ஆணையிடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-8-2006) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

– ஏதுமில்லை –

D
211,31 '8 06
806-5-4
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.